www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**பஞ்சம் என்ற பாணம்!**

போரென்று சொல்லிப் புலிவேட்டை என்று சொல்லி
ஊரெல்லாம் செல்லடித்து உழுதபின்னும் - ஓரிருவர்
எஞ்சி இருநதால் இழுக்கன்றோ? ஏவி விடு
பஞ்சத்தை அவர்வயிற்றிற் பாய!

-ஈழமோகம்

இதழ் 83~ ஒக்.19 ~ நவ.01, 1995 விலை 7.00

## யாழ் குடா:
# பட்டினிச் சாவை நோக்கி...



யாழ்குடாநாட்டில் என்றுமில்லாதவாறு உணவுப் பஞ்சம் தலைதூக்கியுள்ளது. அரிசி, மா, சீனி போன்ற மிக அத்தியாவசியமான பொருட்கள் முற்றாகப் பாவனைக்கு இல்லையென யாழ் மாவட்ட அரச அதிபர் கே.பொன்னம்பலம் அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் அவர் கோரியிருக்கிறார். ஆனால் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரோ இதனை மறுத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குக் கடுமையான பஞ்சம் நிலவுவதாக வெளியான செய்தியை மறுத்த அவர் யாழ்ப்பாணத்தில் அரச எதிர்ப்பு போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இடம் பெறுகிற போதும் அரசாங்கம் கடந்த ஜனவரி முதல் செப்டெம்பர் முதலாம் திகதி வரை 785 மில்லியன் ரூபா பெறுமதியான ஐம்பதாயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் அனுப்பி வைத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக சரிநிகர் யாழ் அரச அதிபருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டது. யாழ் மாவட்டத்தில் உணவுப் பொருட்களுக்குக் கடும் பஞ்சம் நிலவுவதாக நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அதனை மறுத்துள்ளாரே என்று கேட்டதற்கு "மாதாந்தம் ஒன்பதாயிரம் மெட்ரிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் யாழ் குடாநாட்டுக்குத் தேவை. இவற்றுள் அரிசி, மா, சீனி, பருப்பு என்பன மட்டுமே அடங்கும். எண்ணெய் வகைகளோ இதர பொருட்களோ இவற்றுள் அடங்காது. ஆனால் அரிசி, மா, சீனி, பருப்புடன், எண்ணெய் உட்பட இதர பொருட்களையும் சேர்த்தே ஜனவரியிலிருந்து செப்டெம்பர் வரை 50 ஆயிரம் மெட்ரிக் தொன் பொருட்கள் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளன.

ஜூன் மாதம் ஓரளவு சமாளிக்கக் கூடியதாக இருந்தது. பின்னர் அரசாங்கத்திற்கும், செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் இடையே எழுந்த பிணக்கைத் தொடர்ந்து உணவுப் பொருட்களின் வருகை ஸ்தம்பிதமடைந்தது.

இரண்டாவது, ஜூலைக்கு முன்னர் 44ஆயிரம் குடும்பங்களே இடம்பெயர்ந்திருந்தனர். படையினரின் ஒப்பிரேசன் லீப் உடன் இடம் பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை 83ஆயிரமாக அதிகரித்தது. இதனையும் கவனத்திற் கொள்ள வேண்டும். அப்படியானால் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் யாழ் மாவட்டத்திற்குப் போதுமான உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தவறான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளாரா? இது சரிநிகரின் கேள்வி.

அவருடைய அறிக்கை சரியா தவறா என நான் கூறுவதை விட என்னென்ன பொருட்கள் எவ்வளவு அனுப்பப்பட்டிருக்கின்றன என்று அவரிடம் கேளுங்கள். அதனை வெளியிடச் சொல்லுங்கள்.

அரசாங்கத்தின் தடை செய்யப்பட்ட பொருட்களுக்கான பட்டியலிலில்லாத தேங்காய் எண்ணெய், சவர்க்காரம், ரயர், ரியூப் போன்ற பொருட்களையே வடக்கே கொண்டு செல்ல கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி வழங்குவதில்லை.

ஏற்கனவே படையினரின் நடவடிக்கையால் பலாலி முதல் உரும்பிராய் வரையான பயிர் செய் நிலங்கள் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதால் பயிர்ச் செய்கை நடைபெறவில்லை.

→ 2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**"தற்போதைய அரசியலமைப்பில் கருத்து வெளியிடும் உரிமையைப்பற்றி கூறப்பட்டிருக்கிறபோதும் அதனை உறுதிப்படுத்தும் வகையில் சகல விதிகளும் அதற்கு ஏற்ற வகையில் இருக்கச் செய்வதற்காக அரசியலமைப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்வதே எங்கள் நோக்கம். அதன்படி வெளியீட்டுச் சுதந்திர அரசின் நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை அறியும் உரிமையும் உறுதிப்படுத்தப்படும்"**

மில்லாத அளவு அரச ஒடுக்குமுறைக்குள்ளாகியிருக்கிறது என அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவிக்குமளவிற்கு நிலைமை வளர்ந்த பின்னரேயே இவ்வறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. பொதுமக்களின் கருத்து வெளியிடும், கருத்து அறியும் சுதந்திரத்திற்கு "தணிக்கை" எனும் விலங்கு பூட்டப்பட்ட நிலையிலேயே இவ்வறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. எனவே அரசின் இவ்வறிக்கை சர்வதேச சமூகத்தின் வாயை அடைப்பதற்கான முயற்சியே ஒழிய வில்லை. "Not Approved" என கையெழுத்திட்டு தரப்பட்டிருந்தன. அவற்றில் சிங்கள பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்த செய்திகளின் மொழி பெயர்ப்புகள் பலவும் அடங்கும். சிங்களப் பத்திரிகைக்கு அனுமதிக்கப்பட்டவை தமிழ்ப் பத்திரிகளுக்குத் தடை. ஒருவேளை சிங்கள வாசகர்கள் அறியும் செய்திகளை தமிழ் வாசகர்கள் அறியக் கூடாது என்று அரசு கருதுகிறதோ என்னவோ?

# தமிழுக்கென்றொரு நீதி!



இது அண்மையில் தொடர்புத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க அவர்களால் அரசின் தொடர்புசாதன கொள்கை பற்றி அமைச்சரவையில் வெளியிட்ட அறிக்கையின் ஒரு பகுதி.

தற்போதைய சந்திரிகா அரசு பதவிக்கு வருமுன் வெளியிட்டிருந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தொடர்புசாதன சுதந்திரம் பற்றி குறிப்பிட்டிருந்த வாக்குறுதியின் நிமித்தமே மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அவ்வாக்குறுதி வழங்கப்பட்டு ஒரு வருடமும் கழிந்த பின்னரேயே இவ்வறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒரு வருடத்திற்குள் தொடர்பு சாதன துறை; வரலாற்றில் என்று வேறொன்றுமல்ல என்பதை எவரும் அறிவர்.

பதவிக்கு வந்தவுடன் அவசர காலசட்டத்தை நீக்கிவிடுவோம் எனக்கூறி பதவியமர்ந்த அதே பொ.ஐ.மு. அரசாங்கம் தான் அதே சட்டத்தைப் பயன்படுத்தி 'யுத்த செய்தி தணிக்கை'யை கொண்டு வந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதைச் செய்து விட்டுதான் கருத்து சுதந்திரத்திற்கு தடையாக இருக்கின்ற சட்டங்களை திருத்துவதாக கூறி இவ்வறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

சென்ற சரிநிகர் இதழில் வெளியிடப்படவிருந்த பல கட்டுரைகள், செய்திகள் என்பவற்றை வெளியிடுவதற்கு அனுமதிக்கப்படாத தணிக்கையைப் பற்றிய நிலைமைகளை விளக்கி எழுதப்பட்டிருந்த கட்டுரை நாசமறுப்பானின் பத்தி உட்பட இன்னும் சில ஆக்கங்கள் மட்டுமே பெரும்பாலான பகுதிகள் வெட்டப்பட்டு ஒரு சில பந்திகளை மாத்திரம் வெளியிட அனுமதித்திருந்தனர். இத்தனைக்கும் அரசின் 'யுத்த செய்தி தணிக்கை' விதிக்கு உட்படாத பல விபரங்கள் கூட தணிக்கைக்கு இரையாகின.

**என்.எஸ்.குமரன்**

தமிழ்ப் பத்திரிகைகள்; விசேடமாக அரசின் கத்தரிக்கோல்களுக்கு இரையாகின்றன என்பதை விளங்கிக் கொண்டதுமே, எமக்கு ஒரு விசித்திர யோசனை தோன்றியது. வசதியாக சிங்கள மாற்றுப் பத்திரிகையான 'ஹிரு' பத்திரிகையின் ஆசிரியரும் சந்தித்தார். எமது பத்திரிகையில் தடை செய்யப்பட்ட கட்டுரைகளை ஹிரு பத்திரிகை சிங்களத்தில் மொழி பெயர்த்து தமது பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக (அவர்களது கட்டுரையைப் போல்) தணிக்கை அதிகாரிக்கு அனுப்பியது. என்ன ஆச்சரியம்! நாம் எதிர்பார்த்தபடியே தணிக்கை அதிகாரியின் கத்தரிக்கோலுக்கு கொஞ்சமும் இரையாகாத அக்கட்டுரை "Approved" சீல் அடிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

ஹிரு பத்திரிகை நண்பர்களது சந்தேகம் தீர்ந்தது. இச்சம்பவத்தை முன் பக்கச் செய்தியாக வெளியிட்டு அப்பத்திரிகை அரசை அம்பலப்படுத்தியது. இச்சம்பவத்தை கடுமையாக கண்டித்து அவர்கள் பின்வருமாறு எழுதினார்கள்:

"இச்செயலின் அர்த்தம் சிங்கள மொழி பேசும் மக்களுக்கு இக்கட்டுரை தடையில்லை என்பதே. எங்களுக்கென்றால் இதிலிருந்து தெரிவது இதுதான். அதாவது தமிழ் மக்களுக்கு எதிராக செய்யும் இனஅழிப்புக்கு எதிராக இலங்கை சிங்கள மக்கள் செயற்படமாட்டார்கள் என்று அரசு கற்பனை செய்கிறது. அரசின் பத்திரிகை சுதந்திரம் எப்படிப்பட்டது என்பதற்கு இந்த சம்பவமே போதுமானது. எங்களுக்கு ஒரே ஒரு சந்தேகம்.

தமிழ் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியதும் சிங்கள மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியதும் இருவேறானவை என்பதை அரசாங்கம், பகிரங்கமாக தேசத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஒப்புக்கொள்ளத்தயாரா?"

17வருட கால யூ.என்.பியின் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பற்றி வாய்கிழியக் கத்திய பொ.ஐ.மு. ஒரே வருடத்தில் அவையனைத்தையும் தானும் செய்து காட்டி விட்டது.

அரசின் பத்திரிகைச் சுதந்திரம் பற்றி 'ராவய' இப்படி கேட்கிறது.

'இதுமக்களின் நன்மைக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என தர்மசிறி சேனநாயக்க கூறியிருந்தார். மக்களால் தங்களுக்கு ஆபத்திருக்கிறது என பயப்படுகின்ற எல்லா அரசாங்கமும் இறுதியில் போடும் தாளம் இது தான். கடந்த காலங்களில் யூ.என்.பி. அரசாங்கம் கூட அந்த தாளத்தை அழகாக போட்டது எங்களுக்கு இன்னமும் ஞாபகமிருக்கிறது....

தனக்கு சிக்கல் தரக்கூடிய பத்திரிகையாளர்களையும், கலைஞர்களையும் மௌனம் கொள்ளச் செய்ய முசோலினி சொன்ன வார்த்தையை தர்மசிறி அறிவதற்காக ஞாபகப்படுத்துகிறோம். **"அவர்களின் வாய் காரம் அதிகம். அதை உதிரத்தாலேனும் அடைத்து நிறுத்த வேண்டும்."**

## நிகழ்வுகள்

### கருத்தரங்கு

"மலையக மக்களும் அதிகாரப்பரவலாக்கமும்" எனும் தலைப்பில் கருத்தரங்கொன்றை நவயுக சமூக அபிவிருத்தி மன்றம் ஏற்பாடு செய்துள்ளது. இக்கருத்தரங்கு ஹட்டன் 'சமூக மறுமலர்ச்சி மன்ற கட்டடத்தில் (இல.30, ஸ்டேஷன் ரோட்) ஒக்டோபர் 29ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நடக்கவிருக்கிறது.

### கியுபத் திரைப்படம்

கியுபப் புரட்சியின் நினைவாக கியுப தூதுவராலயத்தின் ஏற்பாட்டில் "UNDER GROUND" எனும் திரைப்படம் ரஷ்ய கலாச்சார நிலையத்தில் எதிர்வரும் 20ம் திகதி மாலை 6.30 க்கு காண்பிக்கப்படவுள்ளது.

### ஆர்ப்பாட்டம்

1988/1989 காலப்பகுதியில் கொல்லப்பட்ட, காணாமல் போன தொழிலாளர்களுக்கான தீர்வு கோரி "வலையத்தில் நாங்கள்" அமைப்பு ஏற்பாடு செய்திருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் எதிர்வரும் 27ம் திகதி சீதுவ சந்தியில் நடக்கும்.

### வீர மாணவர் தினம்

1988/1989 காலப்பகுதியில் கொல்லப்பட்ட காணாமல் போன பல்கலைக்கழக மாணவர்களை நினைவு கூறுமுகமாக ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக்கழகத்தில் 'வீர மாணவர் தினம்' 27, 28, 29ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இத்தினங்களில் திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவு, யுத்தத்தின் விளைவு பல்கலைக்கழக மாணவர்களின் போராட்ட வரலாறு என்பன பற்றிய கண்காட்சி இடம் பெறவுள்ளது.

### 'விடுதலை கீதம்'

ஜே.வி.பி. ஏற்பாடு செய்திருக்கும் "விடுதலைக் கீதம்" நிகழ்ச்சி 18, 19, 20ம் திகதிகளில் எல்பின்ஸ்டன் அரங்கில் மலை 6.00மணிக்கு நடைபெறவுள்ளது. '1971 கிளர்ச்சியின் பின் சிறைக்கூடங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட 'விடுதலைக் கீதம்' பிற்காலத்தில் பிரசித்தி பெற்றவை. தற்போது புதியவையும் தயாரிக்கப்பட்டு இந்நிகழ்ச்சியின் போது அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

### கண்காட்சி

புகைப்பட வரலாறு எனும் தலைப்பில் பிரபல புகைப்படக் கலைஞர் எல். ஈ. சமரரத்னாவின் புகைப்படக் கண்காட்சி 20, 21, 22ம் ஆகிய தினங்களில் கொழும்பு லயனட் வென்ட் அலங்கில் நடைபெறவுள்ளது.

## யாழ்.குடாநாடு...

உரம் கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாலும் மின்சாரம் இல்லாததாலும், மண்ணெண்ணெய் போதியளவு கிடைக்காததாலும் பயிர்ச் செய்கை பாதியிலும் குறைவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கொழும்பிலிருந்து வரும் உணவுப் பொருட்களிலேயே யாழ் மாவட்டம் தங்கியிருந்தது. அதுவும் இல்லை என்றாகிய போது பஞ்சம் ஏற்படாமல் வேறென்ன நடக்கும். மா மருந்துக்கும் இல்லை. பேக்கரிகள் மா இல்லாததால் மூடப்பட்டு விட்டன. பாண் கூட இல்லாத நிலை.

ஜனாதிபதியைச் சந்தித்த ஈ.பி.டி.பி எம்.பிக்கள் வடக்கே உணவு அனுப்புவது குறித்து தீர்மானிக்க ஜனாதிபதி விரைவில் மாநாடொன்றை கூட்டுவதாக உறுதியளித்துள்ளதாக பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளனரே அம்மாநாடு கூட்டப்பட்டதா? என்ற எமது கேள்விக்கு இல்லை என்று தலையாட்டுகிறார் அவர்.

இம்மாநாடு கூட்டப்படுவது பற்றி உங்களுக்கு ஒரு அறிவித்தலும் வரவில்லையா?

இல்லை, இது வரை அவ்வாறான எந்தவொரு அழைப்பையும் நான் பெறவில்லை.

இப்போது ஆயிரம் மெ.தொன் உணவுப் பொருட்கள் கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறதே?

ஆயிரம் மெ.தொன் பொருட்கள் கப்பலில் ஏற்றப்பட்டுள்ளன. ஆனால் கப்பல் இன்னும் துறைமுகத்தை விட்டு நகரவில்லை. பருத்தித்துறையில் அப் பொருட்கள் இறக்கப்பட்ட பின்னர் தான் அதனை நம்பமுடியும். கடந்த முறை ஆறு கப்பல்களில் உணவுப் பொருட்கள் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நான் ஏற்பாடுகளைச் செய்து விட்டு யாழ்ப்பாணம் சென்று விட்டேன். நான்கு கப்பல்கள் மட்டுமே வந்தன. இரண்டு வரவில்லை. நிலைமை இதுதான் என்றார் அவர்.

யாழ்ப்பாணத்தில் உணவுப் பிரச்சினை இந்த நிலையில் இருக்கும் போது லேக்ஹவுஸ் பத்திரிகையான தினகரன் "யாழ்ப்பாணத்தில் பஞ்சமா? யார் சொல்வது உண்மை?" என்ற இந்த விவகாரத்தை வெறும் பட்டிமன்றப் பிரச்சினையாக்கியுள்ளது.

ஈ.பி.டி.பி எம்பிக்களோ ஜனாதிபதியுடனான சந்திப்பு, பத்திரிகை அறிக்கை என்பவற்றுடன் தம்பணியை முடித்துக் கொண்டனர்.

→15

**யாழ் மாவட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களின் அளவு (மெ.தொன்) (ஆண்டொன்றிற்கு)**

| வகை | மொத்த தேவை | யூன் மாதம் வரை கிடைக்கப் பெற்றது | வீதம் |
|---|---|---|---|
| 01.அரிசி | 40000 | 7500 | 18 |
| 02.மா | 60000 | 21275 | 35.4 |
| 03.சீனி | 18000 | 3653 | 20.2 |
| 04.மைசூர் பருப்பு | 8000 | 1818 | 22.5 |
| 05.பால்மா வகை | 2000 | 280 | 14 |
| 06.ஏனையவை | 10000 | 263 | 2.6 |
| மொத்தம் | 138000 | 34789 | 25.2 |

## நெருக்கென்றதெம் நெஞ்சு!



சில்லையூரர் இறந்து விட்டார் என்ற சொல்லைக் கேட்டவுடன், மஹாகவியின் வரியிற் கூறுவதானால் 'நெருக்கென்றதெம் நெஞ்சு'. பல்கலை ஆற்றல்கொண்டவர் பழகுவதற்கு இனியவர் எனும் வார்த்தைகளுக் கப்பால், மனிதராக வாழ்ந்தார்; மறைந்தார்.

இலங்கைத் தமிழ்க்கவிதை வளம்படத் தொடங்கியபோது வளமேற்றிய கவிஞர்களுள் ஒரு கவிஞராக வாழ்ந்தார். (தான்தோன்றிக் கவிராயர்) இலங்கை நாடகத் துறை உயர்ந்த போது இவரும் அதில் ஒரு கலைஞராக மிளிர்ந்தார். இலங்கைத் திரைப்படத்துறையில் இவரின பங்கு மிகக் குறிப்பிடவேண்டியது. எதில் தான் கால் வைக்காது விட்டார்? எதிலதான் தன் முத்திரையைப் பதிக்காது விட்டார்.

இலங்கை வானொலி தமிழ்நேயர்களை (கடல் கடந்தும்) மயக்கித்துக்கொண்டிருந்த காலம் ஒன்றுண்டு அக்காலங்களில் மிகப் பெறுமதியான ஞாயிறுக்கிழமைகளில், பெறுமதி மிக்க பொழுதான மாலைப்பொழுதில் 4.30மணிக்கு சில்லையூரர் வானொலியில் வருவார். உள்ளமெல்லாம் குளிரும்.

"அத்தானே அத்தானே....."என்று அவர் மனைவி கமலினி பாடுவார் சில்லையூரர்,

"சிறுதொகை நானே சேமிக்கின்றோம்
செலவுக்கெது வழியாகுமென் கிறாய்
கேள்வி யதுதானே?...."

என்று கேட்பார் அப்போது அது குதுகலம். சொற்ப கணந்தான். 'தணியாத தாகம்' நாடகத்தால் பிறகு கண்களைக் குளமாக்குவார் வானொலியின் முன் பலர் கூடி இருப்போம்.அழுகை அழுகையாக வெளிக்காட்ட முடியாது. வாய்க்குள் அழுகையை அடக்கி வைத்திருப்போம். கொடுப்புப் பக்கம் அழுகை தாளாமல் புடைக்கும்." நெஞ்சிலும் கொடுப்பிலும் பிறகு நீண்ட நேரம் வலி எல்லாம் சில்லையூரார் செய்த சித்து விளையாட்டு. அவர் எழுதிய நூல்கள் பல. அதனால் பட்டியலிடத்தேவையில்லை. ஏனென்றால் அவற்றுக்கு மேலாக அவரது கலை ஆளுமை பலவாறாக எமக்குத் தெரிந்திருந்தது. அதனால் எம்துயர் இன்னும் பெருகுகிறது.

கலை ஆளுமை மிக்க சில்லையூர் செல்வராசனுக்கு எம் அஞ்சலியும் அவருடைய குடும்பத்தினருக்கு எம் அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

'சரிநிகர்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கெடுகுடி சொற்கேளாது!




சென்ற இதழில் இப்பத்தியில் எழுதியிருந்தவைகள் அனைத்தையும் சிவப்புக் கோடுகளால் வெட்டித் தள்ளிவிட்டு, எஞ்சியதைப் பிரசுரியுங்கள் என்று அனுப்பியிருந்தார் தணிக்கை அதிகாரி. படித்துப் பார்த்ததில், கட்டுரையின் தொடக்கத்தில் எழுதப்பட்டிருந்த மேற்கோள் ஒன்றைக் கூட அந்த அதிகாரியின் பேனா விட்டு வைக்கவில்லை. யுத்தம், படையினர் நடமாட்டம், யுத்தப் பிரதேச நிலைமைகள் மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்டவை தொடர்பான விடயங்கள் மட்டுமே தணிக்கை செய்யப்படும் என்று அரசுதரப்பில் அறிவிக்கப்பட்டிருந்த போதும் சரிநிகருக்கு தணிக்கை அதிகாரிகள் விசேட கவனிப்பு செய்திருந்தார்கள். பாண் விலையேற்றம் தொடர்பான விமர்சனத்தைக் கூட வெட்டி விட்டிருந்தார் அவர். எனவே இம்முறை அவரைச் சந்தோசப்படுத்துகிற மாதிரி எழுதுவது என்று தீர்மானித்துக் கொண்டு இப்பத்தியை எழுத ஆரம்பிக்கிறேன்.

நாட்டிலே நடக்கிற பிரதான பிரச்சினை இன்றைய யுத்த நிலை. இதுபற்றி எழுதுவதை தவிர்த்துவிட்டு வேறு விடயங்களைப்பற்றி எழுத வேண்டும் என்று கூறுகிறது அரசு. எதுபற்றிய உண்மைகள் மக்களுக்கு அவசியமோ அதுபற்றிய உண்மைகளை விட்டுவிட்டு எழுதும்படி அது கூறுகிறது. இதனால் வடக்கில் நடந்த யுத்தம் பற்றியோ, அங்கு வீசப்பட்டவைகளால் (எதையென்று வாசகர்கள் ஊகித்துக் கொள்ளுங்கள். அதை எழுதினால் சிலவேளை அதிகாரியின் பேனா இந்தப் பத்தியையே போன முறைபோல் கீறிவிட்டுவிடும். பிறகு, 'Approved as ammended என்றோ, 'திருத்தத்துடன் அங்கீகரிக்கப்பட்டது' என்றோ சீல் அடித்து விட்டுவிடுவார்கள். வாசகர்களுக்கு மிஞ்சப்போவது வெறும் கறுப்பு கறுப்பான தட்டிகள் தான்!) இறந்து போனவர்கள் பற்றியோ நாகர் கோவிலில் பள்ளிச் சிறார்கள் 35 பேரின் உயிரை ஆகாயத்திலிருந்து வந்த எமன் எடுத்துக் கொண்டு போனது பற்றியோ எமது பத்திரிகையாளர்களுக்கு எழுத முடியவில்லை.

உண்மையை மூடி மறைத்துவிட முடியும் என்பது தான் எல்லா அரசாங்கங்களதும் நம்பிக்கையாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் மூடப்படாத உண்மையை விட மூடப்பட்ட உண்மைகளே வேகமாக மக்களிடையே பரவுகின்றன என்பதை இவர்கள் வழமை போலவே மறந்து விடுகிறார்கள்.

எந்த ஒரு அரசாங்கம் உண்மைகளை மூடி மறைப்பதில், தொடர்பு சாதனங்களை கட்டுப்படுத்துவதில் தனது இருப்பை உறுதி கொள்ள விரும்புகிறதோ; அந்த அரசாங்கம் தனது இருப்புக்கான அடிப்படை நியாயத்தை ஏற்கனவே இழந்துவிட்டது என்பது அர்த்தமாகிறது. இதனால் அது மிக விரைவாகவே தான் உள்ளூர உளுத்துப்போவதை தானே அறிந்து கொள்ள முடியாமல், ஒரு நாள் திடீரென கொலகொலத்துப் போய் விழுந்துவிடுகிறது.


இந்த அரசாங்கம், சமாதானத்தின் பேரால் நடாத்தும் யுத்தத்துக்கு மக்களிடையே என்ன அபிப்பிராயம் உள்ளது என்பதை அறிய, தனது அடிவருடிகளையே மாணிக்கமாக நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. 'கெடுகுடி சொற்கேளாது; சாகிறவனுக்கு மருந்து ஏறாது' என்பார்கள். 'சந்திரிகா அரசுக்கு இப்போது இல்லாவிட்டாலும் இன்னும் கொஞ்ச நாட்களில் விளங்கத்தான் போகிறது!

சென்றவாரம் கொழும்பு முழுவதும் பரபரப்பாக அடிபட்டு, எல்லாப்பத்திரிகைகளிலும் இடம் பிடித்துக் கொண்டது, டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மீதான தாக்குதலும், அவர் ஜேம்ஸ்பொண்ட் பாணியில் தப்பித்த வீரமும் பற்றிய செய்திகள் தான்.

'பாசிச வெறி' பிடித்த புலிகளுக்கு நாம் ஒரு போதும் அஞ்சவில்லை என்று சவால்விட்டு தம்மீதான தாக்குதலுக்கு புலிகளே காரணம் என்று அடித்துச் சொல்கிறார் டக்ளஸ். கொல்லப்பட்ட 'தோழர்களுக்கு' சமயாசார முறைப்படி ஈமக்கிரியைகள் செய்து முடித்த தேவா அவர்கள் தன் மீதான தாக்குதலுக்கு நிச்சயம் புலிகள் தான் காரணம் என்று கூறுவதிலும், படையினருக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கலாம் என்ற சந்தேகத்தை மறந்தும் அவர் எழுப்பமாட்டார் என்பதிலும் யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கொழும்பில் இருந்தபடி படையினரைப் பகைக்கும் அளவுக்கு அவருக்குப் புத்தி பேதலித்துப் போகவில்லை என்பது பலருக்கு புரியவில்லை.

கொழும்புப் பத்திரிகைகள் தமது ஆசைக்கு 'தேவா' அவர்களை சாட்டாக வைத்து புலிகளை வசைபாடி தீர்த்துள்ளன.

## டக்ளஸ் 007



'புலிகள் தேவாவை தாக்கியிருக்க மாட்டார்கள்' என்று கூற யாருக்கும் முடியாது என்றாலும் கூட, பச்சைத் தொப்பி கண்டெடுக்கப்பட்ட பின்னும், படையினர் செய்திருக்கலாம் என்ற ஒரு சந்தேகம் கூட 'தோழர் தேவாவுக்கு' வராதது, அவரது திறமையில் பிசிறடிக்கத்தான் செய்துள்ளது.

இங்கே எல்லாவற்றையும் விட ஆத்திர மூட்டுகிற விடயம் என்னவென்றால்; தாக்குதல் நடந்த போது அவர் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு யோசனைகள் பற்றி ஆய்வு செய்து கொண்டிருந்ததுதான். அவ்வளவு அக்கறையாக அரசியலில் ஈடுபடும் அவரைத் தாக்க புலிகள் முயன்றது மன்னிக்க முடியாத குற்றம்.

நல்லவேளையாக அவரிடம் துப்பாக்கி இருந்தது. சரியாக குறிவைத்து மின்விளக்குகளை சுட்டு வீழ்த்திவிட்டு தன்னைப் பாதுகாத்துக் கொண்டு விட்டார்.

சண்டே ரைம்ஸ் பத்திரிகை விபரம் தெரியாமல் போட்டோப் பிரதி எடுக்கும் இயந்திரம் கிறனைட்டால் தாக்கப்பட்டதால் மின் விநியோகம் தடைப்பட்டுவிட்டது என்று கூறுகிறது. போதாததற்கு அவர் இரகசியமாக பேண விரும்பிய, அவர் தப்பிச் சென்ற பாதையை படம் போட்டு வேறு காட்டிவிட்டிருக்கிறது.

இனவாதப் பத்திரிகைகளின் குணமே இது தான் போலும்!

## பூவின் வாசம் புரியும்!



வெள்ளைத் தாமரை இயக்கத்தின் நோக்கத்தை, அதன் உண்மையான நோக்கத்திலிருந்து திரித்துக்கூறி அதன்மீது பலர் சேறு பூசி வருகிறார்கள். சேற்றில் மலர்ந்தாலும், வெண்தாமரையாகவே மலரும் இந்த சுதுநெலும் மீது யார் சேறு பூசினாலும் அதன் சமாதான நோக்கத்தை எவரும் மறுத்துவிட முடியாது. அண்மையில் நடந்த கூட்டமொன்றில் பேசிய தபால் தந்தி அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் அந்த இயக்கத்தின் சமாதானத்தின் மீதான அக்கறையை மிகவும் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்கள்:

பேருவளையில் இந்த இயக்கத்திற்கான அலுவலகம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

''வெண்டாமரை இயக்கம் அரசாங்கத்தால் தொடங்கப்பட்டதே. பாதிக்கப்பட்ட முப்படையினரின் குடும்பங்களுக்கும் வடக்கு கிழக்கின் எல்லைப்புற கிராமங்களில் வாழும் மக்களுக்கும் உதவி செய்யும் நல்ல நோக்கத்திற்காகவே.''

சமாதானத்திற்காகவே இந்த இயக்கம் இயங்குகிறது என்பதற்கு இதைவிட வேறென்ன உதாரணம் வேண்டும். ''உண்மையான இலங்கையர்களான' படை வீரர்கள் வடக்கு கிழக்கில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களது குடும்பங்களை வசதியாக வாழ வைப்பதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்!

வெண்தாமரை சமாதானத்துக்கான இயக்கம் என்று நம்புவதற்கு இனி என்ன தடை?

## செவாலியர் ரணில்!



அடிப்படை மனித உரிமைகள் பற்றிப் பலருக்கு மறந்து போய்விட்டது. தேர்தல் காலத்தில் அதற்கு இருந்த மதிப்பு இப்போது இல்லாமற் போய்விட்டது. ஆனால் இன்றை வரைக்கும் அதை நினைவில் வைத்திருக்கிறது ஐ.தே.க. தொடர்பு சாதன சுதந்திரம் மறுக்கப்படுவது ஒரு அடிப்படை மனித உரிமை மீறலாகும். மக்களுக்குள்ள கருத்து சுதந்திரத்தை எமது நாட்டு அரசியலமைப்பு உறுதி செய்கிறது. ஆனால் இந்த அரசாங்கம் அதை மீறி தொடர்பு சாதன சுதந்திரத்தை தடை செய்துள்ளது. எனவே இதை எதிர்த்து அரசுக்கெதிராக நாம் வழக்கு தொடுத்துள்ளோம் என்கிறார் ரணில் விக்கிரமசிங்க -எதிர்க்கட்சித் தலைவர்.

சந்திரிகா அம்மையாருக்கு மனித உரிமைகள் மறந்து போனதும், ரணிலுக்கு அது இன்னமும் ஞாபகம் இருப்பதும் எவ்வளவு ஒரு அழகான சித்திரம்?




நாடக மேடையில் தோன்றும் பாத்திரங்களின் தன்மைகளை உணர்ந்து அவற்றின் குணசித்திரத்திற்கேற்ப வசனங்கள் பேசவும் நடிக்கவும் தெரிந்த நல்ல ஒரு நடிகர் - பின்னால் திரைப்படங்களிலும் அவர் பெரும் சாதனையை நிலைநாட்டினார். சிவாஜி கணேசன் என்பார்கள்.

பலருக்கு ரணிலை தெரியாது. ஆனால் சிவாஜியைத் தெரியும்.

இது ஒரு மாபெரும் சோகம். இந்த உலகத்தில் எப்போதுதான் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கப் போகிறதோ?

## சரத் முனசிங்க இன்னொரு கோயபல்ஸ்!



''பத்திரிகையாளர்களுக்கு வடக்கு நிலைமைகள், அங்குள்ள பூகோள அமைப்புகள் தெரியாது. அவர்கள் அங்கு நடக்கும் நிலைமைகள் பற்றி சரியான தகவல்களை வழங்குவதில்லை. செய்திகளை எழுதும் போது அவற்றை ஊர்ஜிதம் செய்த பின்னரே வெளியிட வேண்டும்''

இந்தத் தகவலை கூறியிருப்பவர் வேறு யாருமல்ல. இராணுவ தரப்பு பேச்சாளர் சரத் முனசிங்க அவர்கள் தான்.

செய்திகளை எப்போதும் சரியாகவே தெரிவிக்கின்ற ஒருவர் என்கின்ற முறையில், குறிப்பாக 'ஒப்பிரேசன் லீப் போவாட்' நடவடிக்கையின் போது, படையினர் பழைய நிலைக்குப் பின்வாங்கிக் கொண்டிருந்த போது, கொழும்புப் பத்திரிகைகளுக்கு,

யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறும் நோக்கில் கைப்பற்றிய பிரதேசங்களை பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் எமது படை வீரர்கள் என்று 'உண்மை'ச் செய்தியை வழங்கியவர் என்ற முறையில் அவர் இவ்வாறு கூறுவது முற்றிலும் பொருத்தமானதே. தவிரவும் பூகோள அறிவு பற்றி அவர் சொல்வது இதைவிடப் பொருத்தமானது. ஒப்பரேசன் லீப் தாக்குதலின் போது, பத்திரிகையாளர்களுக்கு அவர் தடியால் தொட்டுக் காட்டிய குடாநாட்டுப் படத்தை (இதை ரூபவாஹினியும் காட்டியது) பார்த்தவர்கள் அவரது அறிவை நிச்சயம் புரிந்து கொண்டிருப்பார்கள். கைப்பற்றப்பட்ட பிரதேசம் என அவர் குறிப்பிட்ட 75 சதுரமைல் பிரதேசத்தை அவர் அடையாளமிட்டுக் காட்டியிருந்ததை பார்த்தவர்கள் இன்னும் அங்கே எஞ்சியிருப்பது ஒரு 10 சதுரமைல்தான் என்ற உண்மையை விளங்கிக் கொண்டிருப்பார்கள்.

'புலிகள் பேச்சுக்கு வரும்வரை மின்னல் வேக தாக்குதலை நடத்துவோம்' என்று கூறும் பேச்சாளர் சரத் முனசிங்க, கொழும்புப் பத்திரிகையாளர்கட்கு பூகோளப் பாடமும், உண்மை பற்றியும் குறிப்பிடுவதற்கு எல்லாவித தகுதியும் படைத்தவர்தான்!

ஆனால் துரதிர்ஷ்டம் என்னவென்றால், அவர் சொல்கிற பெரும்பாலான விடயங்களை பத்திரிகை தணிக்கை அமுலில் இல்லாத போது, உண்மையான தகவல்கள் அல்ல என்று இங்குள்ள பத்திரிகைகள் கூறி வந்ததுதான். இப்போது தணிக்கை அமுலில் இருப்பதால், இவ்வாறான அவதூறுகளை இந்தப் பத்திரிகைகளால் எழுதமுடியவில்லை.

புலிகளில் 700பேர்வரை கொல்லப்பட்டு விட்டார்கள். இராணுவத்தில் எவருக்கும் காயமில்லை என்பது போன்ற உண்மைகளை, அவரிடம் ஊர்ஜிதம் செய்து கொண்டு எழுத மறுக்கும் பத்திரிகையாளர்களுக்கு பயன்படும்விதத்தில் விரைவில் ஒரு பாடப்புத்தகம் ஒன்றை அவர் எழுதவிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

அந்தப் புத்தகத்தில் அவர் குடாநாட்டில் உள்ள காடுகளுக்குள் புலிகள் 'எப்படிப் பதுங்கி இருக்கிறார்கள் என்பது பற்றியும், தான் கூறும் உண்மைகளை, மின்னல் செய்திகளை எப்படி பத்திரிகையாளர்கள் எழுத வேண்டும் என்றும் விபரிக்கப் போவதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன.

இனியாவது இங்குள்ள பத்திரிகையாளர்கள் படித்துத் தேறுவார்களாக!

தணிக்கை அதிகாரிகளின் கையிலிருந்து தப்புவதற்காக இந்தப் பத்தியை இப்படி எழுத வேண்டியேற்பட்டுள்ளது. கொஞ்ச நாட்களுக்கு வாசகர்கள் இதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். எதையெல்லாம் எழுத வேண்டும் என்பதை எழுத்தாளர்கள் அல்ல தணிக்கை அதிகாரிகளே தீர்மானிக்கிற காலமிது பொ.ஐ.மு. அரசாங்கம் எமக்களித்துள்ள ஜனநாயக நாணயக் கயிற்றின் எல்லைக்குள் நின்று எழுத வேண்டிய நிலை.

புதைகுழிகளைத் தோண்டுவதில் ஆரம்பித்த சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு அரசாங்க ஜனநாயகம், ஜனநாயகத்தையே புதைகுழிகளுக்குள் இட்டு மூடிவிடும் ஜனநாயகமாக வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த அரசாங்கத்தின் ஜனநாயகத்தின் கோரப் பற்களுக்குள் முதலில் பலியாகிக் கொண்டிருப்பவர்கள் தொடர்புசாதனவியலாளர்கள் தான்.

அடுத்ததாக யார்யாரெல்லாம் பலியாகப் போகிறார்களோ....?

இந்தப் போக்கின் வேகம் இந்த அரசாங்கத்தைக் கூட விழுங்கிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச வளர்த்துவிட்ட சட்டவிரோத கும்பலாட்சியின் உக்கிரம் அவரையே இறுதியில் பலிகொண்டது வரலாறாகி நீண்ட நாட்களாகவில்லை.

புதிய ஆட்சியாளர்கள் எப்போது இதைப் புரிந்து கொள்ளப் போகிறார்களோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# மலையக பணிப்பெண் தீமூட்டிக் கொலை!

## நீதி விசாரணை வேண்டும்!

ஒக்ரோபர் முதல்வார பத்திரிகைச் செய்திகள் பல என்னைக் கலங்க வைத்தன. அவற்றுள்ளும் மிக மோசமாக என்னைப் பாதித்த செய்தி வெள்ளவத்தை பணிப்பெண் கொலை; விளக்கமறியலில் இருந்த பெண் விடுதலை என்ற தலைப்பில் வீரகேசரியில் 95ஒக்.03 வெளிவந்த செய்தியாகும்.

செய்தியின் சுருக்கம் இதுதான்: வெள்ளவத்தை பீட்டர்சன் வீதியில் லட்சுமி (வயது 20) என்ற மலையகத்தைச் சேர்ந்த பணிப்பெண் எண்ணையூற்றி தீ வைத்துக் கொன்ற சந்தேகத்தின் பேரில் கைதான நிர்மலரி வெண்மதிராஜா என்ற பெண் கல்கிசை நீதிமன்ற நீதிபதி ஜெயந்த பெரேராவினால் செப். 29 வெள்ளிக்கிழமை விடுதலையானார். சந்தேக நபரான நிர்மலா வெண்மதிராஜா சார்பில் சட்டத்தரணி கெளரிசங்கர் தவராஜாவின் அனுசரணையுடன் தோன்றிய சட்டத்தரணி எம்.எல்.எம். அமீன், காலம் சென்றவர் தனது மரண வாக்குமூலத்தில் தமக்குத் தீமூட்டியவர் வீட்டுக்கார அம்மா என்றும், கட்டையாக தலைமுடி வெட்டிய அம்மாவென்றும் தான் கூறியுள்ளார் என்றும், பெயர் எதுவும் கூறவில்லை என்றும் விவாதித்தார். வெள்ளவத்தை குற்றத்தடுப்பு பொலிஸ் சார்பில் பொறுப்பதிகாரி பிரசன்ன டி அல்விஸ் சந்தேக நபருக்கு எதிராக சாட்சியம் இல்லை எனவே விடுதலை செய்வதற்கு ஆட்சேபனை இல்லை என்றும் தெரிவித்தார்.

நீதிமன்ற உள்விவகாரங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிப்பது எனது நோக்கமல்ல. குறிப்பிட்ட ஒரு வீட்டில் லட்சுமி என்ற மலையகப் பணிப்பெண் எண்ணை ஊற்றி எரிக்கப்பட்டிருக்கிறார், விட்டுக்கார எசமாட்டிகளதும் பெயரை சொல்லக்கூடத் துணியாத நவீன அடிமைகளின் குழுவைச் சேர்ந்த ஒருத்தி அந்தப் பெண். எனினும் கொலையுண்ட பெண் தனது மரண வாக்குமூலத்தில் வீட்டுக்கார அம்மா கட்டையாக முடிவெட்டியவர் என்று கூறியிருக்கிறார். இத்தனைக்குப் பின்னும் மேற்படி குறிப்பிட்ட வீட்டினைச் சேர்ந்த ஒரு பயங்கர குற்றவாளி சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இதற்குக் காரணம் குறிப்பிட்ட பெண் இலங்கையின் நவீன அடிமைகளான மலையக பணியாட்களுள் ஒருத்தி என்பதைத் தவிர வேறு நியாயமான காரணம் இருக்கும் என எனக்குத் தெரியவில்லை.



இந்தப் பரிதாபத்துக்குரிய நவீன அடிமைகளுக்கு சொந்த மலையகக் கிராமம் இருக்கிறது. அங்கு அவர்கள் பெற்றோருக்கு தொழிற்சங்கங்கள் உள்ளன. இந்த நவீன அடிமைகளின் பிரதிநிதிகள் மாகாண சபைகளிலும் பாராளுமன்றத்திலும் உள்ளனர். இந்த நவீன அடிமைகளின் பெயரால் பல அரசுசாராத நிறுவனங்கள் செல்வச் செழிப்புடன் தொழிற்படுகின்றன. இவற்றையெல்லாம் விட இந்த நவீன அடிமைகளது நலன்களைப் பாதுகாக்க மாண்புமிகு அமைச்சர்கள் இருவர் செளமியமூர்த்தி தொண்டமான் அவர்களும், சந்திரசேகரன் அவர்களும் இன்று சக்திவாய்ந்த அமைச்சர்களாக அரசில் இருக்கிறார்கள்.

இன்றுவரை மலையகப் பணிப்பெண் லட்சுமியின் படுகொலை தொடர்பாக நீதி விசாரணை செய்யென்று ஒருவர் கூட வாய்திறந்ததாகத் தெரியவில்லை. ஒரு தொழிற்சங்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியதாகத் தெரியவில்லை. ஒரு மனித உரிமைகள் இயக்கமோ அல்லது பெண் உரிமை இயக்கமோ இது பற்றி அக்கறை எதுவும் காட்டியதாகத் தெரியவில்லை. ஒரு அமைச்சர் கூட நீதி விசாரணை கோரி மூச்சுவிட்டதாகத் தெரியவில்லை.

இத்தனைக்கும் இந்த மலையக நவீன அடிமைகளும் இலங்கைப் பிரஜைகள். இத்தனைக்கும் பணிப்பெண் லட்சுமி செய்த தவறு அரை அடிமைகளான மலையகத் தமிழிச்சியாக இருந்தது. ஏழை இலங்கையராக இருந்தது. ஒரு பெண்ணாக இருந்தது. இதுதவிர வேறு என்ன? நாட்டின் ஜனாதிபதி ஒரு பெண் என்று பெருமை பேசப்படுகிற ஒரு நாட்டில் பணக்காரர்கள் ஒரு ஏழை மலையகத் தமிழப்பெண்ணை மண்ணெண்ணை ஊற்றிக் கொழுத்தியவர்களை ஏன் என்று கேட்க ஒரு அரச நிறுவனமும் இல்லை. அரசுசாராத நிறுவனம் கூட இல்லை.

இந்த அபலைப் பெண் லட்சுமிக்காகவும் இப்படி இலங்கையெங்கிலும் பணக்காரர்களது வீடுகளில் அடிமைகளாக துன்பப்படுகின்ற ஆயிரமாயிரம் லட்சுமிகளுக்காகவும், லட்சுமணர்களுக்காகவுமாக குரல் கொடுக்க ஒரு உண்மையான தொழிற் சங்கமோ ஒரு உண்மையான தலைமைத்துவமோ மலையக மக்களுக்கு இல்லையா? இந்த அபலை மலையகத் தமிழிச்சிக்கு நிகழ்ந்த கொடுமைக்கெதிராக நீதி விசாரணை வழங்க வேண்டும் என்று குரல் கொடுக்க ஒரு உண்மையான பெண்கள் அமைப்பு இந்த நாட்டில் இல்லையா? இருந்தால் சரிநிகரே அவர்களை துயில் எழுப்பிவிடு. சகோதரப் பத்திரிகைகளான யுக்தியவே, ராவயவே, ஹிருவே தயவுசெய்து அவர்களை துயில் எழுப்பி விடுங்கள்!

**வ.ஐ.ச.ஜெயபாலன்**

இந்த விடயம் தொடர்பாக உங்கள் பதில் என்னவென்று மலையக அமைச்சர்களிடம் பத்திரிகையாளர்களே கேட்டு எழுதுங்கள். இந்தப் படுகொலைக்கு எதிரான குரல் பணிப்பெண்களாக பணக்கார வீடுகளில் கண்ணீரும் செந்நீரும் சிந்துகின்ற சகல பெண் குழந்தைகளையும் பாதுகாக்கிற குரலாக ஓங்குக!

மலையக தமிழ் மக்களே, மலையகத்தைச் சேர்ந்த கலைஞர்களே, மலையகத் தொழிற் சங்கங்களே, கெளரவமுள்ள மலையக மக்களே உங்கள் உங்கள் தோட்டங்களில் இருந்தும் முழு மலையகங்களில் இருந்தும் பணிப்பெண்ணாகவும் குற்றேவலாளர்களாகவும் உத்தியோகபூர்வமற்ற கொத்தடிமைகளாகவும் மலையகக் குழந்தைகளை மீட்டுவந்து புனர்வாழ்வழிக்க இன்றே களத்தில் இறங்குங்கள்.

வேலை செய்யும் வயது வந்த பிள்ளைகளுக்கு கவுரவமான வேலைகளில் பயிற்சி தரவும் அத்தகைய வேலைகளைத் தேடித் தரவும் பணிப்பெண்கள் குற்றேவல்காரர்களாக வேலை செய்கிற வயது வந்தவர்களை சட்டரீதியான பணியாளர்களாக பதிவு செய்து ஸ்தாபனமயப்படுத்தவும், கண்காணிக்கவும் வழிவகைகளைக் கண்டறியுங்கள்.

இலங்கையில் மலையக தமிழ் இளைஞர்களின் கண்ணீராலும் செந்நீராலும் தீட்டுப்படாத உணவை பரிமாறக்கூடிய உணவு விடுதிகள் ஒருசிலதான்.

எட்டுமணிநேர வேலை என்கிற நூறாண்டு பழைய கோரிக்கையைப் பற்றி, பல தசாப்தங்களுக்கு முன்னமே வென்றடையப்பட்ட உரிமை பற்றி இவர்களுக்கு எடுத்துச் சொல்ல யாருமே இல்லை.

இந்தக் கொடுமைகள் இனியும் தொடர்வதை அனுமதிப்போமா இப்படி...

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான்.

---

# யாழ் மாவட்டத்தின் விவசாயமும் மீன்பிடியும்


## யுத்தத்தினால் பாழ்!

யாழ்குடா நாட்டின் முக்கியவளங்களான விவசாயமும், மீன்பிடியும் இன்று மிக மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை ஈட்டிக்கொடுக்கும் இந்த இரண்டு வளங்களையும் இழந்து இன்று மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இன்றைய அரசாங்கமும், முன்னைய அரசாங்கமும் வடபகுதிமீது கொண்டு வந்த கடல் வலயச்சட்டமும், பொருளாதாரத் தடைச்சட்டமும் இதற்கு காரணமாகும்.

முன்னைய காலங்களில் வடபகுதியில் இருந்து தென் இலங்கைக்கு கடல் உணவும், விவசாய உற்பத்திப் பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இன்று இந்த இரண்டு முக்கிய தொழில்களையும் மேற்கொண்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினிச் சாவையே எதிர்நோக்குகின்றன.

வடபகுதியின் முக்கிய கடல் வளத்துறைமுகங்கள் இன்று இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. கடந்த பல வருடங்களாக உண்டாக்கப்பட்ட கடல்வலயச் சட்டத்தையும் மீறி பசியின் கொடுமையினால் கடலுக்குள் மீன்பிடிக்கச்சென்ற பல மீனவர்கள் கடலுக்கு இரையான சம்பவங்கள் அதிகம். வடபகுதியில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கடற்தொழிலை முழுநேரத் தொழிலாகக் கொண்டவர்கள். பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, குருநகர், தாளையடி, செம்பியன்பற்று போன்ற இடங்களில் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருமே கடற்தொழில் செய்பவர்கள். இவர்கள் இன்று தமது கடல் தொழில் உபகரணங்கள், வள்ளங்கள், வலைகள் யாவற்றையும் இழந்த நிலையில் இருக்கின்றனர். நூற்றுக்கணக்கான வடபகுதி, கடற்தொழிலாளர்களின வள்ளங்கள், வலைகள் கடலோடு சென்ற சம்பவங்களும் நிறைய இருக்கின்றன. காங்கேசன்துறை, மயிலிட்டி, மாதகல், காரைநகர் போன்ற இடங்களைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் இன்று இடம் பெயர்ந்து மற்றைய இடங்களில் முகாம்களிலும் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இந்த கடற்தொழிலாளர் குடும்பங்களுக்கு இடம் பெயர்ந்தவர்களுக்கான இலவச உலர் உணவு வாராந்தம் வழங்கப்படுகின்றது. இதனால் இவர்களின் குடும்பங்கள் பட்டினிச்சாவில் இருந்து ஒருவாறு தப்பிக் கொண்டனர். ஆனால் மற்றைய இடங்களைச் சேர்ந்த யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை போன்ற இடங்களில் வசிக்கின்ற சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் இன்று எந்த விதமான உதவியும் இன்றி பட்டினிச்சாவை நாள்தோறும் எதிர்நோக்குகின்றனர். இந்த கடற்தொழிலாளர்கள் தமது குடும்பத்தினரை பட்டினிச்சாவில் இருந்து காப்பாற்றுவதற்காக கடல் வலயச் சட்டத்தையும், மீறி கடலுக்குள் சென்று மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது காணாமல் போயும், இறந்தும் உள்ளனர். அண்மையில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளம் கடற்தொழிலாளர் ஒருவரும் அவருடைய மைத்துனர் ஒருவரும் அராலித்துறை கடற் பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது காணாமல் போயுள்ளனர்.

இன்று வடபகுதியில் வசிக்கின்ற சுமார் 5 ஆயிரம் கடற் தொழிலாளர் குடும்பங்களும் எந்தவிதமான ஒரு வருவாயும் இன்றி அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. கடல்வலயச் சட்டத்தை அமுலாக்கிய இந்த அரசாங்கம் இன்றுவரை இந்த கடற்தொழிலாளர் குடும்பங்களின் ஜீவனம்சத்திற்கு எந்தவிதமான உதவியும் செய்யாமல் இருப்பது மனிதாபிமானமற்ற செயலாகும்.



யாழ்.அரசாங்க செயலகத்தினர் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் பிரதேச செயலாளர்களின் மூலம் கடற்தொழிலாளர் குடும்பங்களின் விபரங்களைத் திரட்டினார்கள். ஆனால் இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்தொழிலாளர் சங்கங்கள் நிவாரணம் வழங்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

யாழ்.குடாநாட்டின் மற்றைய பிரதான வளம் விவசாயம். இன்று பல ஏக்கர் கணக்கான விவசாய நிலங்கள் பல ஆண்டுகளாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வெறும் தரையாகக் கிடக்கின்றன. மிகுந்த வளங்களைச் கொடுக்கக் கூடிய சிறந்த மண் வளத்தைக் கொண்ட பலாலி, வசாவிளான், தெல்லிப்பழை போன்ற இடங்களிலுள்ள வயல்நிலங்கள், இன்று படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 79ஆயிரம் விவசாயக் குடும்பங்களும் 75ஆயிரம் விவசாயக் கூலிக்குடும்பங்களும் இருக்கின்றனர். இவர்கள் கடந்த காலங்களில் சுமுகமாக தமது வாழ்க்கையை நடாத்தியவர்கள். கடந்த பல வருடங்களுக்கு முன்பு பலாலி, வசாவிளான், மாவிட்டபுரம், தெல்லிப்பளை போன்ற இடங்களைச் சேர்ந்த விவசாயிகள் தமது சகல உடமைகளையும் இழந்து வேறு இடங்களில் குடியமர்ந்துள்ளனர். இவர்கள் தமது சொந்த இடங்களில் மேற்கொண்ட விவசாயத்தையும் கைவிட்ட நிலையில் வாழ்கின்றனர். சில விவசாயிகள் தாங்கள் இருக்கின்ற இடங்களில் வெறும் தரையாக இருந்த விவசாய நிலங்களை உரிமையாளர்களிடம் குத்தகைக்குப் பெற்று விவசாயத்தை மேற்கொண்டனர்.

யாழ்.மாவட்ட விவசாயிகள் வெளி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பாராட்டும் அளவிற்கு விவசாயத்தில் முன்மாதிரியாக திகழ்ந்தனர். கடந்த பல வருடங்களாக இடம் பெற்று வரும் யுத்தம் காரணமாக வடபகுதி விவசாயிகளின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள விவசாயிகளின் விவசாய நிலங்கள் யாவும் கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களாக இடம் பெற்றுவரும் யுத்தநிலை காரணமாக விவசாயம் மேற்கு, வலிகாமம் வடக்கு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட உப உணவுப் பயிர்ச்செய்கை அழிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் தொகையான நட்டம் ஏற்பட்டுள்ளது. எரிபொருள் தடை, உரத்தடை ஆகிய தடைகளுக்குப் பின்னும் மேற்கொள்ளப்பட்ட உபஉணவுப் பயிர்ச்செய்கை நாசமாக்கப்பட்டது. வலிகாமம் மேற்குப்பகுதி முழுவதும், வலிகாமம் வடக்கு ஈவினை, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, நிலாவறை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட மரவள்ளி, குரக்கன், வெங்காயம், பூசணி, கத்தரி, மிளகாய், வெண்டி, பயற்றங்காய், வாழை ஆகிய உப உணவுப் பயிர்ச் செய்கை முழுவதும் அண்மையில் நாசமாக்கப்பட்டுள்ளது. இது விவசாயிகளிடத்தில் பெரும் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளதுடன் பொருளாதாரத்தில் அவர்களை வீழ்ச்சியடையச் செய்துள்ளது.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் புள்ளி விபரங்களின்படி இந்த ஆண்டு 10,366 ஹெக்டரில் நெற்செய்கையும் 7000 ஹெக்டரில் மேட்டு நில செய்கையும் 4400 ஹெக்டரில் உப உணவுப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படவிருந்தன. ஆனால் இன்று இடம் பெற்றுக்கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கையினால் இது சாத்தியப்பட முடியாது. இந்த ஆண்டு விவசாயச் செய்கைக்கு யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு 11,593 மெட்ரிக் தொன் உரமும் 20500 பரல் ம.எண்ணெயும் தேவை என விவசாயத் திணைக்களம் அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்துள்ளது. ஆனால் இன்றுவரை 9 மாதங்கள் முடிவடையும் நிலையில் இந்த உள்ளூடுகளின் கால்ப் பங்கு கூட இன்றுவரை வடபகுதிக்கு செல்லவில்லை. இந்நிலையில் விவசாயிகள் எப்படி விவசாயத்தை மேற்கொள்ள முடியும். பெரும்போக நெற்செய்கை இந்த வருடம் வடபகுதியில் நடைபெறுமா? என்பது சந்தேகமே. கடந்த ஆண்டுகளில் இந்த மாதத்தில் விவசாயிகள் தமது பெரும்போக நெற் செய்கைக்குரிய சகல நடவடிக்கைகளையும் முடித்திருந்தனர். ஆனால் இந்த வருடம் மழையும் இல்லை. உரமும் இல்லை. ஏன் வயலுக்குக் கூட செல்ல முடியாது. இந்நிலையில் வடபகுதியில் இன்று விவசாய நிலங்கள் இருக்கின்றன.

வடபகுதியின் இரண்டு முக்கிய வளங்களும் இன்று நாசமாக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு தொழில்களையும் மேற்கொண்ட குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கின்றன. இவர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பட்டினிச்சாவையே எதிர் நோக்குகின்றனர்.

அன்பு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எம்முடைய தாயகமும் வடக்கே

## இறுதிப்பகுதி



இக்கட்சியின் மேற்குறித்த திட்டத்தின் சாராம்சம் பின்வருமாறு: வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் முஸ்லிம்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக முஸ்லிம் மாகாண சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இச்சபைக்கு சட்டப் பாதுகாப்பு. காணிப்பங்கீடு போன்ற அதிகாரங்கள் இருக்க வேண்டும். இச்சபைக்குள் கிழக்கு மாகாணத்திலும்; வடமாகாணத்திலும் முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்ற புவியில் தொடர்ச்சி அற்ற பிரதேசங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். வடமாகாணத்தைப்பொறுத்தவரை மன்னார் மாவட்டத்தில் உள்ள முசலி, எருக்கலம்பிட்டி ஆகிய இரண்டு முஸ்லிம் செறிவுகளும் முஸ்லிம் மாகாண சபைக்குள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

மேற்குறித்த முஸ்லிம் காங்கிரஸின் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான அரசியல் முன்மொழிவிற்கு இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. காங்கிரஸின் முஸ்லிம் மாகாண கோரிக்கை அரசியல் சாணக்கியர்களால் புறக்கணிக்கப்பட முடியாமைக்கு இரு காரணங்களைக் கூறலாம். ஒன்று கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் விகிதாசார ரீதியான முக்கியத்துவம். மற்றையது இன்றைய தேசிய அரசியலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி; அரசாங்க கட்சியில் முக்கிய பங்காளியாகக் காணப்படுவது ஆகியனவாகும்.

ஒரு பிரதேசத்திற்குள் சிறுபான்மை இனம் ஒன்றை இணைக்கக் கூடிய முஸ்லிம் மாகாண சபை போன்ற நிர்வாக அலகு ஒன்றின் அவசியம் பின்வரும் கண்ணோட்டத்தில் சாதகமாக நோக்கப்படலாம். இவ்வலகு. குறித்த சிறுபான்மை மக்களை இணைப்பதாகவும் அவர்களின் நலன்களை பிரதிபலிக்கும் பொதுக்குரலாகவும் இருப்புதற்கு அவசியமானது. இந்த அடிப்படையில் வடக்கு. கிழக்கு இணைந்த மாகாணத்துக்குள் முஸ்லிம்களின் சமய. கல்வி. கலாசார மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்ட ஒரு அலகு. பிரதேசம் எங்கிலும் பரவிக் கிடக்கும். இச்சிறுபான்மையினருக்குத் தேவையானதொன்றாகும். சிறுபான்மையினரின் சமய. கலாசார அபிவிருத்தி நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட இவ்வாறான சபைகள் பெல்ஜியம்; லெபனானி போன்ற நாடுகளிலும் காணப்படுகின்றன.

ஆனால் மு.காங்கிரஸால் முன்வைக்கப்பட்ட முஸ்லிம் மாகாண சபை முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளையும் பொருளாதார நலன்களையும் பாதுகாக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட இருக்கின்றது. அவ்வாறான சபை நடைமுறைப் பிரச்சினைகள் பலவற்றை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். வடமாகாண முஸ்லிம்களைப் பொறுத்தவரை இம்முரண்பாடுகள் பின்வரும் வகையில் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றன.

வடமாகாணத்தில் முசலி. எருக்கலம்பிட்டி ஆகிய முஸ்லிம் செறிவுகள் முஸ்லிம் மாகாண சபைக்குள் உட்படுத்தப்படுகின்றன. இம்மாகாணத்தின் மொத்த முஸ்லிம்களில் 15% மானவர்கள் மேற்குறித்த இரண்டு முஸ்லிம் பிரதேச செறிவுக்குள்ளும் வாழ்கின்றார்கள். எஞ்சிய 65% வட மாகாண முஸ்லிம்கள் இம்மாகாணத்தின் வேறு பிரதேசங்களில் பரந்தும். சிதறியும் காணப்படுகின்றனர். பரம்பல் ரீதியான பலவீனத்தைக் கொண்ட இந்த 65% வடமாகாண முஸ்லிம்களும் முஸ்லிம் மாகாண சபைக்குள் உட்படுத்தப்படமாட்டார்கள்.

உண்மையில் பலவீனமான மேற்குறித்த சிறுபான்மையினருக்கு வலுவான பாதுகாப்பு அளிக்கப்படுவது ஜனநாயகப் பாரம்பரியத்திற்கு உட்பட்டதாகும். அந்த அடிப்படையில் பரம்பல் ரீதியாக பலவீனமாகப் பரந்து வாழும் 65% முஸ்லிம் சிறுபான்மையினரின் அரசியல். அத்துடன் ஏனைய பாதுகாப்புக்கள் பற்றித்தான் அரசியல் சீர்திருத்தத்தில் கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்த அடிப்படையில். முஸ்லிம் காங்கிரஸால் முன்வைக்கப்பட்ட முஸ்லிம் மாகாணக்கோரிக்கை வட மாகாணத்தைப் பொறுத்த வரை முஸ்லிம்களின் சிறுபான்மைப் பாதுகாப்பு என்ற நோக்கில் முரண்பாட்டினைக் கொண்டதாகவும். நடைமுறைக்கு பொருத்தமற்றதாகவும் காணப்படுகின்றது.

வடக்கில் முஸ்லிம் சிறுபான்மையினரின் பொருளாதார நட வடிக்கைகள் தமிழ் பெரும் பான்மை மக்களில் தங்கியிருப்பதாகவும் அத்துடன் தமிழர் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் அமைவுற்றதாகவும் காணப்படுகின்றன. பொருளாதார ரீதியாக பெரும்பான்மையினரில் தங்கி வாழும் தன்மை முஸ் லிம்கள் பரவலாக வாழும் பிரதேசங்களில் மட்டுமல்லாது செறிந்து வாழ்கின்ற முசலி; எருக்கலம்பிட்டி ஆகிய முஸ்லிம் பிரதேசங்களிலும் காணப்படுகின்றன. உதாரணமாக முசலிப்பகுதி முஸ்லிம்கள் நீர்ப்பாசனத்திற்கு அருவி ஆற்றையும. எருக்கலம்பிட்டி முஸ்லிம் செறிவுப் பிரதேச முஸ்லிம்களின் தென்னை. பனை. நெல். விவசாயநிலங்கள். சங்கு. அட்டை குளிக்கும் கடல் வலயங்கள் அத்துடன் பலவகைப்பட்ட வியாபார நிலையங்கள் என்பன தமிழர் பெரும்பான்மையான நிர்வாகப் பிரதேசங்களில் அமைவுற்று காணப்படுகின்றதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்றி பொதுவாக எந்தப் பிரதேசத்திலும் இன எல்லைக்கப்பால் பொருளாதார நடவடிக்கைகள் காணப்படுவது இயல்பு. அத்துடன் ஒரு குறித்த எல்லைக்குள் கட்டுப்படுத்தப்படப்போகின்ற பொருளாதார நடவடிக்கைகள் நிச்சயமாக மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியை மட்டுமே தரும். வடமாகாண முஸ்லிம்களின் வர்த்தக. போக்குவரத்து. மீன்பிடி. விவசாயத்துறை நடவடிக்கை முறைகள் குறிப்பாக நோக்கின் இனரீதியாக மட்டுப்படுத்தப்படப் போகின்ற பொருளாதார நடவடிக்கைகள். முஸ்லிம்களுக்கு எதிர்மறையான விளைவுகளையே தரும்.

அரசியல் பிரதிநிதித்துவ ரீதியாகவும் வடமாகாண முஸ்லிம் கள் முஸ்லிம் மாகாணசடை அமைப்புக்குள் பாரிய அளவில் நன்மையடையப் போவதில்லை முஸ்லிம் மாகாண சபைக்குள் அடக்கப்படும் மொத்த சனத் தொகையில் 10% ற்குக் குறை வானவர்களே வடமாகாண முஸ்லிம்கள் செறிவுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பர். ஆயின் முஸ்லிம் மாகாணசபைக்குள் மிகப் பலவீனமான சிறுபான்மையினராக வட மாகாண முஸ்லிம்கள் காணப்படுவார்கள். இதனால் முஸ்லிம் மாகாணசபைக்குள் அரசியல் பிரதிநிதித்துவ. நிதி. வள. ஒதுக்கீட்டில் குறைவான முக்கித்துவமே வடமாகாண முஸ்லிம் களுக்கு வழங்கப்பட வாய்ப்புண்டு.

அதே நேரத்தில் வடமாகாணத்தில் எஞ்சிய 65%மான முஸ்லிம்களின் குரல்கள் ஒலிக்கக்கூடிய வசதிகள் காங்கிரஸின் முஸ்லிம் மாகாண சபைக்குள் செய்யப் படவில்லை என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேற்குறித்தவற்றை தொகுத்துப் பார்க்கின்றபோது வடமாகாண முஸ்லிம்கள் போன்ற சிறுபான்மையினருக்கு முஸ்லிம் மாகாண சபை அல்லாத வேறு மாற்று வழிகள் சிந்திக்கப்படவேண்டி இருக்கின்றன. அம்மாற்று வழிகள் இச்சிறுபான்மையயினரின் அரசியல் பிரதி நிதித்துவத்தை அதிகரிக்க கூடியதாகவும் பாதுகாப்பை உத்தர வாதப்படுத்தக் கூடியதாகவும் அமைய வேண்டும்.

முஸ்லிம் மாகாண சபையில் மேற்குறித்த உள்ளார்ந்த முரண்பாடுகளோடு புவியியல் தொடர்பற்ற பிரதேசங்களை இணைப்பதனால் ஏற்படப் போகின்ற நிர்வாகச் சிக்கல்கள் பரந்துபட்ட முஸ்லிம் செறிவுகளுக்கான பாது காப்பு ஆகியவைகளும் பிரச்சினைகளாகும். அது மாத்திரமின்றி; வடகிழக்கில் தமிழ் - முஸ்லிம். முஸ்லிம் சிங்கள இன உறவுப் பிரச்சினைகளும் முஸ்லிம் மாகாண சபை உலுவாக்கத்தால் உருவாகலாம். மொத்தத்தில் பிரதேச ரீதியாகக் கிழக்கு மாகாண முஸ்லிம் செறிவுகளிலிருந்து தூர விலகிக் காணப் படும் வடம்மாகாண முஸ்லிம்களுக்கு முஸ்லிம் மாகாண சபை பொருத்தமற்ற தீர்வு முயற்சியாக காணப்படுகின்றது.

இதுவரையில் முஸ்லிம் மாகாண சபை எவ்வாறு வட மாகாண முஸ்லிம்களின் சிறுபான்மை நலன்களைப் பேணாது என்ற அம்சம் விளக்கப்பட்டது. அதே நேரத்தில் இக்கட்டுரையின் முன்பகுதியில் வட மாகாண முஸ்லிம்களின் அபிலாசைகளாக அடையாளப்படுத்திய வாழ்வுரிமை. மீளகுடியேற்றம். பாதுகாப்பு. இழப்பீடு. புனர்வாழ்வு. இன ஐக்கியம் போன்ற அம்சங்களை உள்ளடக்கக் கூடிய சரத்துக்கள் முஸ்லிம் காங்கிரஸாலோ அல்லது வேறு கட்சிகளாலோ இது வரை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தீர்மானங்களில் முன் வைக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வடமாகாண முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்களின் வாழ்விட உரிமை அங்கீகரிக்கப்படுவதும். தமது தாயகத்தில் மீள் குடியேற்றத்திற்கான ஒழுங்குகள் செய்யப்படுவதும் மற்ற எல்லாவற்றையும் விட அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியவையாகும். இவ்வம்சம் இம்மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறிக் கொள்ளும் அரசியல் வாதிகளுக்கு குறிப்பாக முஸ்லிம் காங்கிரசுக்கு இன்னும் புலனாகவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினருக்கு நியாயமான தீர்வு

வடமாகாண முஸ்லிம் சிறு பான்மையினரின் நியாயமான அபிலாசைகள். சமாதானப் பேச்சுவார்த்தையில் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசி யமானதாகும். அந்த வகையில்

1. இம்மக்களின் அடிப்படை மனித உரிமையான வாழ்விட உரிமை அங்கீகரிக்கப்படல்.

2. மீள் குடியேற்றத்துடன் தொடர்பான புனர்வாழ்வு. புனர்நிர்மாணம் ஆகிய அம்சங்கள் சமாதானப் பேச்சுவார்த்தையில் எடுத்துக் கொள்ளப்படல்.

3. அதிகாரப் பரவலாக்கல் சீர் திருத்தத்தில் இம்மக்களின் புவியியல் பரம்பல் கருத்திற் எடுக்கப் படல்.

ஆகிய அம்சங்கள் முன்னணிப் பிரச்சினையாகக் காணப்படுகின்றன. மேற்குறித்த இம்மக்களின் அபிலாசைககளை சற்று விளக்கமாக நோக்குவோம்.

### வாழ்விட உரிமை அடிப்படை மனித உரிமை

இச்சிறுபான்மையினரின் பலவந்தமான வெளியேற்றமும் அதன் மூலம் மறுக்கப்பட்ட வாழ்வுரிமைப் பிரச்சினையும் தேசிய பிரச்சினையாகக் கொள்ளப்படல் வேண்டும். இம்மக்களின் வாழ்வு ரிமை மதிக்கப்பட வேண்டும். அது எல்லாச் சாராரினதும் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். குறிப்பாக இம்மக்களின் வாழ்விட உரிமையைப் பறித்த. மீளத் தரமறுத்த L.T.T.E யும் பேச்சுவார்த்தையில் முக்கிய பங்காளர்களாக இருப்பதால் அவாகளின் அங்கீகாரமும் இதற்கு அவசிய மானதாகும்.

### மீள்குடியேற்றம்

முஸ்லிம் அகதிகளுக்கு வட மாகாணத்தில் மீள்குடியேற்றம் அவசியமானதும். அவசரமாகச் செய்யப்பட வேண்டியதுமாகும். தமது பாரம்பரியக் குடியிருப்புக்களிலிருந்து முற்றாக வேரறுக்கப்பட்டவர்கள் இம்மக்கள் என்ற கண்ணோட்டத்தில் வட மாகாணத்தில் இவர்களின் மீள் குடியேற்றத்தோடு தொடர்புடைய சொத்துரிமை. நஷ்டஈடு. புனர்வாழ்வு புனர் நிர்மாணம் ஆகியன திட்டமிடப்பட்டு செயலாற்றப்பட வேண்டும்.

### அதிகாரப்பரவலாக்கத்தில்

மாகாண மட்டத்தில் அதிகாரப்பரவலாக்கம் பற்றி இன்று வெகுவாக சிந்திக்கப்படுகின்றது. வடக்கு கிழக்கில் சமஷ்டி ஆட்சி முறையை அறிமுகப்படுத்து வதற்கான சிபாரிசுகள் மிகச் சாதகமாக எல்லாப் பகுதியினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆகவே தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட. அதிகாரமுடைய சமஷ்டி ஆட்சி முறை ஒன்று வட மாகாண்த்திற்கு அல்லது வடகிழக்கு இணைந்த மாகாணத்திற்கு உருவாக்கப்பட இருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில் முஸ்லிம் சிறுபான்மையினரின் பாதுகாப்பையும் இம்மக்ளின் அரசியல் அபிலாசைகளையும் கருத்துக்கு எடுக்கப்பட்டதான சமஷ்டி அரசியல் அமைப்பு ஒன்று இப்பிரதேசத்திற்கு அறிமுகப் படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினரின் விகிதாச்சார முக்கியத்துவம். புவியியல் பரம்பல்; அரசியல் அபிலாசைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு நோக்குமிடத்து பின்வரும் வகையில் இச்சிறுபான்மையினரின் நலன்கள் பாதுகாக்கப் படக் கூடியதான அரசியல் யாப்பு விதிகள் அறிமுகப்படுத்தப்படலாம். இச் சிறுபான்மையினருக்கு பொருத்தமானதும். நீண்ட காலத்தில் இன ஐக்கியத்தை வளக்கக் கூடியதுமான சிபாரிசுகள் பின்வருமாறு.

1. அரசியல் யாப்பு ரீதியாக சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு வழங்குவதன் மூலமாக

2. அதிகார அரசியல் பிரதிநிதித்துவம் மூலமாக

3. சுதந்திரமான கலாசார நிர்வாக அலகு ஒன்றை இன. சமய. தனித்துவ மேம்பாட்டிற்காக ஏற்படுவதன் மூலமாக

4. இனப் புரிந்துணர்வு. சகிப்புத்தன்மை முதலியவற்றை மேலும் வளர்ப்பதன் மூலமாகச் செய்யப்படலாம்.

### அரசியல் யாப்பும், சிறுபான்மையினர் உரிமைகளும்

சமஷ்டி ஆட்சி முறை நடைமுறையிலுள்ள நாடுகளில் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. சிறுபான்மைப் பாதுகாப்பு விதி முறைகள் அவ்வவ் நாட்டுப் புவியியல். வரலாறு. சிறுபான்மையினத் தனித்துவத்திற்கேற்ப வேறுபட்டுக் காணப்படுகின்றது. வட மாகாண முஸ்லிம் சிறுபான்மை யினரைப் பொறுத்தவரை பின்வரும் சிறுபான்மையினப் பாதுகாப்புக்கள் பொருத்தமுடையன வாக இருக்கும்.

1. முஸ்லிம்களைத் தனித்துவ மான இனம் என்று அங்கீகரித்தல்.

2. சுதந்திரமாக வாழ. தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட. சொத்துக்கள் வைத்திருக்க; சமய. கலாசார தனித்துவத்தைப் பேணத் தடையாக இல்லாதிருத்தல்.

3. தனிமனித அல்லது சிறு பான்மையின் உரிமைகள் பாதிக்கப்படும் போது அவ்வுரிமையை மீண்டும் உறுதிப்படுத்தப்படக் கூடிய நீதிமுறை ஒழுங்குகள் யாப்பின் மூலமாகச் செய்யப்படல்.

4. சிறுபான்மையினரின் நலன்கள் பாதிக்கப்படக்கூடிய யாப்புக்கள். யாப்புத் திருத்தங்கள். சட்ட சபையால் இயற்றப்படாமல் இருப்பதை உத்தரவாதப்படுத்தல்.

### அரசியல் பிரதிநிதித்துவம்

மொத்தச் சனத் தொகையில் 5% மானவர்களாயினும். வடக்கின் பிரதான சிறுபான்மையினர் முஸ்லிம்களாவர். இச்சிறுபான்மையினரின் குரல் தேசிய. அத்துடன் பிரதேச மட்டத்தில் தெளிவாகக் கேட்கக் கூடியதான பிரதி நிதித்துவ ஒழுங்குகளும். முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் பொருத்தமான சுய ஆட்சி முறை அறிமுகப்படுத்தப் படுத்துவதும் அவசியம்.

1. வடமாகாணத்தைச் சேர்ந்த மன்னார் தேர்தல் தொகுதியை (30% முஸ்லிம்கள்) இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கி முஸ்லிம்களின் பிரதிநிதித் துவத்தை உறுதிப்படுத்தலாம்.

2. மாகாண சட்ட சபையில் சிறுபான்மையினருக்கு அதிகரித்த பிரதிநிதித்துவ முறை அறிமுகப் படத்தப்படல். அந்த வகையில் 20% சட்ட சபை பிரதிநிதித்துவம் சிறுபான்மையினருக்கு ஒதுக்கப்படலாம்.

3. சிறுபான்மையினர் செறிவாக வாழும் நிர்வாகப் பிரதேசத்திற்கு (மாவட்ட. உதவி அரசாங்க பிரிவு. கிராம சேவையாளா பிரிவு) கூடுதலான அதிகாரங்களை வழங்குவதன் மூலம் இம்மக் களுக்கு அப்பிரேதசசங்களில் சுயாட்சிச் சந்தர்ப்பத்தை வழங்கல். வடமாகாணத்தில் முசலி. எருக்கலம்பிட்டி. விடத்தல்தீவு. முல்லைத்தீவு. யாழ்ப்பாண நகர முஸ்லிம் செறிவுகளில் மேற்குறித்த அதிகாரப்பரவலாக்கம் செய்யப்படலாம். (படம் 4)

### கலாசார சபை

வடக்கில் சிதறி வாழும் சிறுபான்மையினர் முஸ்லிம்களாவர். சமய கலாசார மற்றும் சிறுபான்மை அபிலாசைகள் ரீதியாக பொதுவான பண்புகளை சிதறி வாழும் இம்முஸ்லிம் சிறுபான்மையினர் கொண்டிருக்கின்றார்கள். இப்பொதுத்தன்மையை மேலும் விருத்தி செய்வதற்கு ஏற்ற வழிமுறைகள் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த அடிப்படையில் சிறுபான்மையினரின் பிரதிநிதி களைக் கொண்ட கலாசாரச் சபை ஒன்று உருவாக்கப்படுவது வடமாகாண முஸ்லிம் சிறு பான்மையினருக்கு பொருத்தமான தாக இருக்கும். சிதறி வாழ்கின்ற முஸ்லீம் சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் இக்கலாசார சபையின் அங்கத்தினராக இருப்பார்கள். சட்டமாக்கல் அதிகாரம் அற்ற இச்சபை. சிறுபான்மையினர்களின் நலன்களை ஒன்றிணைந்த குரலாக உலகிற்கு வெளிக்கொணர உதவும். சிறுபான்மையினரின் அரசியல் பொருளாதார. கலாசார உரிமைகள் பாதிப்புக்குள்ளாகும் போது குரல் கொடுக்க் கூடிய அமைப்பாகவும் இது காணப்படும். அதே நேரத்தில் சிறுபான்மையினரின் கல்வி. சமய. கலாசார அபிவிருத்திக்கு திட்டமிட்டுச் செயலாற்றவும் இச்சபைக்கு இயலுமானதாக இருக்கும். வடக்கின் முஸ்லிம் சிறுபான்மையினரை இணைக்கும் இச்சபை இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடனான. முஸ்லிம்களுடன் சமயக்கலாசாரத் தொடர்புகளை வைத்துக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். அதன் மூலம் இலங்கையின் முஸ்லிம் இனத் தனித்துவத்தை மேலும் வலுப்படுத்தவும் இச்சபை உதவும். மேலே குறித்த கலாசாரத் தொடர்புகள் சர்வதேச ரீதியாகவும் விஸ்தரிக்கப்படலாம். இச்சபை சட்டசபைக்குச் சவாலாக இருக்காது. மாறாக ஆலோசனை வழங்கும் சபையாக இருக்கும். மேற்குறித்த வகையில் ஜனநாயகப் பாரம்பரியம் மேலும் வலுப் பெறும்.

### தமிழ் – முஸ்லிம் உறவு

சிறுபான்மைக்கு உண்மையான பாதுகாப்பு. சிறுபான்மை பற்றிய பெரும்பான்மையினரின் நல் லெண்ணமாகும். இனங்களுக் கிடையில் இனப் புரிந்துணர்வும். இன சகிப்புத்தன்மையும் இல்லாமல் இன ஐக்கியம் உருவாக்கப்பட முடியாது. முன்னர் இனப்புரிந்துணர்வும் இன ஐக்கியமும் வட மாகாணத் தமிழ் முஸ்லிம் இனங்களுக் கிடையில் மிக ஆழமாகக்காணப்பட்டது. இந்நிலை மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். மேலும் சிறுபான்மையினரின் பாதுகாப்பு. உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும். தமிழ்ப் பெரும்பான்மையினரின் மிகையான வாக்குப் பலம் பற்றிய அச்சம் சிறுபான்மையினருக்கு இல்லாமல் ஒழிய வேண்டும்.

### முடிவுரை

இலங்கையின் இனப் பிரச்சினை யில் மோசமாகப் பாதிக் கப்பட்ட மக்கள் வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினராவர். இம்மக்க ளின் வாழும் உரிமை மறுக்கப்பட்டு வடக்கிலிருந்து வெளியேற்றப் பட்டார்கள். இது வரை வடக்கில் சுதந்திரமாக மீளக்குடியேற இம்மக்கள் அனுமதிக்கப்படவில்லை. சர்வதேச ரீதியாக மேற்குறிப்பிட்ட பண்பு களைக் கொண்டு காணப்படும் ஏனைய மக்கள் அகதிகள் எனக் கருதப்பட்டு விசேட அபய மளிக்கப்பட்டு வருகின்றார்கள் இலங்கையில் வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினர் இடம்பெயர்ந்தவர்கள் என்ற சொற் பதத்துக்குள் உள்ளடக்கப்பட்டு இம்மக்களின் வாழும் உரிமைப் பிரச்சினையின் தாற்பரியம் மறைக்கப்பட்டு காணப்படுகின்றது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்று மனப்பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கால கட்டத்திலாவது வட மாகாண முஸ்லிம் சிறுபான்மை யினரின் பிரச்சினைகள் சரியாகச் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டியது அவசியமாகும். இம்மக்களுக்கு மறுக்கப்பட்ட வாழும் உரிமையை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இவர்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை

எஸ். எச். ஹஸ்புல்லா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிழக்கில் இனவிகிதாச்சாரம் மாற்றமடைந்தது எப்படி?

தம்பிப்பிள்ளை தேவராஜ்
கிழக்குப் பல்கலைக்கழகம்

தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இன்று இடம் பெற்று வருகின்ற சிங்களக் குடியேற்றத்திட்டங்கள் அனைத்தும் மேலெழுந்த வாரியாக இல்லாமல் முழுமனே நிறுவனத் தன்மை வாய்ந்ததாக அரசாங்கத்தின் அனுசரணையுடன் மற்றும் சிங்கள பௌத்த மத நிறுவனங்களினூடாக தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறான குடியேற்றத்திட்டங்களின் உடனடி அவசியம் சிங்கள அரசாங்கங்களுக்கு ஏன் ஏற்பட்டது? அதன் தொடர்ச்சிக்குக் காரணங்கள் என்ன? என்பன போன்ற பொதுவான கேள்விகளை நாம் எழுப்புகின்றபோது சிங்களப் பேரினவாதிகளின் சார்பாக திரைமறைவில் பலமான இனவாதச் சிந்தனைகள் இந்த நடவடிக்கைக்கு காலத்துக்கு காலம் பின்புலத்தில் இருந்து செயற்பட்டு வந்துள்ளதனை அவதானிக்க முடியும்.

தமிழர்களின் பிரதேசத்தினைப் பொறுத்தவரை கிழக்கு மாகாணமே இன்று அதிகளவில் சிங்களக் குடியேற்றங்களின் மூலமாக தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பிரதேசமாக இருந்து வருகின்றது. இதன் மூலம் தமிழர்களின் பிரதேச ரீதியான ஒருமைத் தன்மை சிதைக்கப்பட்டுள்ளதுடன் இதனூடாக சிங்கள மயமாக்கல் என்ற கொள்கையினை ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

எவ்வாறாயினும் தமிழர்களைப் பொறுத்தவரை சிங்களக் குடியேற்றங்களின் தொடர்ச்சி பல ஆபத்தான விளைவுளையே தோற்றுவித்துள்ளது. அரசியல் ரீதியாகவும் மற்றும் கலாசாரப் பண்பியல்புகள் ரீதியாகவும் தமிழர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்தக் கட்டுரையானது கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் எவ்வாறு தமிழ் பேசும் மக்களின் இன ரீதியான செறிவினை அல்லது பரம்பலினை மாற்றியமைத்துள்ளது என்பதுடன படிப்படியாக சிங்களவர்களின் தொகை அதிகரித்து வந்துள்ளது என்பதைப் பற்றிய நோக்காகவே அமைகின்றது.

இலங்கையில் இதுவரை 11தடவைகள் நாடளாவிய ரீதியில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாவது கணக்கெடுப்பு 1827இல் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து1881, 1891, 1901, 1911, 1921, 1946, 1952, 1963, 1971, 1981 ஆகிய ஆண்டுகளின் போது சனத்தொகைக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் 1981ம் ஆண்டின் பின்னர் இதுவரை கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. சிக்கல் நிறைந்த இன்றைய சூழ்நிலை அதற்கு உகந்ததாக இல்லை எனக் கூறப்படுகின்றது.

## திருகோணமலையில் குடியேற்றங்கள்:-

திருமலை மாவட்டத்தில் முதல் தடவையாக சேனநாயக்காவின் ஆட்சிக்காலத்தின் போது 1948ம் ஆண்டு கந்தளாய் என்ற தமிழ்க் கிராமத்தில் 1320 சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். 1949இல் பார்வதிபுரம் எனும் தமிழ்க் கிராமம் 'பதவியா' எனப் பெயர் மாற்றப்பட்டு 1112 சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர். 1950இல் அல்லையில் 744 சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர். 1957இல் முதலிக் குளம் மொறவேவ எனப் பெயர் மாற்றப்பட்டு 612 சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர்.1960இல் அபயபுரத்தில் 60 சிங்களக்குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இவற்றினை விட உப்புவெளிபுரம், மட்கோ, திரியாய், மகிந்தபுரம், ஜெயந்திபுரம், ஆண்டாள்குளம், சீனன்குடா, பாலன் போட்டஆறு, பெரியகுளம், கிளிவெட்டி, கந்தளாய் 96ம் கட்டை, முள்ளிப்பொத்தானை, புடவைக்கட்டு மற்றும் திருமலை நகரினை அண்டிய பிரதேசங்களிலும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பெரும் தொகையான சிங்களவர்களைக் குடியமர்த்தியதுடன், தொன்று தொட்டு வழங்கி வந்த தமிழ்ப் பெயர்களையும் மாற்றி சிங்கள நாமங்களைச் சூட்டியுள்ளன. இந்தக் குடியேற்றங்களின் மூலமாக இன்று திருமலை மாவட்டத்தில் இன ரீதியான விகிதாசாரம் சடுதியான ஒரு மாற்றத்துக்குட்பட்டுள்ளது.

## திருமலையில் இன விகிதாசாரப் போக்கு:

முதல் தடவையாக 1827ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீடுகளின் போது திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களின் சனத்தொகை 15,663 ஆகக் காணப்பட்டது. இது மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 81.8வீதமாகும். இதே யாண்டில் முஸ்லிம்களின் தொகை 3,245ஆகவும், சிங்களவர்களின் தொகை 250 ஆகவும் காணப்பட்டது. விகிதாசாரரீதியில் இவை முறையே 16.9வீதம், 1.3வீதம் என்ற அளவில் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1881இல் கணிப்பீடு இடம் பெற்றது. இதில் தமிழர்கள்64.8வீதமாகவும், முஸ்லிம்கள்25.0வீதமாகவும், சிங்களவர்கள்4.2 வீதமாகவும் காணப்பட்டனர். 1891இல் 66.4வீத தமிழர்களும், 25.0வீத முஸ்லிம்களும், 4.3வீதமான சிங்களவர்களும் காணப்பட்டனர். 1901இல் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் படி தமிழர்கள் 60.0 வீதமாகவும், முஸ்லிம்கள் 29.0 வீதமாகவும், சிங்களவர்கள் 4.2 வீதமாகவும் வாழ்ந்தனர். இதனை அடுத்து 1911ம் ஆண்டில் குடிசன ம்திப்பீடு இடம் பெற்றது. இந்தக் கணிப்பீடுகளின்படி தமிழர்கள் 57.9வீதமாகவும், முஸ்லிம்கள் 32.6வீதமாகவும், சிங்களவர்கள்3.8 வீதமாகவும் வசித்தனர். 1921ம் ஆண்டின் மதிப்பீடுகளினை அவதானிக்கும் போது திருமலையில் தமிழர்கள் 54.5வீதம், முஸ்லிம்கள் 37.7வீதமாகவும், சிங்களவர்கள் 4.4வீதம் என்ற அளவிலும் வசித்தனர். இதுவரை காலமும் இடம் பெற்ற சனத் தொகைக் கணிப்பீடுகளினை நன்கு அவதானிக்கும் போது, முஸ்லிம்களின் விகிதாசாரமும் மாவட்டத்தில் அதிகரிக்கும் போக்கினை வெளிக்காட்டும் அதே வேளை தமிழர்களின் விகிதாசாரம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. இக்காலப் பகுதிகளில் சிங்களவர்களின் தொகையில் ஒரு மெதுவான அதிகரிப்பினையே அவதானிக்க முடிகின்றது.

1921ம் ஆண்டின் பின்னர் திருகோணமலை மாவட்டத்தில் குடிசனப் பரம்பல் போக்கில் பெரு மாற்றத்தினை அவதானிக்கமுடிகின்றது. 1946ம் ஆண்டில் நடத்தப்பட்ட குடிசனக் கணிப்பீடுகளின்படி மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் தமிழர்கள் 44.5 வீதமாகவும்,முஸ்லிம்கள் 30.6வீதமாகவும், சிங்களவர்கள் 15.3வீதம் என்ற அளவினைப் பெற்றுக் கொண்டனர். இங்கு சிங்களவர்களின் விகிதாசாரம் ஒரு திடீர் வளர்ச்சியினை வெளிக்காட்டுகின்றது. இக்காலப்பகுதிகளின் போதுதான் திருமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பமானது.

இலங்கை சுதந்திரமடைந்ததனைத் தொடர்ந்து 1953ம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீடு இடம் பெற்றது. இந்தக் கணிப்பீடுகளின்படி மாவட்டத்தில் தமிழர்கள் 44.7 வீதம், முஸ்லிம்கள் 34.1வீதம், சிங்களவர்கள்18.2 வீதம் என்ற நிலைக்கு மாற்றமுற்றிருந்தனர். இதனை அடுத்து 1963ம் ஆண்டு தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகியோர் முறையே 39.1 வீதம்,30.8வீதம், 29.6வீதம் என்ற அளவினையும், பின்னர் இது 1971இல் முறையே38.1வீதம், 31.8வீதம், 29.1வீதம் என்ற விகிதாசார நிலைக்கு படிப்படியாக மாற்றமடைந்து வந்துள்ளது. இக்காலப்பகுதிகளின் போது சிங்களவர்கள் தொகை மிகவேகமாக அதிகரித்திருக்கும் அதே வேளை தமிழர்களின் விகிதாசாரம் மிகவும் வீழ்ச்சிநோக்கிச் செல்வதனைக் காணலாம். இதற்குப் பின்புலத்தில் குடியேற்றங்களே காரணமாக அமைந்து காணப்படுகிறது.


இறுதியாக 1981ம் ஆண்டு நடைபெற்ற கணக்கெடுப்பின்படி திருமலை மாவட்டத்தில் தமிழர்களின் தொகை 93.510 ஆகவும், முஸ்லிம்களின் தொகை 74.403ஆகவும், சிங்களவர்களின் தொகை86.341 எனும் நிலைக்கு மாற்றமடைந்துள்ளது. இதனை விகிதாசார ரீதியாக அவதானித்தால் தமிழர்கள்36.4 வீதம் எனவும், முஸ்லிம்கள்29.0 வீதமாகவும், சிங்களவர்களின் தொகை 33.6 வீதம் என்ற அளவினைப் பெற்றுள்ளது. இதன்படி அவதானிக்கின்ற போது திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களும், சிங்களவர்களும் ஏறத்தாழ சமமான மக்கள் தொகையை கொண்ட இனக் குழுக்களாக மாற்றப்பட்டுள்ளதுடன், மாவட்டத்தில் இரண்டாம் தர நிலையில் காணப்பட்ட முஸ்லிம்கள் மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவை யாவும் திருகோணமலை மாவட்டத்தில் இடம் பெற்ற மிகப்படுமோசமான திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களின் விளைவுகளேயாகும். திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சிங்களவர்களின் குடியேற்ற நடவடிக்கையின் மூலம் திருமலையில் இன விகிதாசாரம் எத்தகைய மாற்றத்துக்குள்ளானது, என்பதனைப் பின்வரும் அட்டவணையின் மூலமாகவும் வரைபின் மூலமாகவும் மேலும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

காட்டப்பட்ட அட்டவணை மூலமாகவும், வரைபின் மூலமாகவும் திருகோணமலை மாவட்டத்தில் குடியேற்றங்களின் மூலமாக மாற்றமடைந்த இனவிகிதாசார மாற்றங்கள் மிகவும் தெளிவாகக்காட்டப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தினைப் பொறுத்தவரை படிப்படியாக இந்த மாவட்டம் இன்று சிங்களவர்களிடம் பறிபோய்விட்டதென்றே கூறவேண்டும். இது தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை மிகவும் அபாயகரமான விளைவுகளையே நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் தோற்றுவிக்கப்போகின்றது.

**அட்டவணை 1**
**குடிசன மதிப்பீடு - திருகோணமலை மாவட்டம் (1827 - 1981)**

| ஆண்டு | தமிழர் | % | முஸ்லிம்கள் | % | சிங்களவர்கள் | % |
|---|---|---|---|---|---|---|
| 1827 | 15,663 | 81.8 | 3,245 | 16.9 | 250 | 1.3 |
| 1881 | 14,394 | 64.8 | 5,746 | 25.9 | 935 | 4.2 |
| 1891 | 17,117 | 66.4 | 6,426 | 25.0 | 1,109 | 4.3 |
| 1901 | 17,069 | 60.0 | 8,258 | 29.0 | 1203 | 4.2 |
| 1911 | 17,233 | 57.9 | 9714 | 32.6 | 1138 | 3.8 |
| 1921 | 18,586 | 54.5 | 12,846 | 37.7 | 1501 | 4.4 |
| 1946 | 33,795 | 44.5 | 23,219 | 30.6 | 11,606 | 15.3 |
| 1953 | 37,517 | 44.7 | 28,616 | 34.1 | 15,296 | 18.2 |
| 1963 | 54,050 | 39.1 | 42,560 | 30.8 | 40,950 | 29.6 |
| 1971 | 71,749 | 38.1 | 59,924 | 31.8 | 54,744 | 29.1 |
| 1981 | 93,510 | 36.4 | 74,403 | 29.0 | 86,341 | 33.6 |

**வரைபு - 1 திருகோணமலை மாவட்டம்**




மட்டு - அம்பாறை மாவட்டங்கள் பற்றி அடுத்த இதழில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையக மக்களும் அரசியல் தீர்வு யோசனைகளும்

பொதுவாக ஆராயுமிடத்து அரசு முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனையிலே இரு பாரிய முரண்பாடுகளைக் காணலாம்.

முதலாவதாக இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு, சிறுபான்மை மக்களுக்கு நியாயம் வழங்குவதற்கு, சந்திரிகா அரசாங்கம் கொண்டுள்ள ''உண்மையான'' அக்கறையை உலகிற்கு உயர்த்தும் வகையிலே இத்தீர்வு அமைந்துள்ளதென சிலர் கண்மூடித்தனமாக துதிபாடிய போதும், உண்மையில் ''இலங்கையில் வாழும் பல்வேறு சமூகங்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்குப் பதிலாக மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதே அதன் சாராம்சமாக உள்ளது''

அரசின் தீர்வு யோசனையின் உண்மையான நோக்கம் சிறுபான்மை மக்களுக்கு அதிகாரத்தில் உரிய அந்தஸ்து வழங்குவதாக இருந்தால் இலங்கையில் வாழும் மூன்று பிரதான சிறுபான்மை மக்களுக்கு (ஈழத் தமிழர், முஸ்லிம்கள், மலையக தமிழர்) பிராந்திய அடிப்படையிலான அதிகார நிர்வாக அலகு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், அரசின் ஆலோசனையில் சகல மாகாணங்களுக்கும் சமமான அதிகாரப் பகிர்வு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் மாத்திரம் ஒருசிறு வித்தியாசம். இரு மாகாணங்களும் இணைக்கப்பட்டு இரு மாகாணங்களினதும் சிங்கள குடியேற்றப் பகுதிகள் ஏனைய சிங்கள மாகாணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய மாகாண அதிகாரப் பரவலாக்கம் சகலரையும் விட மலையகத் தமிழ் மக்களையே பாதிக்கிறது.

மலையக மக்களில் 82 சத வீதத்தினர் மத்திய, ஊவா, சப்பிரகமுவ ஆகிய மூன்று மாகாணங்களில் உள்ள ஆறு மாவட்டங்களில் வாழ்கின்றனர் என்பதை அட்டவணை 01 காட்டுகிறது.

வேறு விதமாகக் கூறுவதெனில் வடக்கு கிழக்கில் வாழும் ஈழத்தமிழரின் வீதத்தை விட (72%) மத்திய மலை நாட்டில் வாழும் மலையகத் தமிழரின் வீதம் (82%) அதிகமாகும்.

ஆயினும் ஒரு மாகாணத்தில் கூட மலையக தமிழர் பெரும்பான்மையாக அமையாதவாறு இம்மாகாண எல்லைகள் செயற்கையாக வகுக்கப்பட்டுள்ளன என்பதை அட்டவணை 02 காட்டுகிறது.

வடக்கு கிழக்கில் வாழும் ஈழத்தமிழரின் தொகை அவ்விரு மாகாண சனத்தொகை

**யௌவனன்**

யில் 54% சத வீதமாக ஆக்கப்பட்டுள்ளது. திட்டமிட்ட குடியேற்றம் இவ் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகும். மறுபுறத்தில் மத்திய மலை நாட்டில் மூன்று மாகாணங்களில் (மத்திய, ஊவா, சப்பிரகமுவ) மலையக தமிழரின் தொகை 14.4 சத வீதமாக ஆக்கப்பட்டுள்ளது.

இம் மூன்று மாகாணங்களிலும் உள்ள மலையகத் தமிழர் அடர்த்தியாக அல்லது மாகாணமாக ஆக்கப்பட்டால் அங்கு வாழும் சனத்தொகையில் 85 சத வீதத்திற்கு அதிகமானோர் மலையக மக்களாகவே இருப்பர்.

இத்தகைய பிராந்திய நிர்வாக அலகொன்றை வழங்குவதன் மூலமே மலையக தமிழ் மக்களின் சமூக பாதுகாப்பையும், சமூகப் பொருளாதார அபிவிருத்தியையும் உறுதிப்படுத்த முடியும்.

ஆனால் அரசின் அரசியல் தீர்வு யோசனைகள் அமுலாக்கப்படுமானால் மலையக மக்கள் நிரந்தர சிறுபான்மையாக சகல மாகாணங்களிலும் ஆக்கப்பட்டு அரசியல் பலத்தில் மிகவும் குன்றிய நிலையில் சிதைக்கப்பட்ட ஒரு சமூகமாக சீரழிய நேரும்.

இத்தீர்வுத் திட்டத்திலுள்ள இரண்டாவது முரண்பாடு சிறுபான்மை மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலில் இடமளிப்பதற்கு பதிலாக புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு சர்வதேச ஆதரவு தேடுவதாக அமைந்திருப்பதாகும். எனவே இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பது ஈழத்தில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதிலேயே தங்கியுள்ளது எனற அர்த்தத்தைப் பெறுகிறது. ஆகவே தான் வன்முறை அரசியலில் ஈடுபடாத காரணத்தால் மலையக மக்களுக்கு அரசியல் தீர்வு எதுவும் அவசியமில்லை என அரசு கருதுகிறது போலும்.

மலையக மக்களைப் பொறுத்தளவில் சந்திரிகா ஒரு அசல் கண்டிய நிலபிரபுத்துவ பிரதிநிதியாகவே இவ் விடயத்தில் நடந்து கொண்டுள்ளார். அவரது அரசியல் யாப்பு நகல் வரைபில் முன்னைய யாப்புகளில் இடம் பெற்றிருந்த மலையக மக்களுக்குக்கெதிரான சரத்துக்கள் யாவும் அட்சரம் தவறாமல் இடம் பெற்றுள்ளன. பாரபட்சமான பிரஜா உரிமை சட்டமும், ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய கடவுச்சீட்டுப் பெற்றவர்களையும் அவர்களது சந்ததியினரையும் நாடு கடத்த வகை செய்யும் சட்டமும் அப்படியே இடம் பெற்றுள்ளது.

அட்டவணை – 01

| மாகாணம் | மாவட்டம் | மாவட்ட சனத்தொகையில் மலையக தமிழர் | மொத்த மலையக தமிழரில் வீதம் |
|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 1. நுவரெலியா | 45.7 % | 31.5 % |
| | 2. கண்டி | 11.4 % | 12.0 % |
| | 3. மாத்தளை | 9.1 % | 5.6 % |
| ஊவா மாகாணம் | 1. பதுளை | 22.2 % | 15.8 % |
| சப்பிரகமுவ மாகாணம் | 1. இரத்தினபுரி | 10.8 % | 10.4 % |
| | 2. கேகாலை | 5.8 % | 6.7 % |
| மொத்தம் | | | 82.0 % |

அட்டவணை – 02

| மாகாணம் | மாவட்டம் | மாவட்ட சனத்தொகையில் மலையக தமிழர் | மொத்தசனத்தொகையில் மலையக மக்கள் |
|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 1. நுவரெலியா | 45.7 % | 22.1 % |
| | 2. கண்டி | 11.4 % | |
| | 3. மாத்தளை | 9.1 % | |
| ஊவா மாகாணம் | 1. பதுளை | 22.2 % | 12.7 % |
| சப்பிரகமுவ மாகாணம் | 1. இரத்தினபுரி | 10.8 % | 8.3 % |
| | 2. கேகாலை | 5.8 % | |
| மொத்தம் | | | 14.4 % |

த. வி. கூட்டணி பா. உறுப்பினர்

# கலாநிதி நீலன் திருச்செல்வத்துக்கு குமார் பொன்னம்பலத்திடமிருந்து

## ஒரு பகிரங்க கடிதம்!

கடந்த ஒக்டோபர் 9ஆம் திகதி திங்கட்கிழமை வீரகேசரியின் முதலாம் பக்கத்தில் வெளிவந்த செய்தி பற்றியே இங்கு குறிப்பிடுகின்றேன். கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாயப் பாராளுமன்ற மாநாட்டுக்கு இந்தியத் தூதுக்குழுவின் அங்கத்தவர்களுள் ஒருவராக வந்த தமிழ் நாட்டின் சட்டப் பேரவைச் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா அவர்களுடன் தாங்கள் நடாத்திய விரிவான பேச்சுவார்த்தை பற்றி அதில் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த அறிக்கை ஏனைய செய்தித்தாள்களில் அதிலும் குறிப்பாக ஆங்கில அல்லது சிங்கள மொழிச் செய்தித்தாள்களில் இடம்பெறாதது குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பின்போது வடக்கு-கிழக்கு பிரச்சினை பற்றியும், குறிப்பாகத் தற்போதைய நிலைமை பற்றியும் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் பற்றியும் தாங்கள் முத்தையாவுக்கு விரிவாக எடுத்துரைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் முத்தையா அவர்களுக்கு மேற்படி விடயங்களைப் பற்றிக் கூறுவதற்கு, இதுவிடயமாக தங்களுடைய சொந்த, பகிரங்க நிலைப்பாடு என்ன என்பதை ஆராய்வோம்.

ஒவ்வொரு மாதத்தின் ஆரம்பத்திலும் பாராளுமன்றத்தில் அவசரகால நீடிப்பு விவாதம் இடம் பெறுகின்றது. அதிலும் சரி இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின் நடைபெற்ற 12க்கும் மேற்பட்ட விவாதங்களிலும் சரி, வடக்கு - கிழக்கு நிலைமை பற்றியும் தமிழர்களின் நிலைமை பற்றியும் தாங்கள் எப்போதாவது ஒரு வார்த்தையாவது பேசியிருக்கின்றீர்களா? சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற கடைசி விவாதத்திலாவது தமிழர்களுக்காக ஏதாவது பேசினீர்களா? சமீபகாலங்களில் தமிழர்கள் சார்பில் பேசுவதற்கு சில ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்த அளவுக்குக்கூட நீங்கள் முன்வரவில்லை. தாங்கள் பாராளுமன்றத்தில் பதவி வகிக்கும் கடந்த 14 மாதங்களின் போது ஏழு தடவை கூட - தமிழர் பிரச்சினை பற்றியோ, வடக்கு -கிழக்கில் வாழும் அப்பாவித் தமிழ் மக்களின் பரிதாப நிலைபற்றியோ பாராளுமன்றத்தில் ஏதாவது பேசியிருக்கிறீர்களா? இந்த நிலையில் தாங்கள் முதலைக் கண்ணீர் வடிப்பது ஏன்? தமிழர்கள் தமக்குள்ள குறைகளை எடுத்துரைப்பதற்குப் பாராளுமன்றம் ஓர் அதிமுக்கியமான இடமெனத் தாங்கள் கருதவில்லையா? தமிழர் பிரச்சினையை எடுத்துக் கூற இதனைத் தாங்கள் எப்படிப் பயன்படுத்தியுள்ளீர்கள்?

அவசரகால நீடிப்புப் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடாத்தப்படும் போது, 1994 ஓகஸ்ட்டுக்கு முன் தங்கள் கட்சி அரசாங்கத்துக்கு எதிராகவே வாக்களித்து வந்தது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் தங்கள் கட்சி வாக்கெடுப்பு நேரத்தில் எப்பொழுதும் பாராளுமன்றத்திலிருந்து நழுவிவிடுகிறதே! இதுவா நேர்மை? தங்கள் கட்சி யாரை ஏமாற்றப் பார்க்கின்றது? - தமிழர்களைத் தான்! அவசரகால நீடிப்புக்கு எதிராக தாங்கள் வாக்களித்துள்ளீர்களா? வடக்கு கிழக்கு நிலைமையை அல்லது தமிழர்களின் நிலைமையை, இப்போதைய அரசாங்கம் கையாளும் முறைக்கும் முன்னைய அரசாங்கம் கையாண்ட முறைக்கும் எவ்வளவோ வித்தியாசம் என்பதுதான் தங்களின் அல்லது தங்கள் கட்சியின் நிலைப்பாடா. அப்படியாயின் எவ்விதத்தில் என்று கூறுவீர்களா? பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்று தங்களுக்கும் தங்கள் கட்சிக்கும் எதிராகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டு நியாயமானது என்பதைத் தாங்கள் உணரவில்லையா?

''போர் நீடிக்கின்ற காரணத்தினால் பிரச்சினை தீர்க்கப்படப் போவதில்லை. அழிவு ஏற்படுவது தான் மிச்சம்'' என்று தாங்கள் முத்தையாவுக்குக் கூறியதாக அறிக்கை விடப்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற பாராளுமன்ற விவாதத்தில் இதனைக் கூறியிருந்தால் முழு உலகுமே குறிப்பாக சிங்கள, தமிழ் மக்கள் உங்கள் பகிரங்க நிலைப்பாட்டை அறிந்து கொண்டிருப்பார்களே.

போரை முடிவுக்குக் கொண்டுவந்து பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காணமுடியாதா என முத்தையா கேட்ட கேள்விக்கு ''அது உங்கள் கைகளில்தான் உள்ளது'' என்று பதிலளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கூறுவதன் மூலம் தாங்கள் என்ன கருதுகின்றீர்கள்? வெளியுலகுக்குத் தெரிவியுங்கள். இவ்விடயத்தில் முத்தையா உதவமுடியும் என்பது தான் தங்கள் கருத்தா? தமிழ் நாடு இந்த விடயத்தில் உதவமுடியும் என்பது கருத்தா? இந்த விடயத்தில் இந்தியா உதவமுடியும் என்பது கருத்தா? 1991 மே மாதத்துக்குப் பின்னர் இந்தியா இலங்கைத் தமிழர்களைக் கைகழுவிட்டுவிட்ட விபரம் தங்களுக்குத் தெரியாதா? தங்களைப் போல் இந்தியாவும் ஏன் மௌனமாக இருக்கின்றது என்று தாங்கள் முத்தையாவிடம் கேட்கவில்லையா?

புரட்சித் தலைவி முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் சென்று இங்குள்ள நிலைமையை விளக்கிக் கூறுமாறும், வடக்கிலிருந்து இடம் பெயர்வோர் தொகை நாளுக்கு நாள் அதிகரிப்பதாகவும், உணவுப் பற்றாக்குறையால் அப்பாவிப் பொதுமக்கள் வாடுவதாகவும் அவரிடம் எடுத்துக் கூறுமாறும், தாங்கள் முத்தையாவிடம் கேட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முழு உலகமும், அதிலும் குறிப்பாகச் சிங்கள மக்களும் தெரிந்து கொள்வதற்காக இதுபற்றித் தாங்கள் பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறாதது ஏன்? தங்களால் இந்த அரசாங்கத்தின் வேட்பாளர் பட்டியலில் உட்புகுத்தப்பட்ட இலங்கையின் வெளிநாட்டமைச்சர் இவற்றைப் பற்றி உலக அரங்கான -ஐக்கியநாடுகள் சபையில் பிரஸ்தாபிக்க தாங்கள் வழிவகுத்திருக்க வேண்டாமா? இவற்றைப் பற்றிக் கூறாமல், ஒருபக்க நியாயம் மட்டும் கூறியதற்காக வெளிநாட்டமைச்சரைத் தாங்கள் கண்டிக்கதாதது ஏன்? இந்தியா இனிமேலும் படகுகளை அனுப்புமென்றும் வானிலிருந்து உணவுப்பொதிகளைப் போடுமென்றும் எதிர்பார்க்கின்றீர்களா?

இலட்சோப இலட்சம் மக்கள் வீடுவாசல்களை இழந்து அகதிகளாக அவதிப்படுவதாகவும், தமிழ் நாட்டு மக்களின் கவனம் இத்தகைய அகதிகள் பால் திரும்பவேண்டுமெனவும் அப்பொழுதுதான் நீதி கிடைக்கும் எனவும் இதைச் செய்வது தங்கள் கைகளிலும் தமிழ் நாட்டு அரசாங்கத்தின் கைகளிலும்தான் இருக்கின்றது எனவும், தாங்கள் முத்தையாவிடம் தெரிவித்ததாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலைமையைத் தாங்கள் ஏன் பகிரங்கமாகக் கூறமுன்வரவில்லை? இந்திய அரசாங்கத்துக்குப் புறம்பாக முத்தையாவோ தமிழ்நாட்டு அரசாங்கமோ முன்வரும் என உண்மையாகத் தாங்கள் நம்புகின்றீர்களா? இதன் மூலம் யாரை ஏமாற்றப் பார்க்கின்றீர்கள்? இலங்கைத் தமிழர்களையா?

வெட்கத்தைவிட்டு அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் தாங்களும் தங்கள் கட்சியும் இப்படித் தனிப்பட்ட முறையில் பிரஸ்தாபிக்கலாமா?

→ 15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**சமாதான முயற்சிகளில் பல வருடங்களாக செயல்படும் நீங்கள் "அரசியல் யாப்பு சீர்திருத்த இயக்கத்தின் பேச்சாளராக இருக்கின்றீர்கள். ஆனால் வெண்தாமரை இயக்கத்தை விமர்சனத்திற்கு உட்படுத்துகின்றீர்கள் அதை தெளிவுபடுத்த முடியுமா?**

நான் வெண்தர்மரை இயக்கத்தோடு இணையாமைக்கான காரணங்களை கூறுவது சுலபம்.

இவ் யுத்தத்திற்கு காரணமான அதிகாரத்தை நாம் தெரிந்து கொள்ளல் வேண்டும். இவ் அதிகாரம் வடக்கிலும், தெற்கிலும் தெளிவாக நடைமுறையில் உள்ளது. சமாதானத்தை தோற்றுவிக்க எனச் சொல்லப்பட்டு நடைபெறும் இவ் யுத்தம் இரண்டு பகுதியினரையும் மண்டியிட வைக்கின்றது. யுத்தம் தொடர்பான மூன்றாவது விடயம். அது யுத்தம் தொடர்பாக மக்கள் கொண்டிருந்த அபிப்பிராயங்களின் வெளிப்பாடு ஆகும் என்ற சந்திரிகா, யுத்தம் என்றதை "அநியாயமான, சுயநலமான வியாபாரிகளின் யுத்தம்" என்றார். பொ.ஐ.மு.க்கு அன்று புலிகளைப் போலவே தெற்கின் நிலைமையையும் அறியக் கூடியதாகவிருந்தது.

ஆனால் ஆட்சி பீடம் ஏறியதும், அரசு கண்மூடித்தனமாக செயற்படத் தொடங்கியது. தமக்குத் தெரிந்த இரண்டு பகுதியினரையும் செய்வது மிக உயர்ந்த அளவில் நடைபெறுகின்றது. இன்னும் இராணுவத்திற்குரிய ஆட்சேர்ப்பு நடைபெறுவது சிங்கள -பௌத்த, அடிப்படை ரீதியாக ஆகும்.

இவ் இராணுவத்தின் நோக்கம் சிங்கள -பௌத்த இனத்தைப் பாதுகாப்பதாகும். புலிகள் சமாதானத்தை குலைத்துவிட்டனர் என்று கூறுகின்றார்கள். ஆனால் சமாதானத்தை ஏற்படுத்த எவராவது உறுதியான முறையில் முயற்சித்தார்களா?

பொ.ஐ.மு.கிடைத்த ஒரு வரப்பிரசாதத்தை பிரபாகரனை சாட்டாகக் கொண்டு தட்டிக் கழித்தது.

தெற்கில் யுத்தம் பெற்றுத்தந்துள்ள பிரபாகரனுக்கான இடத்தை கலைத்தால் அவரை அது பிரச்சினைக்குட்படுத்தும். இவ் அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியதுடன் ஏற்பட்ட சமாதானப் போட்டியில் வெற்றி கொள்ளவே பிரபாகரன் யுத்தத் நிறுத்தத்துக்கு ஆணையிட்டார். ஆனால் பிரபாகரன் பயந்த நிலையானது அரசுக்கும், தெற்கு யுத்தவாதிகளுக்கும் ஏற்பட்ட அந்நியத்தன்மையால் நீங்கியது. அரசுக்கு இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்ள முடியாததால், பிரபாகரன் தெற்கில் தனது மேடையை சிறப்பாக அமைத்துக் கொண்டார்.

# யுத்தச் சேற்றிலிருந்து வெளியேற வெண்தாமரையால் முடியாது!

(தென்னிலங்கையில் இருந்த யுத்தத்துக்கு ஆதரவான சக்திகள், புலிகள்) மக்கள் சம்மதத்தோடு முறியடிக்காது. தெற்கின் யுத்த அதிகாரத்தோடு மோதிக் கொண்டது.

அரசாங்கம் முன்வைத்த அதிகாரம் சமாதானம் தொடர்பான ஏய்ப்பு நடவடிக்கையாகவும் யுத்தத்தை நடாத்துவதற்காக மக்களிடம் மறைமுக வேண்டுதலையும் வெண்தாமரை மூலம் நிறைவேற்றுவதாகவும் ஆயிற்று. " வெண்தாமரை தெளிவாகவே ஓர் யுத்த இயக்கமாக வெளிப்பட்டு உள்ளது. இன்று இது கைநீட்டி குற்றம் சாட்டுவது, வேலிக்கு அப்பால் உள்ள பகுதியினரை மட்டுமே. வெண்தாமரை மூலம் யுத்தத்தை மூடி மறைத்து எதிரிகள் வேலிக்கு அப்பால் இருக்கின்றனர் என்று அரசு ஏமாற்றுகின்றது.

**உங்களிடம் வெண்தாமரை தொடர்பான விரோத மனப்பான்மை இருப்பது அரசின் சமாதான இயக்கத்தோடு சம்பந்தப்படாமல் விடுத்து அந்நியப்பட்டிருப்பதால் தானா?**

வெண்தாமரையை அரசு செயற்படுத்துவதில் பிரச்சினைகள் இல்லை. பிரச்சினை இருப்பது அது செயற்படும் விதத்தில் ஆகும். கொழும்பில் இருக்கும் வெண்தாமரை அதிகாரிகள் என்ன கூறினாலும் நாடு முழுவதும் இது இனவாத இயக்கம் என்றே அறியப்படுகிறது. "இன்று போர், நாளை சமாதானம்" "சமாதானம் பிரச்சாரம்" ஆகிய வாசகங்களின் பின்னால் யுத்தம் முன்னுக்குக் கொண்டு செல்லப்படுவதே நடைபெறுகின்றது. கண்டி "வெண்தாமரை இயக்கம்" தொடர்பாக மாட்டப்பட்டிருந்த பெனர்களில், வெண்தாமரையின் இருபக்கங்களிலும், துப்பாக்கிகள் இருந்தன. இது புலிகளை அடையாளப்படுத்துவது போன்றிருந்தது. லக்ஷ்மன் ஜெயக்கொடி அமைச்சர் அவர்கள் வெண்தாமரை கூட்டத்தின் போது கூறியபடியே இது இராணுவ, யுத்த நலன்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பேயாகும்.

இதன்மூலம் இராணுவத்தினருக்கு நாட்டில் முதலிடத்தைப் பெற்றுக் கொடுப்பதே குறிக்கோளாகும்.

**யுத்தத்துக்கு விரோத நிலையில் இருந்து கதைப்பவர் நீங்கள். இதற்கு முன்னர், பாதுகாப்பு யுத்தம் தொடர்பாக கருத்து கூறியது எவ்வாறு?**

ஆம். ஆனால் இன்று நடக்கும் யுத்தத்தை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியுமா? 13 வருடங்களாக நிகழும் யுத்தமும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அரசியலும் வேறுபட்டுள்ளதல்லவா?

யுத்தம், பழைய முறையிலேயே நடைபெறுகின்றது. யுத்த ஆயுதங்களை கொள்வனவு

**ஆனால் கிராமங்களைத் தாக்குவது கொழும்பில் குண்டு வெடிப்பு, சாதாரண பொதுமக்களை கொலை செய்வது ஆகிய புலிகளின் செயற்பாடுகளை நிறுத்த யுத்தத்தில் புலிகளை பின் தள்ள வேண்டும் அல்லவா?**




**விபவி - மாற்றுக் கலாசார நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் அரச யாப்பு சீர்த்திருத்த இயக்கத்தின் பேச்சாளர்களில் ஒருவர் 'மாவத்த' என்ற இலக்கிய சஞ்சிகையை ஆரம்பித்து நடாத்தியவர். வெண்தாமரை இயக்கத்தின் யுத்தசார்பு நிலையை தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி வருபவர்.**

நான் இங்கு கூறுவதென்னவென்றால் பாதுகாப்பு, செயற்பாடுகளின் அவசியம் அத்தியாவசியமாகின்றது. அரசு, யுத்தத்தை ஒருதலைப்பட்சமாக நிறுத்திவிட்டு சமாதானத்தை நிலைநாட்டலாம். அதை பரிசோதிக்க வெளிநாட்டு தலையீடு அவசியமாகும். அவ்வாறான நிலையில் நாட்டின் பாதுகாப்பை உயர்த்தலாம்.

அவ்வாறான நிலையில் கீழ் பிரபாகரனுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட யுத்த மேடை, கலைக்கப்படுவதன் மூலம் புலிகள் தமக்கு உள்ளும் புறமும் இருக்கும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படுவதுடன் சர்வதேசபிரச்சினையாகவும் மாறலாம்.

அரசு யுத்தத்தை நிறுத்தினால் புலிகள் கீழிறங்கி வந்துவிடுவர் என்பது பொய். மேலும் கெரில்லா அமைப்பொன்றிடமிருந்து இவ்வாறானதொன்றை எதிர்பார்க்கவும் முடியாது.

ஆனால் அவ்வாறு செய்வதன் மூலம் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**நீங்கள் அரசியல் யாப்பு சீர்திருத்த இயக்கத்தின் பேச்சாளர். நாடு முழுவதும் கருத்தரங்குகளில் பங்கு பற்றுகின்றீர்கள். இது தொடர்பான உங்கள் அபிப்பிராயம் என்ன?**

நாங்கள் சுயாதீன அமைப்பு என்ற ரீதியில் மக்கள் மத்தியில் செல்வதால், வெண்தாமரை இயக்கத்தோடு தொடர்பில்லாத மக்களோடு சம்பந்தப்பட வாய்ப்புண்டு.

ம.ஐ.மு, ம.வி.மு. மக்கள் நண்பர்கள் போன்ற இனவாத அமைப்புகளோடு போட்டியிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எங்கள் கருத்தரங்குகளில் இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் வீணாகுவது இவர்களினான வாக்குவாதத்திலாகும்.

இனவாத கோட்டையாக கருதப்படும் தெற்கில் கூட நாம் அனுமானித்திருப்பது சாதாரண மக்களிடம் இனவாத நோக்கு இல்லை என்பதாகும். அவர்களுக்கு காரணத்தை தெளிவுபடுத்த முடியும். காலி கருத்தரங்கில் கலந்து கொண்ட ம.ஐ.மு. மாவட்ட அமைப்பாளர் மக்களால், விரட்டப்பட்டார். கொழும்பில் இருக்கும் இனவாத அமைப்பு "திவயின" வில் காட்டும் இனவெறிகள் இங்கு இல்லை. இதை அரசாங்கம் உணர்ந்து கொள்ளவில்லை. மக்களைப் புரிந்து கொள்ளாது அரசு தெற்கு யுத்தவாதிகளுக்கு கீழ்படுதல், மிகவும் துக்ககரமானது.

**அரசின் தீர்வுகள் தொடர்பாக மக்களிடம் ஏற்படும் தெளிவற்ற தன்மைகள் எவ்வாறானவை?**

நாடு பிராந்திய சபைகளாக பிரிதல் காரணமாக ஈழவாதத்துக்கு அடித்தளம் போடப்படும் எனவே மக்கள் பயப்படுகின்றனர். அதைத்தவிர வடக்கு - கிழக்கு வளங்கள் குறிப்பிட்ட மக்கள் பகுதியினரிடம் பிரிக்கப்படுவது தொடர்பாகவும் மக்கள் பயம் கொள்கின்றனர். நாங்கள் தீர்வுக்கு ஆதரவு அளிப்பதோடு, அதற்காக ஆழமான அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தேவை என்பதையும் மக்களுக்கு உணர்த்த விரும்புகிறோம்.

அரசின் தீர்வுகள், சிங்கள மக்கள் மத்தியில் வெற்றி பெறலாம். இது தொடர்பான காரண -காரியத் தெளிவுகளை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக அதிகார மத்தியப்படுத்தலுக்கு எதிராக ஒற்றை ஆட்சி தேவை என்பவர்கள். இன்னும் தமது நாட்டை பிரித்தானிய ஏகாதிபத்தியவாதத்தினுள் வைக்க பார்க்கின்றனர் என்பதை மக்களுக்கு கூறவேண்டும். அதிகாரப்பிரிவினை காரணமாக ஏற்படும் ஜனநாயக தன்மைகளை மக்களுக்கு தெளிவாக கூறவேண்டும்.



**சுயாதீனமான சமாதா**
**ஆர்வம் கொண்டு, செய**
**இன்று வெண்தாமரை இ**
**யமானவராக உள்ளீர்கள்**
**ணம் என்ன?**

நான் எப்பொழுதும், யுத்
காண்பதில் நம்பிக்கை
நாங்கள் அன்றிலிருந்து
னைப் பெறவே பாடுபட்
பொ.ஐ.மு. அரசு ஆட்சி
சமாதானத்தை ஏற்படுத்து
தியோடு ஆகும். அரசின்
ளில் குறை நிறைகள் இ
சமாதானம் தொடர்பான
பொறுப்பு இருந்தது. இவ்
யில் புலிகள் யுத்தத்தை
னர். அவர்கள் யுத்தத்து
காரணம் உண்மையான
னர் அரசும் யுத்தத்தில் ஈ
டைய அபிப்பிராயத்தின்
குழு தாக்குதலை முன்
அரசு மௌனம் சாதிக்க

யுத்தநிலை காணப்பட்ட
கட்சிக்கு உறுதி இல்லை.
அதனால் பொறுப்புகளை
கூடிய வெண்தாமரை
ளின் தேவை இன்றியமை

**சமாதானம் மற்றும், அ**
**மக்களை அறிவு பூர்வ**
**தாமரை இயக்கத்தின்**
**கூறினாலும் நீங்கள்**
**எடுத்துச் செல்வது யுத்**
**தானே!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீங்கள் முன் வைக்கும் குற்றச் சாட்டில் உண்மை உண்டு. வெண்தாமரை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது அரசு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த நேரத்திலாகும். அதனால் இவ் இயக்கம் இராணுவத்துக்கு பலம் அளிக்க உருவாக்கப்பட்டது என்று சிலர் எண்ணி விட்டனர். ஆனால் இதன் அர்த்தம் பிழையானது என நான் தெளிவாகத் திரும்பத் திருப்பக் கூறுகின்றேன்.

வெண்டாமரை என்பது ஆழமான அர்த்தமுள்ள அரசியல் இயக்கம் ஆகும். 13 ஆண்டுகள் பயங்கரமாக நம்மைச் சூழ்ந்திருக்கும் இவ் யுத்தத்தையும் அது தொடர்பான மக்களின் உளவியல் பாங்கையும் நீக்க பிரயத்தனம் செய்வதே இதன் அர்த்தம் ஆகும்.

அரசின் பிரபல அமைச்சர்கள், வெண்தாமரை தொடர்பாக வெளிப்படுத்தும் பிழையான அர்த்தத்தால் பிரச்சினைகள் தோன்றியுள்ளன என்பதை ஒத்துக் கொள்கின்றேன்.

***வெண்தாமரை இயக்கத்தைக் கொண்டு, இனவாதத்தை கிளப்பும் அமைச்சர்களைக் கொண்ட அரசாங்கத்தில் சமாதான இயக்கம் எவ்வாறு வெற்றி பெறும்?***

அமைச்சர்கள், அரசியல்ரீதியாக, அரசாங்கத்துக்குப் பல அமுக்கத்தைக் கொடுக்கின்றனர். அதனால் இவ்வாறான நிலைகளில் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

வெண்தாமரை இயக்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக, அமைச்சர்கள் எண்ணங்களை வெளிப்படுத்துவதால், இவ் இயக்கத்துக்கு அதிக தடைகள் ஏற்படுகின்றன. மக்களுக்கு இதனால் அரசின் செயற்பாடுகளில் ஐக்கியம் இல்லை என்ற ஐயப்பாடு தோன்றுகின்றது. இது இன்று நாம் முன்னோக்கும் பெரும் பிரச்சினை. இதைத் தீர்ப்பதற்கு தீராத முயற்சி எடுத்தல் இன்றியமையாதது

***ஒத்துப் போகவே இவ்வாறு முயற்சி மேற்கொண்டுள்ளது என நான் கூறினால்?.....***

நான் உங்கள் கூற்றை ஏற்க மாட்டேன். ஏனெனில் இவ் அரசாங்கம் இராணுவத்தினரின் முறையற்ற செயல்களை சட்டரீதியாக கண்டித்துள்ளது. ஆற்றில் மிதந்த சடலங்கள் தொடர்பாக விசேட அதிரடிப்படை அதிகாரிகளை கைது செய்தது. இராணுவத்தை சந்தோஷப்படுத்த எண்ணினால் இவ்வாறான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்காது. வெண்தாமரையின் நோக்கம், இராணுவ வீரர்களின் குடும்பங்களை கவனிப்பது மட்டுமன்றி யுத்தத்தினால் அப்பாவிகளாக்கப் பட்டிருக்கும் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களையும் கவனிப்பது ஆகும். அதன்படி இவ் வெல்லா பகுதியினரிடமிருந்தும் எங்களுக்கு ஆதரவு கிடைக்கின்றது.

***மக்களுக்கு அரசின் தீர்வுகள் தொடர்பாக உண்மையை விளக்கும் கருத்தரங்குகளில் நீங்கள் கலந்து கொண்டீர்கள். அரசின் தீர்வுகள் தொடர்பாக மக்களின் அபிப்பிராயங்களை, உங்களால் கூற முடியுமா?***

மக்களிடம் இருப்பது சந்தேகம். இது நீண்ட கால கொடுக்கல் -வாங்கலினால் ஏற்பட்ட விளைவு. சிங்களவர்கள், தமிழர்களை சந்தேகத்தோடு நோக்குகின்றார்கள். இச் சந்தேகங்களை நீக்குவது அவசியம்.

மக்களின் நம்பிக்கையின்மையை அடிப்படையாகக் கொண்டு, பிரிவினைவாதிகள், இனவாதிகள், தீர்வை எதிர்க்கின்றனர். ஆனால் தீர்வு தெளிவான பின்பு மக்கள் இதனை ஏற்றுக் கொள்கின்றனர். மக்கள் யுத்தத்தை நிறுத்தி, சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர். இதுவரை நான் 21 கருத்தரங்குகளில் கலந்துள்ளேன்.

***இனவாதிகளின் பிரச்சாரங்கள், சாதாரண மக்களிடம் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது?***

தெற்கு மக்களிடம் இனவாதம் இல்லை. இக் கருத்தரங்குகளில் கட்சிகளைச் சேர்ந்த சிலர், இடைவேளையின் போது வாதங்கள் செய்ய முன்வருவர். அவர்கள் மக்கள் முன் வாதங்களை முன் வைக்கத் தயங்குகின்றனர். அவர்கள் முன் இனவாதிகள் என தம்மை காட்டப் பயப்படுகின்றனர். இது தெளிவாக சமாதான இயக்கங்கள் பெற்றுக் கொண்ட வெற்றியாகும். இன்று இனவாதிகள் கருத்தை வெளியிடக் கூடத் தயங்குகின்றனர்.

***அரசின் அரசியல் தீர்வில், சமாதானத்துக்கான பாதை யுத்தத்தினால் மூடப்பட்டுள்ளது. இதை எவ்வாறு நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்கள்?***

ஆம். அதில் தெளிவான ஒன்றுக்கொன்று முரணான தன்மைகள் காணப்படுகின்றன. கெரில்லா அமைப்பு, எல்லாச் சந்தர்ப்பத்திலும், நிலத்தை ஆக்கிரமிக்கும் போரில் வெற்றிகொள்ளும் ஆயின் வெற்றி ஆங்காரத் தன்மையால் அது பேச்சுவார்த்தைக்கு முன் வராது. யுத்தத்தில் பின்தள்ளப்படுவதன் மூலம் அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்கலாம். இதுதான் ஒரே வழி.


சென்ற 13 ஆண்டுகளும், யுத்தத்தை அரசு தமிழ் மக்களுக்கு எதிராகவே நடாத்தியது. இவ் அரசாங்கம் சமாதானத்துக்கான காரணங்களை முன்வைத்துவிட்டு யுத்தத்தில் வித்தியாசமான முறையில் பிரவேசித்தது. என்னுடைய கருத்தின்படி இதற்கான தீர்வு பேச்சுவார்த்தை மேசையில் உள்ளது.

***ஆனால் நீங்கள் அரசாங்கத்தின் யுத்த செயற்பாடுகளுக்கு ஆதரவு அளிக்கின்றீர்கள் அல்லவா?***

நீங்கள் கேட்டது, முரணான கேள்விகளை. நான் எப்போதும் யுத்தத்துக்கு எதிராகவே உள்ளேன். வெண்தாமரை இயக்க தலைவியான ஜனாதிபதி யுத்தத்துக்கு எதிரானவர் என்ற கணிப்பைப் பெற்றவர். ஆனால் புலிகள் ஒரு பக்கச்சார்பாக யுத்தத்தை தொடரும் போது அரசினால் என்ன செய்ய முடியும். சிலர் வடக்கில் உள்ள, இராணுவத்தை தெற்கிற்கு எடுக்க வேண்டும் என்கின்றனர். அவர்கள் கற்பனையில் சமாதானத்தை காண்பவர்கள். இது நிறைவேறி இருந்தால் புலிகளின் பாஸிஸ வாதத்துக்கு தமிழ் மக்கள் பலியாகியிருப்பர். தெற்கில் இனவாதம் தலைவிரித்தாடியிருக்கும்.

நான் கூற விரும்பும் ஒரே கருத்து. உச்சநிலையில் இருக்கும் பிரச்சினையை தீர்க்க முடியாமல் இருப்பதாகும். சேற்றை பூசிக்கொள்ளாமல் சேற்றிலிருந்து வெளியேற முடியாது. சேற்றில் உதித்தாலும் பூக்கும் போது வெண்ணிறமாகவே மலர்கின்றது வெண்தாமரை.

# ...சறு இன்றி வெண்தாமரை பூக்காது!



ஜோ செனவிரட்னா

**முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எப். வடகிழக்கு மாகாண அரசின் அமைச்சர்களில் ஒருவராக இருந்தவர். ஜனநாயகத் துடனான சமாதான உறுப்பினர்களில் ஒருவருமான இவர் தற்போது வெண்தாமரை இயக்கத்தின் அமைப்பாளர்களில் ஒருவராக இருக்கிறார்.**

ஆகும்.

**வெண்தாமரை இயக்கத்தை நடைமுறைப் படுத்துபவர்கள் கூறுவது அதற்கு கிடைக்கும் பண உதவிகள் யாவும் இராணுவ வீரர்களின் குடும்பங்களின் நன்மை, தீமைக்கு செலவிடப்படுகின்றன என்றாகும். பொ.ஐ.மு. அரசு இராணுவத்தினருடன்**

இது அனைத்திலும் நான் பெற்றுக் கொண்ட அனுபவம் மேற்கூறியவை தான்.

குறிப்பாக, யுத்தப் பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு, அப்பிரதேசங்களில் வாழாதவர்களை விட சமாதானம் முக்கியமாகத் தோன்றுகின்றது.

**ஒக்டோபர் 15 யுக்த்தியவில் இருந்து தமிழில் -ரத்னா-**

...செயல்களில் ...றிய நீங்கள் ...த்தில் முக்கி ...ற்கான கார ...லமாகத் தீர்வு ...ண்டவனல்ல. ...சியல் தீர்வி ... ...தில் ஏறியது ...ம் என்ற உறு ...ான முயற்சிக ...ன. ஆனால் ...சனை இல்லா ...ன சூழ்நிலை ...பித்து வைத்த ... முன்வைத்த ... அதன்பின் ...டது. என்னு ... தீவிரவாதக் ...டுக்கும்போது ...ாது. ...தும், அரசின் ...வும் இல்லை. ...ற்று நடாத்தக் ...ற இயக்கங்க ...தாகியது. ...தொடர்பாக ...தவது வெண் ...கோள் எனக் ...ண்தாமரையை ...ச்சாரத்துக்குத்

# அதிரடித் தவறு

பஞ்சம் பிழைக்கப் பட்டணம் வந்திருக்கிறோம். வந்த இடத்தில் எவ்வளவோ இடர்கள், எங்கள் நாடும், எங்கள் மொழியும் எங்கே என்று தேடுகிறோம். பஞ்சம் பிழைக்க வந்த இடத்தில் பரிதவித்து நிற்கிறோம். கனடா, ஜேர்மன், பிரான்ஸ், இங்கிலாந்து, சுவிற்சலாந்து, சிறீலங்கா என்று நாம் சிதைந்து போனோம். எவ்வளவு துயர்கள்.

கொழும்பிலோவென்றால், துயர் பற்றி வடிக்க எழுத்துக்கள் இல்லை. அல்லாடுகிறோம். சிங்கள மக்களின் பார்வை சரியில்லாதிருக்கிறது. விரோதியாக எதிரியாகப் பார்க்கிறார்கள். நேசத்துடன் நட்புடனான பார்வையைத் தரிசித்துக் காலமாகிறது. புதிதான ஒருவீட்டில் குடியேறினால், (வாடகை தான்) அயலிலுள்ளோர் அந்நியமாகப் பார்க்கின்றார்கள்.

சமீபத்தில் ஒரு சம்பவம். ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு நண்பர் வந்திருந்தார். நீண்ட நாட்களின் பின்னரான சந்திப்பு. அவர் தங்கியிருந்த வீட்டில் நெடுநேரம் தங்கிக் கதைக்க இயலாது. கொஞ்சம் இளமையான வயது. அயலிலுள்ளோர் சந்தேகமாகப் பார்ப்பார்கள். நான் இருக்கும் வீடு இன்னும் மோசம். நாங்கள் மூவர் அவரையும் கூட்டிக்கொண்டு தெஹிவளைச் சந்தியிலுள்ள ஒரு பாரிற்குச் சென்றோம். அந்த இடம் சந்தை இரைச்சலை விட மோசமானது. ஆனால் ஒரு மேசையும் நான்கு கதிரைகளும் கிடைக்கும். கொஞ்சம் மலிவான விலையில் மது கிடைக்கும். ஒய்ந்து கதைக்க ஒரு இடம் அங்கு உண்டு. வாரத்தின் கடைசி நாள். ஒரு களைப்பு. நீண்ட நாட்களின் பின்னரான நண்பரின் வரவு. ஒதுங்க ஒரு இடம். அன்றிரவு அங்கு சென்றோம்.

மதுவுக்கு உத்தரவு கொடுத்து விட்டு புதினங்களைக் கதைக்கத் தொடங்கினோம். நேரமாகி விட்டது. 'பார்' பூட்டப்படும் கடைசி நேரம். குடித்த பில்லுக்கான பணத்தைச் செலுத்தினோம். மீதி 80 ரூபா மட்டில் தர வேண்டும்.

நீண்டநேரம் இருந்தோம். 'சர்வர்' வரவில்லை. எழும்பிச் சென்று விசாரித்ததில் 'சர்வர்' வீடு சென்று விட்டாரென அங்கு வேலை செய்தவர் கூறினார். நாங்கள் நிலமையை விளக்கினோம். எங்கள் கதையில் நாங்கள் தமிழர்கள் என்பது அவர்களுக்கு மிக நன்றாகத் தெரிந்து விட்டது. அதை அவர்கள் எங்கள் பலவீனமாக்கினார்கள். மீதிக்காசு கேட்ட இடத்தில் அடையாள அட்டை கேட்டார்கள். அடையாள அட்டை கேட்க அவர்களுக்கு உரிமை இல்லையென்ற போது பலவந்தமாக அடையாள அட்டையை பிடுங்க முயற்சித்தார்கள். தடுத்த போது ''நீங்கள் தமிழர். யாழ்ப்பாணத்தவர், கொட்டியாவாகத்தான் இருக்க வேண்டும்'' என்று பாய்ந்தார்கள்.

எதைச் சொல்ல? மிகச்சுருக்கமாகக் கூறுவதென்றால் மிக மோசமாக அவமானப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டோம். அதன் பின்னர் ஏது செய்து யாது பயன்?

சரி இவ்வளவும் தானா கதை?

இத்துடன் முடியவில்லை.இது எங்களது ஒரு வகைத் துன்பம் என்றால் இன்னொரு வகைத்துன்பமும் உண்டு.

நாங்கள் பத்திரிகையாளர்கள். எங்கள் பேனாக்களிலும் மை உண்டு. வெளிப்படைத் தன்மை,நேர்மையும் உண்டு. நாங்கள் முஷ்டிகளில் பலத்ததை சேமிப்பவர்கள் அல்ல. பேனைக்குள் பலத்தைச் சேமிப்பவர்கள்.

எங்களுக்கு 'கிழக்கின் சிங்கம்', 'தனித்துவத் தலைவர்', 'இரண்டெழுத்தார்', 'நீலமானவர்' என்று கிசுகிசுவாக அதிரடி அய்யாத்துரை போல ஒளிந்து நின்று எழுதத் தெரியாது. ''உங்களை நான் சொல்லவில்லையே'' என்று சொல்லித் தப்பித்து உறவாடச் சுலபம். எங்களுக்கு அது தெரியாது.

'தினமுரசு' பத்திரிகையில் 'அதிரடி அய்யாத்துரை' எனும் பகுதியில் மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. அனுதாபக் குறிப்பல்ல அது. அவமானப்படுத்தும் குறிப்பு. சக பத்திரிகையாளர் என்று கூட வேண்டாம்; தமிழ் பேசுவோருக்கு எதிராக நடந்த இம்மிலேச்சத்தனமான நடவடிக்கையைக் கண்டிக்க கூட அதனால் முடியவில்லை. அவர்களுக்கு வெறுமனே 'உற்சாக பானம்' அருந்துகிற விடயம் இது.

ஆனால் நாங்களோ பத்திரிகையாளர்கள். பத்திரிகையாளர்கள் பாதிக்கப்பட்டால் அதற்காக குரலெழுப்ப வேண்டியது பத்திரிகையாளர்களின் கடமை என்று கருதுபவர்கள். எங்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்று கூட விசாரிக்க (வாய்ப்பிருந்தும்) விருப்பமில்லாமல் சந்தோசப்பட இந்த நாட்டில் அய்யாத்துரையாருக்கு மட்டும் தான் முடியும்' ஐயாத்துரையாருக்கு அதிரடி விழுந்தால் கூட, அதை எதிர்த்து குரலெழுப்புவது தான் எமது பண்பு. இது அவருக்கு இல்லை. குறைந்தபட்சம் சிங்களப் பத்திரிகையாளர்கள் எம்மீது காட்டிய அனுதாபத்தை விட்டுவிடுவோம், பாருக்கு எதிர்த்தால் போல் இருந்த வெற்றிலைக் கடைக்காரர் காட்டியளவு அனுதாபம் கூட இவருக்கு வரவில்லை. என்ன செய்வது? எமது பத்திரிகா தர்மத்தின் நிலை இதுதான்.

இது ஒருவிதத்தில் எங்களது பிழைதான் நாங்கள் விட்ட பிழைகளைப் பட்டியல் போட்டாலே இவ்விடத்தில் போதுமானது.

1. எங்கள் மக்களைக் காட்டிக்கொடுத்து, அதிஉத்தம ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசவால் 'அன்புத் தம்பி' என்று அழைக்கப்பட்டு, வசிப்பதற்கு சொகுசான பங்களாவும், ஓடித்திரிய பஜிரோ ஜீப்பும், கை கூசாது செலவழிக்கக் காசும் கிடைத்திருந்தால், நாங்கள் இவ்வாறான மலிவு விலை மதுக்கடைக்குப் போயிருக்கத் தேவையில்லை. பங்களாவில் அழகான ஒரு ஏ.சி. அறையில் பியர், விஸ்கி போத்தல்கள், கோழிக்கால்கள் சூழ, ஆறுதலாக இருந்து அருமையான மாலைப் பொழுதைக் கழித்திருக்கலாம்.

2. மக்களிடம் செல்லாமல், இராணுவ முகாம்களின் பின்வாசலினூடாகச் சென்று, நூற்றுக்கணக்கான மக்களிடமல்ல; ஐந்தாறு மக்களை உருட்டி, முழித்து, வெருட்டி வாக்குகளை வாங்கி, மீதியான வாக்குகளை நாங்களே புள்ளடியிட்டு, கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற உலக சாதனையான ஒரு சில வாக்குகளினால் எம்.பி.ஆகியிருந்தால், இப்படி ஒரு சிறிய 'பாரு'க்கு போயிருக்கத் வேண்டிய தேவை வந்திருக்காது. எங்களுக்கென்றே நாம் பம்பலப்பிட்டி டிக்மன் வீதியில் ஒரு ரெஸ்றோறன்றே நாங்கள் திறந்திருப்போம். என்ன செய்வது.

3) அப்படித்தான் அவமானப் படுத்தப்பட்டிருந்தாலும், பஜீரோ ஜீப்பும் பாதுகாப்பு அமைச்சின் அடையாள அட்டையும் பத்துப் பன்னிரண்டு மெய்க்காப்பாளர்களும், விரலுக்கு ஒரு துப்பாக்கியும் இருந்திருந்தால், இவ்வாறு அவமானப்படுத்தியவர்களை சும்மா விட்டிருப்போமா? எங்கள் வீரத்தை என்னவென்பீர்கள். வெள்ளவத்தைக் கடற்கரையில் ஒரு பாறையில் அவர்கள் முகத்தைச் சிதைத்திருக்கோமா? யாழ்ப்பாணத்தீவுகளின் கடற்கரைகளில் அவர்களை முழங்காலால் நடத்தி, குத்துக்கரணமடிக்க வைத்திருக்க மாட்டோமா? தேவையேற்பட்டன், மேலும்..... வேண்டாம் (எழுதவே கை கூசுகிறது)

ஐயா அய்யாத்துரையாரே இதுதான் நாம் செய்த தவறுகள். புரிந்ததா உமக்கு?

அய்யாத்துரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற மாதம் இதே நாட்களில் அப்பா எங்களுடன் இருந்தார். எங்கள் உயிருடன் உயிராய்க் கலந்திருந்தார். என் மைந்தர்கட்குக் கதை சொன்னார். என் மனைவிக்குப் பாடக்குறிப்புகள் தேடினார். இரவில் பிந்தி வரும் எனக்காகக் காத்திருந்தார்.

இப்போது எண்ணிப் பார்க்கிறபோது இறப்பதற்கு ஆறுமணித்தியாலத்திற்கு முன்னரும் எனக்காகக் காத்திருந்தார். இது குரூரமான ஆச்சரியம்.

புதன் கிழமை (05.07.95) இரவு பிந்தி வருகிறேன். வருகிற போது பதினொரு மணியிருக்கலாம். சற்று இருளான வெளிச்சத்தில் கதவடியில் காத்து நிற்கிறார். காலடிச்சத்தம் கேட்டவுடன் கதவைத் திறக்கிறார். பிந்தி வந்ததற்குக் கண்டிக்கிறார். சமாளிக்க முற்படுகிறேன்.

அடுத்த நாள் (06.07.95) எனக்குக் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா (Convocation) அதற்காக வழங்கப்பட்ட பட்டமளிப்பு விழாவிற்கான மேலங்கியை (cloak)அப்பாவிடம் காட்டினேன். மகிழ்ந்தார். முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிற்கு அப்பாவும் வந்திருந்தார். இப்போ வர முடியாத நிலை அவருக்கு. அம்மாவைக் கூட்டிச் செல்கிறேன் என்றேன். அப்பாவுக்கு மகிழ்ச்சியாக இருந்திருக்கும். யாமம் பன்னிரண்டு மணிவரை பலதைப் பற்றியும் கதைத்தோம். பின் படுத்தோம்.

இரவில் ஆந்தை அலறவில்லை. நத்தை குரலெடுக்கவில்லை. ஆட்காட்டிக் குருவி அவலமாக ஒலிக்கவில்லை. பகலில் கூட அண்டங்காகம் கத்தியதாக அம்மா கூறவில்லை. நம் வீட்டைச் சா தேடி வருவதாக எந்த அறிகுறியும் தென்படவில்லை.

விடிய மூன்றரை மணிக்கு அப்பா என்னை எழுப்புகிறார். மூச்சுப் பறிகிறது. ''எனக்கு ஏலாமல் இருக்கு... மூச்சு விட முடியேல்லை.... நான் சாகப் போறன்..'' என்று கூறுகிறார். நான் செய்ய வேண்டிய கடமைகளை எனக்கு உரைக்கிறார். மேலும் ஏதோ கூற முற்படுகிறார்.

ஒன்றையும் நம்புகிற மனநிலையில் நான் இல்லை ''ஒண்டுமில்லை.... பேசாமல் படுங்கோ....'' என்கிறேன். படுக்க வைக்கிறேன். அப்பா மீண்டும் எழுகிறார்; கூறுகிறார்; ''எனக்கு ஏலாமல் இருக்கு....'' நான் அப்பாவின் நெஞ்சைத் தடவியபடி ''ஒண்டுமில்லை..... படுங்கோ....'' அம்மா, மனைவி அருகில் வந்து இருக்கின்றனர். சஞ்சயன், சஞ்சுதனும் எழும்பி விட்டார்கள்.

படுக்கிறார். சிவப்பு நிறத்தலையணையை எடுத்து நெஞ்சில் வைக்கிறார். அதன் மேல் கையைப் பதிக்கிறார். மறுகையால் என் கையைப் பற்றுகிறார். கண் செருகுகிறது. எனக்குப் பயம் வந்தது. பதட்டமடைகிறேன். 'அப்பாவுக்கு ஏதேனும் நடந்து விடுமோ?'

''அப்பா...'' உலுக்குகிறேன். திடுக்கிட்டு கண்ணை முழிக்கிறார். பார்க்கிறார். பேச முடியவில்லை. கண்ணீர் ஒழுகுகிறது. பின் கண் செருகுகிறது. விட்டு விட்டு மூச்சு அசைகிறது. நெஞ்சைத் தடவுகிறேன். ''அப்பா..... அப்பா....''

மூச்சு..... விட்டு.... விட்டு.... பிறகு வரவில்லை.

அக்கா வந்து விட்டார். அம்மாவும் அக்காவும் குழறுகிறார்கள். மனைவி அதிர்கிறார். மைத்துனன் உடன் ஓட்டோவைக் கூட்டி வருகிறான். அத்தானும் ஓடி வந்து அப்பாவைத் தூக்கி ஓட்டோவில் ஏத்துகிறோம். அப்போது நேரம் 3.50 இருக்கும்.

ஆஸ்பத்திரிக்குச் சென்று என் பயன்? மரணத்தை வைத்தியர் மறுக்கவில்லை.

துயில்வ போன்று அப்பா இறந்தார்.

எங்களின், எங்கள் குடும்பத்தின், எங்கள் உறவினரின், எங்கள் சுற்றத்தவரின் தூண்போல இருந்த அப்பா சரிந்து விட்டார். கிளறிக் கிளறி லயிக்கிற நினைவுகள் அப்பாவினுடையவை.

கால் நூற்றாண்டுக் காலம் அப்பாவின் ஆளுகைக்குள்ளேயே வாழ்ந்தேன்; வளர்ந்தேன்.

அம்மாவின் மடியில் குதித்த கணத்திலிருந்து, அம்புலி காட்டிச் சோறூட்டிய பருவத்திலிருந்து, நிலவொளியில் மணல் பரப்பி சுட்டுவிரல் தேய 'அ' எழுதிய காலத்திலிருந்து, சளி வழிய காற்சட்டை சறுக, வெள்ளம் அளைந்த பொழுதிலிருந்து, பிறகு, நெஞ்சு நிமிர்த்தி பல்கலைக்கழக வளவுள் கால் வைத்த காலம் வரை, அல்லது எனக்கென்றொரு துணையை நான் வரைந்த வாழ்வு வரை அப்பாவின் ஆளுகைக்குள் நான் வாழ்ந்தேன்.

எம் குடும்பமோ மிகச் சிறிது. நம் குடிலோ அதிலும் சிறிது. அப்பா, அம்மா, அக்கா, நான். அளவெட்டியில் ஒரு கொட்டில். சாமத்தில் மழை பெய்கிறபோது கூரை ஒழுகும். அம்மா விளக்கை ஏற்ற, அப்பா குடை பிடித்து நிற்பார்.

காலையில் அப்பா எங்களை மிருதுவாக எழுப்புவார். ''ராசா.... பிள்ளை... நேரம் போச்சு. எழும்புங்கோ....'' குசினிக்குள் அப்பா தேநீர் தரும் வரை காத்திருப்போம்.


மதியம் அப்பா பாடசாலை விட்டு வீடு வருவார். நாங்கள் முன்னரே வந்திருப்போம் என் சிலேற்றை அப்பாவிற்குக் காட்டுவேன். அதிலுள்ள 'சரி' களுக்காக 'நஷனல் பொக்கற்றினுள் ஆழக்கைவிட்டெடுத்துக்காசு தருவார்.

பிறகு குசினிக்குள் நால்வரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவோம். பின்னர் மகாஜனாக் கல்லூரி இரு நேரப் பாடசாலை ஆதலால் அப்படிச் சாப்பிட முடியவில்லை. அதனாலென்ன, அப்படிச் சாப்பிட இரவுகளும் சனி, ஞாயிறுகளும் இருந்தன.

அப்பாவை நினைக்கிற போது, தூய நினைவுகள் கண்முன் காட்சி அளிக்கின்றன.

சோளகம் பேயாட்டம் போடுகிற காலங்களில் அம்மாள் கோயில் திருவிழா. சாமம் பன்னிரண்டு மணிக்குப் பிறகு எங்களை நித்திரையால் எழுப்பி திருவிழா பார்க்க அழைத்துச் செல்வார். அது சின்ன மேளம் தொடங்கும் நேரமாக இருக்கும். பிற்காலங்களில் கோஸ்டி தொடங்கும் நேரமாக இருக்கும். என் வயதொத்த நண்பர்கள் அப்போது தூங்கி வழிந்து கொண்டிருப்பர். 'சாத்துவாய்' வழிந்து காய்ந்திருக்க, அசிங்கமாயிருப்பர். அல்லது புழுதி படிந்திருக்க சோம்பி வடிவர். நான் கச்சான் கொறித்து விழாப் பார்ப்பேன்.

ஒருபோதும் அப்பா என்னை, அக்காவை அடித்ததில்லை. ஏசியிருப்பார். ஏசியபின், வேதனை வடிய, முதுகைத் தடவி ஆறுதல் சொல்வர். தம் மடியிலிருத்திக் கதை கூறுவார். கதை கேட்டுத் தூங்கிப் போவோம்.




**சரிநிகர் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த இரவியின் தந்தையார் கா.பொ. அருணாசலம் அவர்கள் கடந்த யூலை 6ம் திகதியன்று காலமானார்கள். அவரின் நினைவாக மஹாகவி, நீலாவணன், சேரன், ஜெயபாலன், வில்வரத்தினம், மதுரகவி ஆகியோரின் 'மரணம்' தொடர்பான கவிதைகளைத் தொகுத்து ஒரு சிறு பிரசுரமாக வெளியிட்டிருக்கிறார்கள். அத்தொகுப்பில் தமது தந்தையாரது நினைவுக் குறிப்பாக இரவி எழுதியதை இங்கு தருகிறோம்.**

**ஆ-ர்.**

''சொத்தி வீட்டை போனோம். சொத்தி தந்த கையைப் பார். கடவுள் வீட்டை போனோம். கடவுள் தந்த கையைப்பார்.'' என்று பாடி ஆடும் விளையாட்டை நான் விளையாடுவதில்லை. அக்கா விளையாடினாரோ, என்னவோ? அப்பாவின் ஒரு கை விரல்கள் சொத்தி. என் அப்பாவைப் பழிக்க என்னால் எப்படி இயலும்? அப்படி அப்பாவின் கைவிரல்கள் சொத்தியாவதற்கு அப்பாவின் மூத்த மருமகளே காரணம். மருமகளின் திருமணம் காரணம். கல்யாண ஊர்வலத்தில் எம்மூர் ஐயரின் வெடி கொளுத்தி வந்தார் அப்பா. திரி சிறிது. வெடி பெரிது. தன் நேரத்திற்கு முன் அது வெடித்தது. அப்பா கை சிதைந்தார். சில விரல்களை இழந்தார். ஆயினும் பொங்கலுக்கு எங்களுக்கு வெடி வாங்கித்தர அப்பா மறுப்பதில்லை. அது நம்மூர் வெடி அல்ல; கொழும்பு வெடி.

தன் உறவினர் மீதும், ஊரின் மீதும், மதத்தின் மீதும், மொழியின் மீதும், தன் தேசத்தின் மீதும் அப்பா தீராத அபிமானம் கொண்டவர். அளவெட்டியும், அம்மாள் கோயிலும், தமிழும் தன்நாடும் அப்பாவின் பேரன்புக்குரியன.

தம் உறவினரை மிக நேசித்தார். ''உங்களுக்குத் தெரியாது. சின்னமாமாவின் நெஞ்சிலும் தோளிலும் வளர்ந்தவள் நான்'' என்று மட்ராசிலிருந்து ஒரு மருகி எழுதுகிறார். ''சின்ன மாமா கொழும்பிலிருந்து வரப்போகிறார் என்றால் ஒரு கிழமைக்கு முதலே சந்தோஷத்தால் குதிப்போம்'' இன்னொரு மருமகள் எழுதுகிறார். ''தகப்பன் அன்பை அறியாத எமக்கெல்லாம் அன்பைச் சொரிந்தவர் எம் மாமா'' என்று மற்றொரு மருகி எழுதுகிறார். ''ஊருக்கெல்லாம் ஓடியாடி உதவி செய்தவர் மாமா. அவருக்கு உதவி செய்ய நாங்கள் இல்லையே'' என்று மைத்துனன் வருந்துகிறான். எல்லோரும் எழுத எழுத, அப்பாவின் மேல் மென்மேலும் என் அன்பு பெருகுகிறது. எம் வீட்டில் நடை பெற்ற செத்த வீட்டுக்கும், இனி நடக்கப் போகும் அந்தியேட்டிக்கும் ஒரு சொல் அறிவுரை கேட்க அப்பா இல்லை.

சமூக சேவையில் அப்பா ஆர்வம் கொண்டிருந்தார். அம்மாவுக்கு அது 'சம்பளம் இல்லாத உத்தியோகம்'. அளவெட்டிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபையில் நீண்ட காலம் இயக்குநராக இருந்தார். வ.பொன்னம்பலம் தலைவர். இலங்கையில் முதலாமிடம் பெற்ற சங்கமாக அளவெட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் திகழ்ந்தது. வி.பியுடன் அடிக்கடி சண்டை.. ''நான் ஊரில் இருக்கும் பொழுது எங்கெல்லாம் பொதுத் தொண்டுகள் உண்டோ? (எவ்விதச் சொந்த இலாபமும் கருதாமல்) அவை யாவற்றிலும் தலையிடுவேன். தவறைக் கண்டால் பட்டும் பாராமல், பணியும் பாராமல் கண்டிப்பேன். திருத்துவேன். ஆனால் யாருடனும் பகைமை கொள்ள மாட்டேன். கொள்கையில் எதிர்ப்பு. ஆனால் தனிப்பட்ட முறையில் அல்ல'' என்று குறித்திருக்கிறார். இப்படிக் குறித்தது போலவே அப்பா வாழ்ந்தார் என்பதை நான் அறிவேன்; நம்மூர் அறியும். நல்லோரறிவர்.

அப்பாவின் இறுதிக்காலமே துயர் தருவது.

அப்பாவின் அந்த வேகமான கெந்தல் நடையும், அந்த நடையினூடு அவர் செய்து முடித்த வேலைகளும், ஒரு நிமிடம் ஓயாத உழைப்பும் 91இல், ஒரு விபத்தில், கால் உடைந்ததில் இல்லாமற் போனது. 2வது ஈழப்போர் தொடங்கிய காலத்தில் அப்பாவின் கால் உடைந்ததில் மிகத் திருப்தியான மருத்துவச் சிகிச்சை அவருக்கு வழங்கப்படவில்லை. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியோ அப்போது மூடப்பட்டிருந்தது. பின் ஆஸ்பத்திரி திறந்த பிற்பாடு காலில் இருதடவை சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. கால் சரியாகப் பொருந்தவில்லை. வாகன வசதி இல்லாக் காலம். புதிதாக முளைத்த சைக்கிள் ரிக்ஷோக்களில் அப்பாவின் பயணம். முறிந்த கால்கள் வலிக்க வலிக்க, வரும் வேதனையை மென்று விழுங்கி பயணம் செய்வார்.

92இல் கொழும்பிற்கு மிகுந்த சிரமத்தின் மத்தியில் அப்பாவை ஒருவாறு கூட்டி வந்தாயிற்று. கொழும்பு ஆஸ்பத்திரியில் மூன்றாவது சத்திர சிகிச்சை. அப்போதும் கால் பொருந்தவில்லை. வேதனைப்பட்டார். இடர்ப்பட்டார். வாழ்க்கையைத் தொலைத்து விட்டேன் என்று வருந்திக் கசப்புடன் அனுபவித்தார். நொண்டி நொண்டி நடந்தார். கொழும்பின் வேகமான வாழ்வில் அவர் பின் தங்கினார். ஒற்றைச் சிறகுடன் உலாவினார். அதுவே எம் நெஞ்சைப் பிழியும் வேதனையாக இருந்தது.

ஆனால், அப்போதும் அவர் சும்மா இருக்கவில்லை. எனக்கு, என் பாடசாலைக்கு, நான் பங்காற்றிய பத்திரிகைக்கு எழுத்து வேலைகள் அதிகம் இருந்தன. அவற்றை அப்பாவும் பங்கு போட்டார். என் மனைவியின் உயர் கல்விக்குத் தேவையான குறிப்புகளைப் புத்தகங்களில் இருந்து திரட்டினார். தொகுத்தார். என் மகன்களுக்குபாடசாலையில் செய்யவேண்டிய கைவேலைகள் அப்பாவின் கைவண்ணத்தில் உருவாயிற்று. சென்ற வருடம் நான் கால் முறிந்து படுக்கையில் கிடந்த போது அப்பா நொண்டி நொண்டி என்னைப் பராமரித்தார். எழுப்பி நடக்க வலிமை கொடுத்தார்.

பாபுவும் கோபியும் ரதீப்பும் அப்பாவின் மார் மேலும் தோள் மேலும் வளர்ந்தார்கள். ஆர்த்தி பிறந்து சில நாட்களில் அக்கா கொழும்பிற்கு வந்ததால், ஆர்த்தியை அப்பா வளர்க்க இயலாது போயிற்று. சின்னஞ்சிறிய கதைகள் உட்பட பென்னம் பெரிய கதைகள் யாவுமாக என் மகன்களுக்கு நிறையக் கதைகள் தெரியும். அவை அப்பாவின் மிகப் பெரிய உபயம். அப்பாவின் அந்திம காலத்தில் தொலைக்காட்சியில் மகாபாரதம், இராமாயணம், விஸ்வாமித்திரர் எனும் தொடர்கள் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. அடுத்த வாரம் என்ன நடக்கப் போகின்றது என்பதை என் மகன்கள் எனக்கு எடுத்தியம்புவர் அப்பா மதியம் அவர்களுக்குச் சாப்பாடு ஊட்டுகிற போது கூறியிருப்பார். முன்னர் பாபு, கோபிக்கு உணவு ஊட்டுகிறபோது நரியாக, மாடாக, நாயாக நடித்துத்தான் ஊட்டுவார். இப்போது இயலாததனால் கதை. அப்பா இறந்திருந்த போதும் ஒரு புராணத்தில் வரும் பாத்திரத்தைச் சுட்டி ''பாட்டாவும் திரும்ப எழும்பி வருவார்'' என்கிறான் என் மைந்தன்.

என் மக்களுக்கு பாடசாலை பன்னிரண்டு மணிக்கு விட்டு விடும். வீடு வந்து விடுவர். அப்பாவே பராமரிப்பார்.

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1980களில் ஈழத்தில் பெண் கவிஞர்கள்

## பதிவும் பார்வையும்

சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்
கிழக்குப் பல்கலைக்கழகம்

ஈழத்து தமிழிலக்கிய வளர்ச்சியில் எண்பதுகளில் ஒரு முக்கியமான திருப்புமுனை நோக்கி இலக்கியம் நகர்த்தப்பட்டுள்ளது. எழுபதுகளில் இருந்த நிலையில் இருந்து முற்றிலும் மாறுபட்ட நிலையை 80களில் காணமுடியும். இந்த சமூகத்தின் அனுபவங்கள் இன்று முற்றிலும் மாறுபட்டவையாகவும் உணர்வாழம் கொண்டவையாகவும் மாறியுள்ளன. தமிகச் சமூகத்தைப் பொறுத்தவரை இவ்வனுபவம் முன்னர் ஏற்படச்சாத்தியமில்லை. குறிப்பாக எண்பதுகளில் முனைப்புடன் மேற்கிளம்பிய தமிழ்த் தேசியவாதப் பின்னணி இதற்கு களம் அமைத்தது எனலாம்.

எண்பதுகளில் ஏற்பட்ட அரசியல், சமூகவிழிப்புணர்வு, மொழி, இனம் போன்றனவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் குறிப்பாக கவிதைத்துறையிலே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது என்றால் மறுப்பதற்கில்லை. ''மரணத்துள் வாழ்வோம்'' கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து இம் மாற்றம் வெகுவான வளர்ச்சியைக்கண்டது. அதாவது தமிழ்த் தேசியவாதம் பல்வேறு படி முறை வளர்ச்சியைக் கண்டபோது அது இலக்கியம் என்கின்ற துறையையும் பாதித்து.

இந்த தமிழ்த் தேசியவாதம்; பெருந்தேசியவாதத்தின் நெருக்குதல்களுக்கும், அடாவடித்தனங்களுக்கும் உள்ளான போது அவற்றினால் பெண்களும் பாதிக்கப்பட்டனர். இதனால் தமிழ்த் தேசியவாதத்தின் சகல விடயங்களிலும் பெண்களின் பங்களிப்பும் ஏற்பட்டது. இதனாலும் இன்னும் பல பக்க விளைவுகளாலும் அதிகமான பெண் எழுத்தாளர்கள் எண்பதுகளில் தோன்றினார்கள். குறிப்பாக ஈழத்துக் கவிதைத்துறையில் இப் பெண்கவிஞர்களின் வருகை குறிப்பிடத்தக்கது.

எண்பதுகளில் ஈழத்து இலக்கியப் போக்கில் முக்கியமானது பெண்கள் தமது உணர்வுகளை இலக்கியத்தில் பதிவு செய்யும் முறைமையாகும். இதன் ஆரம்பத்தில் ஒரு திருப்புமுனையாக 1986ல் யாழ்ப்பாணம் - பெண்கள் ஆய்வு வட்டத்தினரால் வெளியிடப்பட்ட ''சொல்லாத சேதிகள்'' ஈழத்தில் பெண்களின் தனிக்கவிதைத் தொகுப்பாக வெளிவந்த முதல் தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது ''சிறுநூலாயினும் முக்கியமான நூல்'' என்கிறார் பேராசிரியர் சிவத்தம்பி.பெண்களின் எழுத்துக்கள் தனித்துவமானவை. அவை தனித்துப்பார்க்க வேண்டியவை என்ற ''பெண்கள் இலக்கிய கருத்தாக்கம்'' உருவாக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் பல்கலைக்கழகங்களில் பெண்களின் வருகையும் அவர்கள் மத்தியில் பெண்கள் பற்றிய விழிப்புணர்வும், முற்போக்குச் சிந்தனையும் ஆகும். அத்துடன் தமக்கு என மொழியாடலுடன் கூடிய இலக்கியப் போக்கு தேவை எனச் சிந்திக்கத்தலைப்பட்டதன் விளைவும் எண்பதுகளில் இருந்து ஈழத்தில் பெண்கவிஞர்களின் வருகையை அதிகரித்தது எனலாம்.

இன்று ''பெண்கவிஞர்கள்'' என்று குறிப்பிட்டு ஆய்வு செய்யும் அளவிற்கு ஈழத்தில் தொகுப்புக்களாக வெளிவந்தவைகளை மட்டும் தேவை கருதி குறிப்பிடலாம் என்று நினைக்கின்றேன். சொல்லாத சேதிகள்( (1986), வானதி கவிதைகள் (1991) ) காதோடு சொல்லி விடு(1992), கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992), இருபக்கங்கள் (1992), சிவரமணி கவிதைகள் (1993), விலங்கிடப்பட்ட மானிடம் (1995). இதை விட ஈழத்தினைச் சேர்ந்த ஆனால் இன்று புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற பெண் கவிஞர்களின் கவிதைகளும் தொகுப்புக்களாக வெளியிடப்பட்டுள்ளன. இவையும் ஈழத்தின் கவிதை இலக்கியத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக மறையாத மறுபாதி (1992), கோசல்யா கவிதைகள் (1992) ஆகியன குறிப்பிடத்தக்கன.


ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது பெண் கவிஞர்களின் கவிதைகள் தனித் தொகுப்பாக வெளிவரும் அளவிற்கு அவர்கள் இலக்கியத்தில் கால் பதித்து விட்டனர் என்பதே இதன் வெளிப்படையான உண்மை. ஈழத்தில், குறிப்பாக ஆணாதிக்க தன்மை படிந்துள்ள தமிழிலக்கியப் பரப்பில் பெண்களின் இலக்கியங்கள் இவ்வாறு குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியினைக் கண்டுள்ளதென்பது எண்பதுகளின் பின்னர்தான். ஆகவே 'பெண்கள் இலக்கியம்' என்ற கருத்தாக்கத்தின் தோற்றம் எண்பதுகளில் இருந்து முனைப்புப் பெற்று மேற்கிளம்பி வருவதை அவதானிக்க முடிகின்றது.

இவர்களின் கவிதைகளில் காணப்படும் பொருள் அதிகம் சமகாலத்தில் காணப்படும் சூழலின் பிரதிபலிப்பு, ஆணாதிக்க தன்மை, அரசியல் வெளிப்பாடு, இனவாதக் கொடுமை, தமிழ்த் தேசியவாத எழுச்சி போன்றவற்றினை வெளிக்காட்டி நிற்கின்றன. சொல்லாத சேதிகள் முதல் விலங்கிடப்பட்ட மானுடம் வரையான தொகுப்புகளில் இதன் வெளிப்பாடு உத்வேகம் பெற்றுள்ளதை ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதை வரிகளில் காணலாம். சன்மார்க்கா என்ற பெண் கவிஞரின் கவிதையொன்றில்

''.........................
*தனிநாடு கேட்டு மேடையேறி*
*தனக்கக் கதைத்தவர்கள்*
*அயல் நாட்டில் விருந்துண்டு*
*பாதுகாப்பாய் இருக்கையிலே*
*ஊருக்காய் மடிந்த பிள்ளை*
*தெருப்புழுதியில் கிடக்கின்றான்*
*அவனை அங்கு விட்டுச் செல்ல*
*என் நெஞ்சம் விம்முதையா*
*என் பிள்ளை என்று சொல்ல*
*முடியாத பாவியானேன்''*
(சொல்லாத சேதிகள்-ஒருதாயின் புலம்பல்- பக்.28)

இக் கவிதை வரிகளில் அரசியல் வாதிகளின் போலிவேசம் இனவாதத்தின் கொடுமைகளால் தெருவோரங்களில் துப்பாக்கி வேட்டுக்களால் கொல்லப்பட்ட இளைஞன் ஒருவனின் நினைவுகள் ஆகியவற்றைச் சன்மார்க்கா என்ற பெண் கவிஞர், நிதர்சனப் பார்வையோடு கவிதையாக்கியுள்ளார்.

வானதி என்ற பெண் கவிஞரின் கவிதைகள் பெண் இனத்தின் விடுதலையையும், தேசத்தின் விடுதலையையும் பேசி நிற்பவை. இவரின் ''புறப்பட்டுவா'' என்ற தலைப்பிலான கவிதையில்



*''ஆணாதிக்க புயலால்*
*அடுப்படியில்*
*அகதியாகி*
*தீயோடு*
*மௌனயுத்தம் நடத்துபவளே'*
*புறப்பட்டு வா*
*தன்னம்பிக்கையை மட்டும்*
*தைரியத்துடன்*
*வளர்த்துக்கொள்*
*உன் விருப்பங்களை*
*உன் சிந்தனைகளை*
*சுயமாக செயற்படுத்த*
*சுதந்திரம் கிடைக்கின்றதா?*
.........................
*எம் இதயம் நேசிக்கும்*
*தேசத்து விடுதலை*
*எமக்கெட்டும் போது*
*அங்கே*
*பெண்ணடிமைக்கு*
*சமாதி கட்டப்படும்.*
*சமுதாயத்தின்*
*பிற்போக்கு சிந்தனைகளுக்கு*
*புதைகுழி தோண்டப்படும்*
.........................''
(வானதி கவிதைகள் பக்கம் 15,16)

இங்கு காட்டப்படுவது ஆணாதிக்கம், தேசிய விடுதலை, தமிழரின் தேசியவாதம் வெற்றி பெறும் போது நாடு விடுதலையடையும். அத்தோடு பெண் விடுதலை சாத்தியப்படும் என்ற நம்பிக்கை கவிஞர் வானதிக்குண்டு. உண்மையிலேயே ஒரு நாட்டின் விடுதலை, பெண்களின் விடுதலையிலும் பெண்களின் விடுதலை நாட்டின் விடுதலையிலும் தங்கியுள்ள சமத்துவமான விடயம் என்பதை கவிஞர் கவிதையில் தெளிவுறுத்துகின்றார். அத்தோடு காலம் காலமாய் '' பெண்ணே அடுப்பங்கரையும் சமயலறையும் தானா உனக்கு சுதந்திர உலகம்? என்று கேட்டு முன்னைய தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் நிலையையும் அதிலிருந்து உடைத்து வெளியே வருதல் வேண்டுமென்றும் தன் கவிதையில் சொல்லி விடுகின்றார்.

'பாரதி' என்ற புனை பெயர் கொண்ட சத்திய பாமா என்ற பெண்கவிஞரின் கவிதைகள் வித்தியாசமான போக்குடன் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பவை, பாரதியின் நோக்கு நிலையில் இருந்து மறுதலையாகப் புரிந்து கொள்ளமுயல்பவர்களுக்கு அவர் கூற வந்த பொருள், சொல், நேர்த்தி, ஓசை நயம் என்பன புலப்படப் போவதில்லை 'பாரதியின்' ''விடிவிற்காய் எழுவோம்'' என்ற கவிதையில்

*''இரவொன்று கரைந்து போக*
*இன்னும் சில நேரம் மீதமிருக்கும்.*
*புதுநாளில் பிறப்பிற்காய்*
*புள்ளினங்கள் பாட்டுப்பாடும்*
*ஒரு அதிகாலைப் பொழுது அது*
*பனிமழையில் நனைந்தெழுந்த*
*பனைமரங்கள் சிலிர்த்து நிற்கும்*
*பற்றைகளும் கூட ஒரு*
*புத்துணர்ச்சி பெற்றிருக்கும்*
*பட்டாசு வெடி போல*
*கிட்டவாய் சத்தம் எழும்*
*முன்னுக்கு பின்னுக்கு*
*முதுகிற்கு மேலாக - எம்*
*உயிரை தொட்டணைக்க*
*உலங்கு வானூர்தி குண்டு துடிக்கும்.*
(காதோடு சொல்லி விடு - பக்கம் 05)

இக்கவிதையில் வட புலத்தின் இன்றைய நிலை சற்றும் வித்தியாசமின்றி காட்டப்படுகின்றது. குறிப்பாக பயன்படுத்தப்பட்ட சொற்கள் யாவும் எமக்கு தாயக மண்ணை நினைவு படுத்தி நிற்கின்றது. பேச்சு வழக்குச் சொற்கள் ஓசை நயம் என்பன பாரதியின் இக்கவிதையில் காணப்படுகின்றது. பாரதியின் ''ஐ. நா. சபையே--'' என்ற கவிதையில்,

''-------------------
*ஐ.நா.சபையே*
*உன்*
*ஏமாளித்தனத்தை*
*என்னென்று சொல்ல*
*கோடி கோடியாய்*
*ஏழை உயிர்களை*
*ஏப்பம் விட*
*வல்லூறுகளின் வண்டி*
*ஊதிப் பெருத்து*
*உள்ளுக்குள் அடங்காது*
*செட்டைக்குள்ளே*
*சின்னதாய்த் தெரியுது*
*'உலக சமாதானம்'*
*இந்த*
*உன்னத கோட்பாட்டிற்குள்*
*தலையைப் புதைக்கும்*
*தீக்கோழி நீ*
*முகம் தெரியாவிட்டாலும்*
*நீ-------*
*முழு உடலும்*
*அம்மணமாய்த் தெரிகின்றது.*
----------------''
(காதோடு சொல்லி விடு)

ஆம் பாரதியின் இக்கவிதையில் ஐ.நா.சபை இன்னும் சமாதான சபைதானா என்ற சந்தேகம் எமக்கு ஏற்படுகின்றது. ஈழத்துப் பெண் கவிஞர்கள் தனியே தம்நாடு, தமது பிரச்சினை இல்லாமல் உலக விவகாரங்கள் தொடர்பான கவிதைகள் படைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கஸ்தூரி என்ற பெண்கவிஞரின் கவிதைகளில் தனிமனித உணர்வுகளை மட்டும் கொள்ளாது முழு உலகிற்குமான மானிட வாழ்வின் அவலங்களை, தேவைகளை, மறுக்கப்பட்ட உரிமைகளை, அநீதிகளை, ஆவேசமாக எதிர்க்கும் தன்மைகள் காணப்படுகின்றன. இந்த சமூகத்தில் ஒரு பெண்ணின் அவலம் நிறைந்த வாழ்க்கையை, பெண்ணும் ஒரு மனிதப் பிறவி என்பதை - மறுக்கின்ற இந்த சமூகக் கொடுமையை காட்டுந்தன்மை உண்டு. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வளர்ந்துள்ள இன்றைய நிலையில் அவை மனிதகுல மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். வளர்ச்சியடைந்த நாடுகள் வளர்ச்சி குன்றிய நாடுகளின் அப்பாவி மக்களை வேதனைப்படுத்துவதை ''வல்லரசுகள்'' என்ற கவிதையில்

''--------------
*உங்கள் வல்லமைகள்*
*ஆய்வு செய்யப்படுகையில்*
*வளர்முக நாடுகளே,*
*வாழ வெட்டியாகின்றன.*
*வரலாறு படைக்க*
*மண்ணை*
*மானபங்கம் செய்பவர்கள்,*
*வல்லரசுகளே*
*நீங்கள்*
*வாழ்வதற்காக*
*வாழ்பவர்களை*
*வதைப்பவர்கள்''*
(கஸ்தூரியின் ஆக்கங்கள் பக்கம் -27)

மேலும், ''சுதந்திரமே--!, என்ற கவிதையில்

*''சுதந்திரமே--!.*
*உன்னோடு,*
*சொந்தம் கொண்டாடப்*
*புறப்பட்டதால்*
*சாவு இங்கே*
*சாதாரண விலைக்கு*
*வந்து விட்டது''*
(கஸ்தூரியின் ஆக்கங்கள் பக்கம் -25)

இங்கு சாவை விட சுதந்திரமே பெறுமதி மிக்கது என்று தேசியவிடுதலையை தன் கவிதையில் வெளிக்காட்டி நிற்கிறார்.

அன்னலட்சுமி ராஜதுரை என்ற பெண் கவிஞரின் கவிதைகள் யாவும் ஓரளவு நீண்ட கவிதைத் தன்மை கொண்டன. சிறு கதை வடிவில் இவை படைக்கப்பட்டுள்ளன, தற்கால ஈழத்துத்தமிழ் தேசியத்தின் மீதான பாதிப்புக்கள் இப்பெண் கவிதையில் கொதிப்படையச் செய்துள்ளன என்றே கொள்ளலாம். பண்பாட்டுக்கோலங்கள் சிதைந்து போவதையிட்டு கவலை கொள்ளும் தன்மைகாணப்படுகின்றது. அந்நிய நாடுகளில் வேலையின்றி படும் கஷ்டங்கள் போன்றன பேசப்படுகின்றன. மனித இறப்புக்கள் மலிந்து உலகம் என்பதை ''நெஞ்சம் மறக்கவில்லை'' என்ற கவிதையில்

*''இறப்புக்கள் மலிந்து*
*மறக்கப்படும் இந்நாளில்*
*அரிதான மனித உயிர்*
*அதன் மகிமை*
*மேன்மைகளை*
*இவன் போன்ற*
*நேற்றுத் துளிர்ந்த*
*துளிர்கள்*
*உற்று உணர்வது எப்போது?*
*என் நெஞ்சில் துடிதுடிப்பு*
*இன்னும் தணியவில்லை''*
(இரு பக்கங்கள் பக்கம் - 10)

இவரின் கவிதைகளில் கதைசொல்லும் பாணியில் காணப்பட்டாலும் கவிதை வளர்ச்சிக்கு இதன் பங்களிப்பு தேவையானது.

எல்லோராலும் பேசப்பட்டும், விமர்சனத்திற்கு உட்பட்டும், ஈழத்து கவிதை உலகிலும் சரி பெண்கவிஞர்கள் மத்தியிலும் சரி உன்னதமான இடத்தைப் பிடித்தவர் சிவரமணி, இவரின் கவிதைகள் ஈழத்தில் எண்பதுகளில் பின் காணப்படுகின்ற சகலவிடயங்களைப் பற்றியும்பேசிய கவிதைகள் எனலாம். குறிப்பாக பெண்விடுதலைப் பற்றியும், பேசப்பட்டவை நிறைய உண்டு. இவரின் கவிதைத் தன்மை முற்றிலும் ஏனையவர்களுடன் ஒப்பிடும் போது வேறுபட்டவை. படிமம், குறியீடு போன்ற நிறைய கவிதைகளில் காணப்படுகின்றது. நம்பிக்கை, நம்பிக்கையீனம் என்பவற்றையும் சில கவிதைகள் பிரதிபலிக்கின்றன. சமூக அரசியல் பற்றி நிதர்சனப் பார்வையுடன், கவிதைகள் படைத்துள்ளார். பெண் விடுதலை பற்றிய ''வையகத்தை வெற்றி கொள்ள''என்ற கவிதையில்,

''-----------------
*வாருங்கள் தோழிகளே*
*நாங்களும் வழி சமைப்போம்*
*மண்ணால் கோலமிட்டு*
*அழிந்தது போதும்*
*எங்கள் செந்நீரில் கோலமிட்டு*
*வாழ்க்கைக் கோலத்தை*
*மாற்றி வரைவோம்''*
(சிவரமணி கவிதைகள் பக்கம் -18)

இங்கு இது வரையும் பெண்கள் செய்தவைகளை விட இனி புரட்சி செய்ய வேண்டும். எமது இரத்தம் சிந்தப்பட்டால் தான் பெண் விடுதலை, பெண் சமத்துவம் சாத்தியம் என்பதை இவர் ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகின்றார்.

''யுத்த கால இரவொன்றின் நெருக்கடிகள்'' என்ற கவிதைகள் இன்றைய யுத்த நெருக்குதல்கள் எவ்வாறு வளரும் பிள்ளைகளையும் பாதித்தது என்பதுடன் அவர்களையும் மனோ நிலை ரீதியாக யுத்தத்திற்கு தயார் படுத்தியுள்ளதென்று தெரிவிக்கின்றார்.

''--------------------
*தும்பியின் இறக்கையை பிய்ந்து எறிவதும்-*
*தடியையும் -பொல்லையும்*
*துப்பாக்கியாக்கி*
*எதிரியைச் நினைத்து நண்பனைக் கொல்லுவதும்*
*எமது சிறுவரின் விளையாட்டானது*
---------------''
(சிவரமணி கவிதைகள் பக்கம் - 35)

15→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள்-12

**சென்ற இதழ் தொடர்ச்சி**

1960 யூலை தேர்தலோடு ஏற்படுத்தப்பட்ட ஐந்தாவது பாராளுமன்றத்தில் இரு பெண்கள் மாத்திரமே பொதுத் தேர்தலினூடாக தெரிவு செய்யப்பட்டாலும் இடைத் தேர்தலொன்றின் மூலமாக இன்னுமொரு பெண்ணும் அங்கம் வகிக்க முடிந்தது.

1961ம் ஆண்டு குருநாகல் தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக பெண்ணொருவர் போட்டியிட்ட போதும் தோல்வியடைய நேரிட்டது. நான்கு வேட்பாளர்களோடு போட்டியிட்ட திருமதி தம்மிட்ட ஏ.பீ.குமாரிஹாமி 147 வாக்குகள் மாத்திரமே பெற்றார்.

### பொரல்ல இடைத்தேர்தல்

1964 ஜனவரி மாதம் 18ம் திகதி பொரல்ல தொகுதியில் நடத்தப்பட்ட இடைத்தேர்தல் குறிப்பிடத்தக்க அம்சங்களைக் கொண்டிருந்தது. சில வருடங்களாக கட்சிகளாக பிளவுபட்டிருந்த இடதுசாரிக் கட்சிகளான LSSP, MEP, CP ஆகிய கட்சிகள் இணைந்து தோற்றுவித்த இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி; பொரல்ல இடைத்தேர்தலின் போது பலம் பெற்ற கட்சியாக காணப்பட்டது.

டொக்டர் டபிள்யூ.டி.டி.சில்வாவின் மரணத்தை தொடர்ந்து வெற்றிடமான பொரல்ல தொகுதியில் இடம்பெறப் போகும் இடைத்தேர்தலில் போட்டியிட இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி தீர்மானித்தது. அதன்படி விவியன் குணவர்தனவை தேர்தலில் நிறுத்த முடிவு செய்தனர். இறந்து போன பொரல்ல தொகுதியின் முன்னாள் உறுப்பினர் டொக்டர் டி.டி.சில்வாவின் மனைவியை அத்தொகுதியில் போட்டியிடச் செய்தால் அனுதாப வாக்குகளை பெறச்செய்து வெற்றிபெறச் செய்யலாம் என சுதந்திர சோஷலிச முன்னணி கருதியது. அதன்படி டொக்டர் சில்வாவின் மனைவி ***கமலா டி சில்வா***வை வேட்பாளராக நிறுத்தியது சு.சோ.மு. இவர்களிருவரைத் தவிர சுயேட்சை வேட்பாளர்கள் இருவரும் போட்டியிட்டனர். ஐ.தே.க. தனது வேட்பாளராக (பின்னாளில் பாராளுமன்ற சபாநாயகரான) எம்.எச்.முஹமட் ஐ நிறுத்தியது. இறுதியில் ஐ.தே.க. வேட்பாளர் எம்.ஏச்.முகமட் ஐ 423 மேலதிக வாக்குகளால் பெற்றி பெற்ற விவியன் குணவர்தன இடதுசாரி ஐக்கிய முன்னணியின் முதலாவது; மற்றும் ஒரேயொரு உறுப்பினராகவும் காணப்பட்டார்.

பொரல்ல இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற சில மாதங்களில் ஸ்ரீ.ல.சு.க. சமசமாஜ கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டது. திருமதி விவியன் குணவர்தன உள்ளூராட்சி நிர்வாக பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். ***இலங்கையில் பிரதி அமைச்சராக பதவி வகித்த முதற்பெண்மணி எனும் பெருமை விவயனுக்கு உரியது. இலங்கையில் அதிக தேர்தலில் பங்கு பற்றிய சாதனையையும் விவியனைச்சாரும்.*** எட்டு தடவைகள் போட்டியிட்டு மூன்று தடவை வெற்றி பெற்றவர் விவியன்.

### 6வது பாராளுமன்றத் தேர்தல்

ஸ்ரீ.ல.சு.க. - சமசமாஜக் கூட்டரசாங்கம் நம்பிக்கை வாக்கெடுப்பின் போது ஒரு வாக்கினால் தோல்வியுற்றது. 1964 டிசம்பர் 3ம் திகதியன்று அரசாங்கத்திலிருந்து 14 பேர் விலகி எதிர்க்கட்சியில் சேர்ந்து வாக்களித்திருந்தனர். இவர்களில் சபைத்தலைவரும் விவசாய, காணி, போக்குவரத்து அமைச்சர் சீ.பி.டி.சில்வாவும் ஒருவர்.

இவ்வாக்கெடுப்பின் போது அன்றைய நிதியமைச்சர் கலாநிதி என்.எம்.பெரேராவும், பேர்னாட் சொய்ஸாவும் தங்கள் அரச கடமை நிமித்தம் வெளிநாடு சென்றிருந்தார்கள்.



விவியன் குணவர்தன

> ***இலங்கையில்பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்ட முதற் பெண்ணும், அதிக தேர்தல்களில் போட்டியிட்ட பெண்ணும் என்ற சாதனை விவியன் குணவர்னாவுக்குரியது.***

ஒரு அரசாங்க உறுப்பினர் பாராளுமன்றத்துக்கு வரும் வழியில் வாகன கோளாறினால் இடையிலேயே நின்றார், அரசாங்க உறுப்பினர்களில் ஒருவரான சௌமிய மூர்த்தி தொண்டமான் வாக்கெடுப்பின் போது நடுநிலைமை வகித்தார். மலையக மக்களுக்கெதிரான சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டு இரண்டு மாதங்கள் மட்டுமே ஆகியிருந்த நேரத்தில் திரு.தொண்டமான் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்காமல் ஏன் நடுநிலைமை வகித்தார்? என தமிழ் அரசியல் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்ட போது, தான் அரசாங்கத்தின் நியமன எம்.பி. என்றும் தான் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிப்பது தார்மீக விரோதமென்றும் திரு. தொண்டமான் கூறியிருந்தார்.

எவ்வாறிருப்பினும் ஒரேயொரு வாக்கினால் அரசாங்கம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கவர்னர் வில்லியம் கொபல்லாவவினால் டிசம்பர் 17ம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

அதன்படி 6வது பாராளுமன்றத்துக்கான அத்திவாரமிடப்பட்டது. 6வது பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் 1965 ஜனவரி மாதம் 11ம் திகதி செய்யப்பட்டது. இத்தேர்தலில் 393 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் 13 பேர் பெண்கள். (இது மொத்த வேட்பாளர்களில் 3.56%)

போட்டியிட்ட பெண்கள் பின்வரும் எண்ணிக்கையில் கட்சிரீதியாக வகுக்கக் காணப்பட்டனர்.

***ஐக்கிய தேசியக் கட்சி -3***
***ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி -4***
***லங்கா சமமாஜக் கட்சி -2***
***மக்கள் ஐக்கிய முன்னணி -1***
***தேசிய விடுதலை முன்னணி -1***
***சுயேட்சை -2***

1965 மார்ச் 22ம் திகதி நடத்தப்பட்ட தேர்தலின் இறுதியில் 4 பெண்கள் மாத்திரமே வெற்றி பெற்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் முன்னாள் பிரதமருமான ***திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க*** தேர்தலில் போட்டியிட்ட முதற்சந்தர்ப்பமிது. இவர் அத்தனகல்ல தொகுதியில் போட்டியிட்டு 16,535 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். ஸ்ரீ.ல.சு.க. சார்பில் மீரிகம தொகுதியில் போட்டியிட்ட ***ஷீவா ஒபேசேகர*** 844 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். தேசிய விடுதலை முன்னணி சார்பில் ஊவா பரணகம தொகுதியில் போட்டியிட்ட ***குசுமா ராஜரட்ன*** 1951 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். கலிகமுவ தொகுதியில் ஐ.தே.க சார்பில் போட்டியிட்ட ***விமலா கன்னரங்கர*** 1687 வாக்குகளால் பெற்றி பெற்றார்.

6வது பாராளுமன்றத்தில் நான்கு பெண்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்ட போதும் 1970 மார்ச் 25ம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்ட போது மேலும் இருவரும் அங்கம் வகிக்க காணப்பட்டனர். இவர்கள் இடைத்தேர்தலின் மூலமாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அவிஸ்ஸா வெல தொகுதியில் ஸ்ரீ.ல.சு.க. சார்பில் போட்டியிட்ட முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சோமா விக்கிரமநாயக்க; மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்ட பிலிப் குணவர்தனவுடன் போட்டியிட்டு தோல்விக்குள்ளானார். இவர்கள் இருவரும் மாத்திரமே இத்தொகுதியில் போட்டியிட்டார்கள்.

மீரிகம தொகுதியில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட விமலா விஜேவர்தன; ஸ்ரீ.ல.சு.க. சார்பில் போட்டியிட்ட பீட்டர் ஓபேசேகரவோடு போட்டியிட்டு 744 வாக்குகளால் தோல்வியுற்றார்.

கலகெதர தொகுதியில் ஸ்ரீ.ல.சு.க. சார்பில் போட்டியிட்ட தமரா குமாரி இலங்கரத்ன; ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட ஜி.டி.பண்ராவுடன் போட்டியிட்டு 574 வாக்குகளில் தோல்வியுற்றார்.

இதைவிட விவியன் குணவர்தன மீண்டும் லங்கா சமசமாஜ கட்சயின் சார்பில் பொரல்ல தொகுதியில் போட்டியிட்ட போதும் ஐ.தே.க. வேட்பாளர் எம்.எச்.மொஹமட்டினால் 1692 வாக்குகளால் தோல்வியுற்றார். ஏற்கனவே இடது சாரி அமைப்புகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டிருந்த இடது ஐக்கிய முன்னணி மீண்டும் பிளவுபட்டு தனித்தனியாக போட்டியிட்டமையாலேயே இந்த தோல்வி ஏற்பட்டது என அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்திருந்தனர். இந்த இலேசான சந்தர்ப்பம் பொரல்ல தொகுதி லங்கா சமசமாஜ கட்சியிலிருந்த ஐதேகவின் கைக்கு மாற வழிவகுத்ததுடன் அதுவே இதுவரை நிலைத்து வருகிறது.

**என்.சரவணன்**

### 1961 – 3 –29 குருநாகல் இடைத்தேர்தல்

| | | |
|---|---|---|
| ஹரிச்சந்திர விஜேதுங்க | JVP | 386 |
| ஜயா பத்திரன | SLFP | 10807 |
| டி. பி. வெலகெதர | UNP | 9834 |
| டி. டபிள்யூ நரன்பனாவ | I | 173 |
| திருமதி தம்மிட்ட ஏ. டீ. குமாரி | I | 147 |

### 1964 – 1 –18 பொரல்ல இடைத்தேர்தல்

| | | |
|---|---|---|
| பி. நந்தசேன சமரகோன் | JVP | 47 |
| விவியன் குணவர்தன | ULF | 12529 |
| எம். எச். மொஹமட் | UNP | 12106 |
| திருமதி கமலா டி சில்வா | In-soc | 1356 |
| ஜே. எம். ரணதுங்க | I | 156 |

### 1965 பொதுத்தேர்தல்

| | | |
|---|---|---|
| ***அத்தனகல்ல*** | | |
| ஜே. கஸ்தூரியாராச்சி | MEP | 288 |
| திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா | SLFP | 26150 |
| D. L.W.G. செனவிரத்ன | UNP | 9615 |
| U.H.D.S. விஜேதுங்க | I | 185 |
| ***அவிஸ்ஸாவெல்ல*** | | |
| பிலிப் குணவர்த்தன | MEP | 22093 |
| திருமதி சோமா விக்கிரமநாயக்க | SLFP | 10766 |
| ***மீரிகம*** | | |
| M.B. ரத்நாயக்க | MEP | 235 |
| ஜேம்ஸ் பீட்டர் ஒபேசேகர | SLFP | 17872 |
| திருமதி விமலா விஜேவர்தன | UNP | 17028 |
| K.P.P. கருணாநாயக்க | I | 1956 |
| M.K.W. பொன்சேக்கா | I | 1015 |
| ***கலகெதர*** | | |
| P.P. ஹேரத் | MEP | 83 |
| திருமதி தமரா குமாரி இலங்கரத்ன | SLFP | 9559 |
| W.M.G.T. பண்டா | UNP | 10133 |
| மொஹம்மட் புஸாரி | I | 191 |
| ***பாணந்துர*** | | |
| லெஸ்லி குணவர்தன | LSSP | 20033 |
| திருமதி ஜோன் M.D. பொன்சேகா | UNP | 16005 |
| ***கலிகமுவ*** | | |
| I.D. கருணாதேவ | MEP | 215 |
| P.B. பாலசூரிய | SLFP | 12446 |
| திருமதி விமலா கண்ணங்கர | UNP | 14133 |
| ***பெல்மடுல்ல*** | | |
| M.P. ஜோதிபால | MEP | 522 |
| W.A. கருணாசேன | SLFP | 11917 |
| திருமதி சீதா மொலமூரே செனவிரத்ன | UNP | 8577 |
| K.A. ரணசிங்க | I | 97 |
| ***பொரல்ல*** | | |
| திருமதி விவியன் குணவர்தன | LSSP | 13218 |
| பிரஜா பாலடி சில்வா | MEP | 374 |
| M.H. மொஹம்மட் | UNP | 14910 |
| D.C.அபேவர்தன | I | 100 |
| ***மொரட்டுவ*** | | |
| திருமதி குசலா அபேவர்தன | LSSP | 16020 |
| M. ருஸ்வின் பெர்னாண்டோ | UNP | 11593 |
| M. றஸ்கின் பெர்னாந்து | LSSP | 1048 |
| ***கொலன்னாவை*** | | |
| திருமதி குசுமசிறி குணவர்தன | MEP | 12439 |
| D.S. சமரசிங்க | SLFP | 13267 |
| D.N. சமரகோன் | I | 249 |
| D.P.M. பத்திரன | I | 102 |
| K.E. பெரேரா | I | 89 |
| S.D.A.பெரேரா | I | 59 |
| ***ஊவாபரணகம*** | | |
| திருமதி குசுமா ராஜட்ன | JVP | 6839 |
| S.P. தெலுகாவத்த | SLFP | 3558 |
| M.P. பம்பரபான்ன | I | 4888 |
| ***புளத்சிங்கள*** | | |
| மங்கள முனசிங்க | LSSP | 14023 |
| D.S. தர்மசேன | MEP | 77 |
| திருமதி ரனித்தா s. ரத்னாயக்கா | SLFP | 258 |
| பியிலே பொன்சேகா | UNP | 10433 |
| எட்மன் சமரக்கொடி | VLSSP | 278 |
| பியதாச மலல்கொட | I | 344 |
| ***வத்தேகம*** | | |
| A.G. பெர்னாண்டோ | SLFP | 9461 |
| அலோசியஸ் வீரக்கோன் | UNP | 12373 |
| திருமதிM.G உக்கு மெனிக்கே சமரகோன் | I | 117 |

ULF-United Left Front
IN-SOC- Independent Socialist Party

I - Independent
UNP - United National Party
SLFP - Sri Lanka Freedom Party
MEP - Mahajana Eksath Peramuna
LSSP - Lanka Sama Samaja Party
CP - Communits Party
LPP - Lanka Prajathanthravada Pakshaya
SMP - Samajwadi Mahajana Peramuna
SJS - Sinhala Jatika Sangamaya
CIC - Ceylon Independent Congress
BRP - Budhist Repablican Party
CDC - Ceylon Democratic Congress
JVP - Jatika Vimukthi Peramuna

வரும்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''எப்பிடி நாடகங்கள்?'' என்று நண்பியைக் கேட்டேன். நண்பி தெகிவளை ஜெயசிங்க மண்டபத்திலிருந்து வெளியே வந்தார். ''இம்முறை ஏமாற்றிவிட்டார்கள்'' என்றார். எனக்கும் சிறிது ஏமாற்றமாகத்தான் இருந்தது. ''என்றாலும் கடைசியா ஒரு நாடகத்தைப் போட்டுச் சமாளித்து விட்டார்கள்'' என்றேன்.

# அரங்காடிகளின் நாடகங்கள்: நலிந்தினிக் கிடவோம்!


சிறுகுறிப்பு
மது

அப்படித்தான் சொல்ல வேண்டும். ஏற்கனவே அரங்காடிகளின் நாடகங்களைப் பார்த்திருந்தேன். குழந்தையின் 'இப்போதைக் கேது வழி', முயலார் முயல்கிறார், சுந்தரலிங்கத்தின் அபசுரம், தாசீசியஸின் பொறுத்தது போதும், மஹாகவியின் கோடை, அரங்கக் கலைஞர்களின் கொள்கரி ஆகிய நாடகங்களைப் பார்த்தேன். இம்முறை ஏமாற்றம்தான்.

செப்ரம்பர் 17, ஞாயிறு மழை பெய்த பின் குளிர்ந்த மாலையில் மிகச் சந்தோஷமாக ஜெயசிங்க மண்டபத்திற்குச் சென்றேன். அரங்காடிகள் நேரத்தில் கவனம் அதிகம். சரியாக ஆறுமணிக்கு திரைச்சீலை விலகியது. அரங்காடிகள் சார்பாக சோ தேவராஜா ஏதோ பேசினார். பிறகு 'சோக்கல்லோ சண்முகம்' அரங்காடிகளின் மேடையில். நான் இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அரங்காடிகளுக்கு ஏன் இந்த நிலை? என்று யோசித்தேன்.

பிறகு 'விழிப்பு' நாடகத்திலிருந்து ஒரு காட்சியை சோ.தேவராஜா தனி நடிப்பாகச் செய்தார். நடிப்பு நன்றாக இருந்தது. ஆனால் அரங்காடிகள் எங்களை ஏமாற்றுகிறார்கள் என்பது தெரியத் தொடங்கியது.

அதன் பிறகு அ. இரவியும், சோ. தேவராஜாவும், ச. ஜீவாவும் சேர்ந்து ஏதோ கூடி நடித்தார்கள். எங்களுக்கு காதிலை பூ வைக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்து விட்டது. இம்மூவரும் நடித்த (நாடகமா அது?) 'அது' நல்லதொரு விடயத்தைக் கருவாகக்கொண்டது. ஒருசிறு பிரச்சினையை எவ்வாறு பெரிதாக்கி சிக்கல் படுகிறார்கள் என இந்நிகழ்வு கூறியது. எனக்கு இக்கால அரசியலைத் தான் இந்நிகழ்ச்சி ஞாபகப்படுத்தியது. சமாதானம் என்கின்ற சிறு பிரச்சினையை எவ்வாறு பூதாகரமாக்குகிறார்கள் என்பது நினைவுக்கு வந்தது. ஒழுங்கான பிரதி எழுதி ஒத்திகையும் பார்க்கப்பட்டு மேடையேறியிருந்தால் இந்நிகழ்வு வெற்றியளித்திருக்கலாம்.



பிறகுதான் வந்ததற்கு ஏதோ பிரயோசனம் என்கிற மாதிரி ஒரு நாடகமே நடந்தது. 'நலிந்தினிக் கிடவோம்!'என்ற நாடகமே அது. இரத்மலானை இந்துக் கல்லூரி மாணவர்கள் படித்த நாடகம். அ. இரவி நெறியாள்கை செய்திருந்தார். ஒரு பாடசாலை நாடகமெனத் தெரிந்தது.

வயற்காட்சியுடன் நாடகம் தொடங்குகிறது. ஏழை விவசாயக் குடும்பம். அக் குடும்பத்திலிருந்து ஒரு பெண் மேற்படிப்பு படிக்க விரும்புகிறாள். பொருளாதார நிலைகருதி பெற்றோர் அவளது படிப்பைத் தடுக்கின்றனர். சமூகம் பெண்கள் படிக்கக்கூடாது எனும் கருத்திற்காக அவளைப் படிக்கவிடாமல் தடை செய்கிறது. அவள் உறுதியாக நிற்கிறாள். சமூகம் இவள் கலியாணம் செய்து விட்டால் பிரச்சினை தீர்ந்தது என்று நினைத்து வயது போன ஒருவனை இவளுக்குத் திருமணம் முடிக்க முயல்கிறது. இவள் பெண்கள் அமைப்புடன் தொடர்பு கொண்டு தன் பிரச்சினையைக் கூறுகிறாள். பெண்கள் அமைப்பு இவளுக்காகப் போராடுகிறது. இறுதியில் பெண்கள் அமைப்பினர் சமூகத்தை வெற்றிக் கொண்டு அவளை மீட்கின்றனர்.

எளிமையான ஒரு கதை. பெண்ணைப் படிக்கவிடாமல் எங்கேயாவது தடுக்கிறார்களோ என்றால் அதனையும் நம்பமுடியாதிருக்கிறது. ஆனால் நாடகத்தைப் பார்க்கின்ற போது நன்றாக இருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் நடந்த நாடகம் நேரம் போனது தெரியவில்லை. நடிகர்கள் மிக நன்றாக நடித்திருந்தார்கள். இரத்மலானை இந்துக் கல்லூரியில் க.பொ.த.(சா/த) மாணவர்களே நடித்தனர் என்பதனை நம்பமுடியவில்லை. சமூகம் என்று வயது போனவர்களாகவும், பெற்றோர்கள் என்று பொறுப்பானவர்களாகவும் பெண்கள் அமைப்பாகவும், முதலாளியாகவும், சகோதரர்களாகவும் 5, 16 வயது மாணவர்கள் நடித்தார்கள் என்பது நம்ப முடியாமலிருந்தது. மிக முதிர்ச்சியான நடிப்பாக இருந்தது. இவர்களைச் சிறப்பாக இயக்கியதற்காக அப்பாடசாலையின் ஆசிரியர் அ. இரவி பாராட்டுக்குரியவர்.

நாடகத்தின் பாடல்கள் நன்றாக இருந்தன. ஆனால் குரல்கள் தான் பிசிறாக ஒலித்தன. இசையில் இன்னும் கவனமாக இருந்திருக்கலாம்.

நாடகத்தில் ஒரு கதை சொல்லப்பட்டாலும், அக்கதையினூடாக பெண்கள் எவ்வாறு ஒடுக்கப்படுகிறார்கள் என்பதையே நாடகம் கூற முயற்சித்திருக்கிறது. அநேகமாக சமூகத்தில் ஒவ்வொருவரும் பெண்கள் பற்றி என்ன கருத்து வைத்திருக்கிறார்கள் என்பதை நாடகம் சிறப்பாக எடுத்துக் காட்டியது. இடையில் பெண்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் வந்து நாடகத்தில் பெண்கள் ஒடுக்கப்படும் அம்சங்களை எடுத்துக்காட்டுவது இடையூறாக இருந்தது. ஆனாலும் இது பாடசாலை நாடகம் என்றபடியால் தேவையாக இருந்திருக்கும் என நம்புகிறேன்.

இந்நாடகத்தை எழுதியவர் யார் என விசாரித்தபோது 'அரங்கக் கலைஞர்' என பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. விளக்கம் கேட்டபோது நெறியாளருடன் அனைத்து நடிகர்களும் சேர்ந்தே இந் நாடகத்தை எழுதினார்கள் என்று கூறப்பட்டது. அதுவும் ஒரு நல்ல விடயம் தான்.

'நலிந்தினிக் கிடவோம்' என்ற இந்நாடகத்தைத் தவிர ஏனைய நிகழ்ச்சிகள் எங்களுக்கு ஏமாற்றத்தைத் தந்தன. அரங்காடிகள் அடுத்து முறையாவது நல்ல நிகழ்ச்சிகளைக் தரட்டும்.



# ''நிக்குருமா னை ஆபிரிக்கா னை'' -ஒரு ஆபிரிக்க நாடகம்

## லயனல் வென்ட்டில் ஒக்டோபர் 22,23,24ம் திகதிகளில்

ஆபிரிக்காவின் மாபெரும் தலைவர்கள் மூவர் குனியாவில் (guinea) உள்ள கொனகிரியில் (Conakry) 1966ம் ஆண்டு சந்தித்துக் கொண்டனர். அவ்வேளை, இம்மூவரும் ஆபிரிக்க மக்களின் விடுதலையைப்பற்றிக் கலந்துரையாடிய சம்பவம் ''நிக்குருமா நை ஆபிரிக்கா நை'' (Nkruma-heni... Africa-ni) நிக்குருமா எப்படியோ, அப்படியே ஆபிரிக்கா என்ற அரசியல் நாடகமாக அரங்கேறுகிறது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 22, 23, 24 ம் திகதிகளில் லயனல் வென்ட் அரங்கத்தில் இந் நாடகம் அளிக்கப்படவுள்ளது. இதை நாடக எழுத்துருவில் கொண்டுவந்தவர் நைஜீரியாவில் பிறந்த பெமி ஒசோபிசான் (Femi osofisan) என்பவர். அரங்கத்திற்கு கொண்டு வருபவர்கள் பெமி ஒசோவிசானும் கொழும்பு பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் நெலுபர் டிமெல்லும் ஆவர்.

இப்பொழுது கானா (Ghana) என்றழைக்கப்படும், அன்றைய சுதந்திர ஆபிரிக்க நாட்டின் கருப்பர்களின் முதல் கருப்புத் தலைவன் நிக்குருமா (Nikrumah), மேலைத்தேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடிய குனியாவின் (guinea) பலமிக்க தலைவர் தோர் (Ahmed Sekuo Toure), குனிவாவில் (Portuguese Guinea) போர்த்துக்கீச காலனியாதிக்கத்திற்கு எதிராகப் போராடிய விடுதலை இயக்கத்தின் தலைவர் காப்ரல் (Amikar Cabral) ஆகியோரே அம் மூன்று மாபெரும் தலைவர்கள். 1960ம் ஆண்டு குனியாவின் தலைவராக ஆட்சியில் இருந்த தோர் கொனகிரியில் (guakru) இருந்தார். காபிரேலின் இயக்கத்தின் தலைமையகமும் இதே நகரத்தில் இருந்தது. இந்த நகரத்தில் அடைக்கலம் புகுந்த நிக்குருமா, தலைமறைவு வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார். இந்த மூவரும் இங்கு சந்தித்துக் கொண்டமையானது, அரசியல் வரலாற்றில் மிகவும் வியக்கத்தக்க ஒரு நிகழ்வாகும். அதுமட்டுமின்றி, ஒரே நோக்கத்திற்காக, வெவ்வேறு போக்குகளையும் வித்தியாசமான தீவிர சிந்தனைகளையும் கொண்டவர்கள் இவர்கள். இந்த நாடகம் ''தலைமை'' எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இம்மூவரையும் மையமாகக் கொண்டு விமர்சிக்க முற்பட்டுள்ளது.

1950ம் ஆண்டுகளில் ஆபிரிக்காவில் காலனித்துவத்திற்கு எதிராகவும், சுதந்திரத்திற்காகவும் பல இயக்கங்கள் வளர்ச்சி பெற்றுவந்தன. நிக்குருமா அவற்றுக்கு ஆதரவாக வன்முறையற்றவழியில் பிரச்சாரங்களை ஆரம்பித்தார். பிரிட்டிஷார் பலமுறை இவரைக் கைது செய்தனர். 1951 இல் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் மக்கள் ஆட்சி பெற்ற வெற்றியானது நிக்குருமாவின், பலத்தை நிரூபித்தது. 1952இல் ஆபிரிக்க நாட்டின் பிரதமரானார். 1957ம் ஆண்டு, தனது பிரதேசத்திற்கு கானா என்ற பெயரைச் சூட்டி புதிய தேசத்தின் பிரதமரானார். 1960 இல் இத் தேசம் குடியரசானது. நிக்குருமா நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவரானார். 1961இல் தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபட்டனர். இருவரைப் படுகொலை செய்ய பல முயற்சிகள் நடைபெற்றன. கானா பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது.

நிக்குருமா 1966இல் பீக்கிங்கிக்குப் பயணம் செய்தபோது, இவரது நாட்டின் இராணுவமும் பொலிசும் ஆட்சியைக் கைப்பற்றி, இவரது 15 வருடகால ஆட்சிக்கு முடிவு கட்டியது. இவர் குனியாவில் உள்ள கொனாகிரியில் அடைக்கலம் புகுந்தார். 1972இல் இறக்கும்வரை இங்கேயே இருந்தார்.

1966இல் குனியாவின் தலைவராக தோர் பதவியில் இருந்த காலம் அது. நிக்குருமாவின் ஆபிரிக்க வெளியுறவுக் கொள்கைக்கும், ஆபிரிக்க அரசியல் ஒன்றியத்திற்கும் ஆதரவாக தோர் இருந்தார். இவர் சமரசவாதியல்லாமல் தீவிரமான போக்கையே கொண்டிருந்தார். இவர் இறந்த பின் இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் நாட்டைக் கொண்டுவந்தது.

அமில் கார் காபிரேல் இம் மூன்று சுதந்திர போராளிகளிலும் இளையவராவார். போர்த்துக்கீசரின் குனியாவின் சுதந்திரத்திற்காக கெரில்லாப் போரில் இவரது பஜீக் (Paigc) இயக்கம் ஈடுபட்டது. 1961இல் போர்த்துக்கீசரிடமிருந்து நிர்வாகத்தின் மீதும், இராணுவத்தளங்கள் மீதும் இந்த இயக்கம் தாக்குதல்களில் ஈடுபட்டது. இவரும் மிகவும் தீவிரமான சிந்தனையாளராவார். இவரது தலைமையகம் கொனகரி நகரத்தில் இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம்களின் தூக்குக் கயிறுகளுக்கு....

மருதூர் பஷீத்தின் கட்டுரை வடிவத்திற்கு பதிலளித்த எம்.வை.எம் சித்தீக்கின் கட்டுரை வாசித்த பின் இவை இரண்டிற்கும் அப்பால் ஒரு பக்கம் உள்ளது என்பதை விளக்கியாக வேண்டிய கடமைப்பாடுள்ளதால் அதை எழுத வேண்டியதாகிறது.

கிழக்கு முஸ்லீம்களின் ஆரம்ப அரசியல் வாழ்வைத் தொட்டு விளக்குவதே நிறையப் பேருக்கு விளக்கத்தைக் கொடுப்பதாக அமையும். அப்பிரதேச அரசியலின் பெரும் காலம் M.S. காரியப்பர் வம்சத்தினரிடமே இருந்து வந்தது. இதில் M.L. காரியப்பர் நான்கு தடவைகள் M.S. காரியப்பரைத் தோற்கடிக்க முனைந்து தானே மண்கவ்வியிருந்தார். அதாவது கல்முனை, சம்மாந்துறை நிந்தவூர் தொகுதி மக்கள் தனிமனிதரீதியில ஒன்றுபட்டார்களே தவிர - கட்சிக் கொள்கை என்ற ரீதியில் ஒன்றுபட்டிருக்கவில்லை. சம்மாந்துறை மஜீத், நிந்தாவூர் முஸ்தபா, கல்முனை, மன்சூர், அஹமட் யாவருமே M.S.காரியப்பரின் இரத்த சொந்தங்களாயிருந்ததுவும் அவர்கள் அங்கு வெல்லக் காரணமாயிருந்தது. இவ்வேளை 1970 - 77 அளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்ததாக முஸ்லீம் ஐக்கிய முன்னணியினூடு, M.L. காரியப்பரின் வம்சம் மீண்டும் அரசியலுக்கு வர முயன்றது; தோல்வி கண்டது. அதாவது M.L. காரியப்பரின் கனவு, நனவாக முடியாமலேயே இருந்து வந்தது. நனவாக்க ஹுசைன் நீதிவான் படாத பாடு பட்டார். அசந்தர்ப்பவசமாக தமிழரின் இனரீதியான போராட்டம் முஸ்லீம்களுக்கெதிராகத் திரும்பியது. இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி நாதியற்றிருந்த சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் மேலதிகமாக இருவருடங்களைக் கூட்டி பழையதோர் இயக்கம் என்ற போர்வையில் வெளிக்கிட்டது. இவ்வேளை மன்சூர், மஜீத், உதுமாலெப்பை, மஃறூப் றிஸ்வி சின்னலெப்பை என்ற அரச எம்.பிக்களில் யாராவது ஒருவர் '' முஸ்லீம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்'' என்றரீதியில் குரல் கொடுத்திருந்தால் - நடவடிக்கை எடுத்திருந்தால் காங்கிரஸ் வளர்வது சாத்தியமாயிருந்திராது. அவர்கள் வாய்மூடி மௌனமாயிருக்க நாதியற்ற முஸ்லீம்கள் தொங்கிக் கொள்ள மரத்தின் கீழ் ஒன்று சேர்ந்தனர்.

அஷ்ரஃப் மிகப் புத்திசாலியான அரசியல்வாதி, சந்தர்ப்பம் கைநழுவிப் போகவிடாது ''முஸ்லீம் மக்களின் விடுதலை'' என்றரீதியில் அணிதிரட்டினார். அவர்களின் கனவும் பலிக்கத் துவங்கியது. இதற்கு அல்லாஹ்வின் அருட்கொடையால் அவருக்கிருந்த குரல் வளமும் துணையாய் நின்றது. முஸ்லீம் மக்களும் பேரினவாத நலன்களுக்கு கட்டுப்பட்ட முஸ்லீம் எம்.பிக்களிடமிருந்து '' முஸ்லீம் தேசியம்'' தேவை என்பதால் ஒன்றுபட்டனர். அல்லது ''தமிழ்த் தேசியம்'' என்பதற்கு புலிகள் காட்டிய ஆர்வம் முஸ்லீம்களின் இருப்பை தனித்துவமாக வெளிக்காட்ட வேண்டிய உத்வேகத்தை முஸ்லீம்களிடம் ஊட்டி ஒன்றுபட வைத்தது. முஸ்லீம்களின் வாக்குகள் யாவும் ஒரு அமைப்பிடம் ''வாக்கு வங்கியாக'' இருப்பது தற்போதைய அரசியல் முறைக்கு மிகச் சிறந்ததே! ஆனால் முஸ்லீம் காங்கிரஸ் அதைச் சரியாகப் பயன்படுத்தியதா? நாம் ஆரம்பம் முதல் அதன் நடவடிக்கைகளை ஆராயும் போது தான் முழு உண்மையையும் உணர முடியும்.

1987-ல் பிரேமதாசாவை எதிர்த்து ஏழு கட்சிகள் ஒன்று சேர்ந்து சிறிமாவோ அம்மையாரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தின. முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம்களுக்கென 'தனியான மாகாணசபை' தர வேண்டும் என்ற நிபந்தனையுடன் கூட்டணியை ஆதரித்து நின்றது. நடந்தது என்ன? தேர்தலுக்கு சரியாக 48 மணித்தியாலங்களுக்குள் கூட்டணியை விட்டும் முஸ்லீம் காங்கிரஸ் வெளியேறி - யூ.என்.பியை ஆதரித்தது. சொல்லப்பட்ட பொய்க்காரணம் கொழும்பு மத்திய தொகுதியை கூட்டணி எமது கட்சிக்கு விட்டுத்தரவில்லை என்பது. (கொழும்பு மத்தியில் ஏற்கனவே ஹலீம் இஷாக் என்ற முஸ்லீம் பிரதிநிதியே இருந்தார்) அந்த ஒரு தொகுதியில் போட்டியிடுவதை விட எவ்வளவு நல்லதொரு சந்தர்ப்பத்தை நாம் நழுவ விட்டோம் என்பது இன்றுவரை உணரப்பட்டுள்ளதா? இதுதானா தலைவரின் சிந்தனைத் திறனும் ஆற்றலும்? அப்போது எமது தலைவருக்கு அனுராவால் சூட்டப்பட்ட நாமம் ''அரசியல் விபச்சாரி'' என்பதை மறந்து விடலாமோ?

மாகாண சபைத் தேர்தலில் யூ.என்.பி.யைத் தூற்றோ தூற்றென்று தூற்றிவிட்டு எப்படி நாம் மீள யூ.என்.பிக்கு வாக்களிக்கச் சொல்வது? என வினவப் பட்டபோது ''இரண்டு மௌலவியையும் ''குர்ஆன் ஆயத்தையும் மேடையில் தூக்கி விட்டால் மாறி விடுவார்கள்'' என பதிலளித்த போதே கட்சியை விட்டு ஓடிப்போன ஈமான்தாரிகளும் அப்போது உறுப்பினராயிருந்து வளர்த்தெடுத்த மரம் இன்று நச்சுமரமாகி நிற்கிறது. முஸ்லீம்கள் ''தொப்பையைப் புரட்டுபவர்கள் என்று வசைமொழியை மீண்டும் ஏற்க வேண்டி வந்ததுதான் சமூகம் கண்டபலன்.

**எஸ். நஸிறுதீன்**

இன்றைக்குத் தமிழ்க் குழுக்கள் ஆயுதம் ஏந்தக்காரணம் - பேரினவாத புறக்கணிப்பு மட்டுமல்ல; தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே அதில் பெரும் பங்குண்டு. அமிர்தலிங்கம் ''மறத்தமிழா அச்சமில்லை... அச்சமில்லை- என்று சொல்லடா? எனப்பேச, மனைவி மங்கையர்க்கரசி தமிழ்தேசிய கீதம் பாடுவார். உணர்ச்சி வசப்படும் இளைஞர் குழு பிளேடால் விரல் பிளந்து இரத்தத் திலகமிடும் அமிருக்கு. தேர்தல் முடிந்து அமிரும் பரிவாரங்களும் கொழும்பு செல்ல ஏமாந்த இளைஞர் குழு தூக்கிற்று ஆயுதம். இது ஏற்னெவே வரலாறு தந்த பாடம்.

இன்றைக்கு மேடையில் ''முஸ்லீம் காங்கிரஸ் போராளிகளே....! என்பதுவும் வெறும் வாக்குக்காக இளைஞர்களைத் தூண்டும் பேச்சுக்களைப் பேசுவதும் நாளை எம்மை எங்கு கொண்டு செல்லும்?

முஸ்லீம்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு பாராளுமன்றம் சென்ற முஸ்லீம் காங்கிரஸ் எம்.பிக்கள் வாக்குக்காக முன்வைத்த கோரிக்கைகளில் முதன்மையானவை முஸ்லீம் மாகாண சபைக் கோரிக்கையும் முஸ்லீம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்துதலுமாகும். மேடைகளில் நாளையே மாகாண சபையினை அடைந்து விடுவோம்'' என உணர்ச்சிகரமாய்ப் பேசியதும் அச்சமின்றி வாழும் முஸ்லீம் சமூகத்தை உருவாக்குவோம் என முழக்கமிட்டதும் நாம் மறந்து விடக்கூடியதல்ல.


வெறும் காலுடன், கிழிந்த சேர்ட்டுடன், தான் மௌத்தானால் மனைவி ''இத்தா'' இருக்க வீடின்றிய நிலையில் காங்கிரஸ் தோளில் சுமந்து அவர்பட்ட கஷ்டம் பாமரனுக்குப் பெரிதாய்த்தானிருக்கும். ஆனால் நீங்கள் சொல்வதைப் போலத் தான் விரும்பியவரை (பிரேமதாச) ஜனாதிபதியாக்கத் தெரிந்த அவருக்கு முஸ்லீம்களின் பெரும்பான்மையாக இருந்த அம்பாறை மாவட்டத்தை, சிங்களப் பெரும்பான்மை கொண்டதான ''திகாமடுல்ல'' மாவட்டமாக்க முயன்ற போது தடுக்க முடியவில்லை. கண்டியில் ஒரு முஸ்லீம் பாடசாலைக்கு காணி பெறுவதில் ஒத்துழைப்பு வழங்க முடியவில்லை. திகாமடுல்லவில் நடைபெற்ற குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

சென்ற காலத்தின் போது சந்திரிகா - அஷ்ரஃப், சாணக -அஷ்ரஃப், தொண்டா -அஷ்ரஃப் என மூன்று ஒப்பந்தங்கள் மேடைகளில் முழங்கப்பட்டது. அதிலும் '' முஸ்லீம் சமூகவிடிவுக்கான ஒப்பந்தங்கள் இவை. தேர்தல் முடியட்டும், முஸ்லீம்கள் தலை நிமர்ந்த சமூகமாக வாழ்வார்கள்'' என்றெல்லாம் ஆணித்தரமாக உரத்துச் சொல்லப்பட்டது. பெரும்பான்மை கிழக்கு முஸ்லீம் மக்கள் நம்பினர். ஆனால் தொண்டா -அஷ்ரஃப் ஒப்பந்தம் மட்டும் வெளிவர ஏனைய இரண்டும் மூடப்பட்டே போயிற்று. ஏற்கனவே முஸ்லீம்களின் தலைதாழ்ந்திருந்தது. இப்போதும் தாழ்ந்துதானிருக்கிறது. ஒருத்தரும் நிமிர்த்தியதாகத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. மேய்ப்பனின் 'லேபல்' மட்டும் மாறி விட்டிருக்கிறது.

இந்த தொண்டா - அஷ்ரஃப் ஒப்பந்தம் பற்றி இங்கு கொஞ்சம் சொல்ல வேண்டியுள்ளது. இவ் ஒப்பந்தம் பற்றி சித்தீக் அவர்கள் பிழையானது என்றரீதியில் வீரகேசரிப் பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். வட-கிழக்கு இணைந்த பிராந்திய சபையின் கீழ், உப பிராந்திய சபை (முஸ்லிம்கட்காக) அமைவதும், 20,000 புலிகளை பொலிஸ்படையாக அங்கீகரிப்பதுவும், உபபிராந்தியத்தின் நீதி, நிர்வாகம் நிலம் போன்றவற்றில் பிராந்திய சபை மேலாதிக்கம் செலுத்துவதும் பிழையெனக் குறிப்பிட்டிருந்தார்.

''முஸ்லீம்கள் தனி இனம், இது பல இனங்கள் வாழும் நாடு'' என்றெல்லாம் முழங்கிய முழக்கம் -அஷ்ரஃப் அவர்கள் அஸ்கிரிய மகா பீடாதிபதிகளிடம் ''இலங்கை ஒரு பௌத்த நாடு'' என்று சான்றுப் பத்திரம் வழங்கியதன் மூலம் அவரது அரசியல்

→ 15




## புளொட் சம்பந்தப்படவில்லை

தங்களது செப் 21-ஒக் 04,1995 இதழ் 81ல் குறிப்பிட்ட ''கழுகுக வீரம் -01'' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி தொடர்பானது,

இவ்விடயம் சம்பந்தமாக தங்கள் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ஜள்ளது போல் நகர சபை தடையுத்தரவோ அல்லது வேறு நடவடிக்கையோ மேற்கொள்ளவில்லை. இச் செய்தி உண்மைக்கு முரணாகும். ஏனெனில் தங்களால் குறிப்பிடப்பட்ட வவுனியா மன்னார் வீதியில் நெளுக்குளத்தின் அருகில் அமைந்துள்ள குழுமாட்டுச்சந்தி (மரக்காரம்பளைச் ம;தி) நகர சபையின் கட்டுப்பாட்டு எல்லைக்கு அப்பாற்பட்டது. எனவே இவ் விடயத்தில் நகர சபை தலையிட வேண்டிய கடப்பாடு இல்லை என்பது வெளிப்படை. அத்துடன் அச்செய்தியில் குறிப்பிடப்பட்ட அப்பிரதேச புளொட் அமைப்பு பொறுப்பாளர் செந்தில் என்பவர் நகர சபையுடன் தனிப்பட்ட ரீதியிலோ, உத்தியோ ரீதியிலோ இவ் விடயம் சம்பந்தமாக எத வித தொடர்பையும் வைத்திருக்கவில்லை என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

ரி. லிங்கநாதன்
தலைவர்
நகர சபை
வவுனியா.

## இருபது நிமிடமே இப்போ அதிகம்

தங்களின் 81வது சரிநிகர் இதழில் கரை சேர்வது எப்போ? என்ற தலைப்பின் கீழ் அமைச்சர் ஜனாப் அஷ்ஃரப் காலத்தில் 03 மணி நேரப் பயணம் என உண்மைக்கு புறம்பான செய்தி ஒன்று வெளியாகி உள்ளது. கடந்த காலங்களில் திருகோணமலை மூதூர் படகு சேவை பின் பிரயாண நேரம் 1 மணித்தியாலயம் 10 நிமிடமுமே எடுத்திருக்கிறது. ஆனால் தற்பொழுது கடற் படையினரின் பாதுகாப்பு அந்த படகு மா உற்பத்தி அலை ஊடாகச் செல்வதால் 1 மணித்தியாலமும் 30 நிமிடமும் செங்கிறதே ஒழிய மேற்சொன்ன படி 3 மணித்தியாலம் அல்ல. கௌரவ அல் ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ஃரப் அவர்களால் கப்பற்துறை தறை முக அமைப்புக்கு சொந்தமான இயந்திர படகு முழு நேரச் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுக் கொண்டிருக்கும் இவ் வேளையில் உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

தவிசாளர்
மூதூர் பிரதேச சபை.
27.09.95

## சிவசேகரம் எப்போது உளவுத் துறைக்குப் போனார்

அரசியல் மதிப்பீடு அல்லது கோட்பாட்டிற்கு அப்புறமானது மனித உரிமைகளுக்கான முன் முயற்சிகள் என்று முன்பொருமுறை தியானென்மென் சதுக்க நிகழ்வு பற்றிய சர்ச்சையில் சிவசேகரம் அவர்களின் அரசியல் மதிப்பீட்டுடன் மனிதார்த்தம் தன்னை அவமானப் படுத்திக் கொண்டது போலவே இம்முறையும் நிகழ்ந்தது துர்ப்பாக்கியமானது.

சிவசேகரம் எப்போது உளவுத்துறைக்குப் போனார் என்பது இன்று முக்கியமான கேள்வி. ''நவீன ஈழத்து இலக்கியத்தில் உளவுத்துறை மனோபாவம்'' என்று தனிப்பகுதியே இப்போது உண்டு. செல்வி. சிவரமணியின் செயற்பாட்டுத்தளம் பற்றி இலக்கிய அபிப்பிராயம் என்ற கோதாவில் ஓர் உளவுத்துறை மனோபாவம் லண்டன் நாளிகையில் ராஜன் என்ற புனைப்பெயரில் வெளிபட்டமையை இதனுடன் சேர்க்கலாம்.

மனித உரிமைகளுக்காக எழுதுவதும் அதனோடான சம்பவங்களை இயன்றவரை தேடுவதும் ''நல்ல தண்ணீர்க் கிணறு தேடிப்பிடிக்கும் தொழிலோ'' அல்லது ''இந்து சமுத்திரத்தில் பொதுவான வளிமண்டல அழுத்தம் பற்றிய அறிக்கை'' தயாரிக்கும் வேலையோ அல்ல. மனித உரிமைக்களுக்காக குரல் கொடுப்போர் யாழ்-பல்கலைக் கழகத்திற்கு இன்று தகுதியான கலாநிதிகளா இல்லையா என்பது தானா இன்றைய கேள்வி?

சி.சி.யின் கடிதம் அவர்கள் அவ்வாறு இல்லாத பட்சத்தில் காழ்ப்பின் அடிப்படையிலானது. யோக்கிய மற்றது எனச் சொல்ல வருகிறது. உண்மைதான் பல்கலைக்கழகத்தில்பிரபாகரன் பிறந்த ஊரைத் தழுவிச் செல்லும் தங்கக் கடல் பற்றி யப்பானிய மொழியில் சொல்வதிலேயே அது பிறவிப் பெரும் பயன் அடைகிறது. அதற்கென்று ஓர் மதிப்பு இன்னும் இருக்குமாயின் அது 'மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அறிக்கைகளில் இருந்ததுதானேயல்லாது இயக்கத் தலைமைகளில் இருந்து கற்றுக் கொண்ட ''மறுப்பறிக்கைக் கலாசாரத்தால் அல்ல.''

பேராசிரியர் துரைராஜா பாமரனான எனக்கு ஒரு பொய்யனாக மட்டுமே முதன் முதலில் அறிமுகமானவர். அப்படி அமைப்பு யாழ்ப்பாணத்தில் இல்லை என்ற பொய்யறிக்கைக்காகவே கொலைகாரனினால் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர். அவ்வறிக்கை உண்மையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் எழுதியிருக்க வேண்டியது. இருவரும் சேர்ந்து சிரித்து எடுத்துக் கொண்ட புகைப்படம் களத்தில் பிரசித்தம். அவ்விடத்தில் இருவரது சிரிப்பிற்கும் வேறு அர்த்தங்கள் இருந்தது. இதை லண்டனில் சி. சி. இற்கு இலக்கிய சந்திப்பிற்கு பின்னர் நேரிலேயே கூறியிருக்கிறேன். ராஜினி கொல்லப் பட்டது அதனோடு தொடர்புடைய மற்றவர்கள் மரண அச்சுறுத்தலை எதிர்கொள்வது எல்லாம் சினிமாப்படங்களல்ல.

''இதுவும் எங்கள் மண்'' என்ற சி.சி.யின் கவிதையில் ஏன் இலங்கை அரசாங்கம் இல்லை. இந்திய அரசாங்கம் இல்லை. அமெரிக்கா இல்லை என்று யாரும் கேட்டதில்லை. அது புலிகள் மீதான காழ்ப்பின் அடிப்படையில் எழுதப்பட்டது என்று யாரும் சொன்னதில்லை. இப்போது திருமலையில் இருந்தும் முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டுள்ளார்கள். அமெரிக்கா - இந்தியா- மற்றும் அகில உலகமும் அடங்கலாக இலங்கை அரசு- புலி அத்தனையும் உள்ளடக்கி அடுத்த கவிதை வந்தாற்தான் சிசி. காழ்ப்பின் அடிப்படையில் எழுதாத கவிதை என எம்மால் விளங்க முடியும். தடுமாற்றம் வந்துபோவதற்கான எக்காரணமும் சி.சி. இற்கு இப்போது இல்லை. இப்போதும் அற்புதமான காதற் கவிதைகளை (காழ்ப்புக் கவிதைகள் அல்ல) அவர் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ப எழுதவே செய்கிறார். அவரது சரிநிகர் 81 கடிதத்தை தவிர.

சுகன்
பிரான்ஸ்

## முஸ்லிம் காங்கிரஸ் - தூரம் அதிகம்

சரிநிகரிர் 82வது இதழில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் முஹிர் ரஹ்மான் அவர்களின் பேட்டியொன்று வெளியாகியிருந்தது. அதில் அவர் தவறான வார்த்தைப் பிரயோகத்தையும், நீண்ட தூர அரசியலில் தனது பக்குவமின்மையையும் வெளியிட்டிருந்தார். முஸ்லிம் இளைஞர்களில் ஒரு பகுதியினர் ஆயுத அரசியலை நோக்கிச் செல்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தான் பொறுப்பு என்பதை அவர் வெளியிட்டிருந்தார்.

இதற்காக நான் முஸ்லிம் காங்கிரஸை வக்காலத்து வாங்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் சில்லறையாகவும், மொத்தமாகவும் ஒரு கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்கிறது என்பது உண்மை. ஆனால் ஆயுத அரசியலுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் தூரம் கூடுதலானது.

முஸ்லிம் அரசியலில் முஸ்லிம் இளைஞர்களில் ஒரு குழுவினர், ஆயுத கலாசாரத்தை நோக்கிச் செல்கின்றனர் என்னும் போது அதன் பிரதிபலிப்பு வட, கிழக்கிலே தென்படலாம். அப்படியாயின் நண்பர் முஹிர் ரஹ்மான் கொழும்பை பிறப்பிடமாகக் கொண்டவர். வட, கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சிகளை பொதுசன தொடர்பு சாதனங்களின் வாயிலாக தெரிந்து வைத்துள்ள ஒரு கட்சியின் பொதுச்செயலாளராகும். ஆனால் இவர் முஸ்லிம் அரசியலில் அக்கறையுள்ளவர் என்று ஒரு பத்திரிகையில் கருத்து வெளியிடுவதாயின் அவர் நேரடியாக வட, கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினையுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக அமைச்சர்களான பௌசி, அலவி மௌலானா போன்றோர் முஸ்லிம்களின் தலைமையை பொறுப் பெடுத்துக் கொள்ள விரும்பும், வட, கிழக்கு முஸ்லிம்களின் அன்றாட மற்றும் நிரந்தர பிரச்சினைகள் பற்றி தெரியாததால் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்க முடியாதுள்ளது.

நௌபல்
ஒட்டமாவடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 1980களில்.......

ஆகவே யதார்த்தமான கவிதைகள் என்றே சிவரமணியின் கவிதைகளை அடையாளப் படுத்தலாம். தமிழ்பேசும் முஸ்லிம் சமூகத்திலிருந்து பெண்கவிஞர்கள் எண்பதுகளின் பின் நிறையப் பேர் தோன்றியுள்ளனர். மசூறா, ஏ.மஜிட் சுல்பிகா இஸ்மாயில், கலைமகள் ஹிதாயா, அஷ்ரபா நூர்டீன், மரினா இல்யாஸ், ஸர்மிளா இஸ்மயில், சுல்பிகா ஷெரிப் போன்ற முஸ்லிம் பெண்கவிஞர்களும் தோன்றி ஈழத்தின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளனர். அஷ்ரபா நூர்டீன் என்ற முஸ்லிம் பெண் கவிஞரின் ''சகோதர இனத்திற்கு'' என்ற கவிதையில்

*கணக்குத் தீர்க்கப்படும்*
*உனக்கும் ஒரு நாளைக்கு'*
*''ரவுண்ட் அப்பில்''*
*நீ என்னைக்*
*காட்டிக் கொடுத்தாய்'*
*பூட்ஸ் கால்கள்*
*என் தோலைத்*
*துகிலுரித்தபின்*
*உயிர் இருந்தும்,*

*பிணமாய்க் கிடந்திருக்கின்றேன்'*
*நான்கு சுவர்களுக்குள்'*
*விடுதலை கிடைப்பினும்,*
*வேதனை மறக்காது*
*எங்கேயோ*
*வெடித்த குண்டுக்காய்*
*என்னை விசாரிக்கவென*
*அழைத்துச் சென்றார்கள்'*
--------------''

(தாகம் மே 1994)

என்ற இக்கவிதையில் நாட்டில் அப்பாவிகள் எவ்வாறு எல்லாம் சோதனைக்கும் துன்பத்திற்கும் ஆளாகின்றார்கள் என்பதைக்காட்டுகின்றார்கள் கவிஞர். இன்னும் இவரின் கவிதைகளில் ஆணாதிக்கத்தின் கொடுமை காட்டப்படுகிறது. ஆனால் இந்த ஆணாதிக்கத்திற்கு எதிராகப் பெண்கள் புறப்படுவார்கள் என்று ஆவேசமாக இவர் தன்கவிதையில் காட்டியுள்ளார் ''கனவு நனவாகும்'' என்ற கவிதையில் சில வரிகள்

''---------------

*அது வரை*
*எங்கள் கோஷங்கள்*
*அவர்களுக்கு வெற்று முழக்கமாய்த்*
*தெரியும்'*
*ஒவ்வொரு இதயத்தின்*
*சாபமும்*
*இனி வரும் ஆண்வர்க்கத்திற்கு*
*பலத்ததோர் அடியாய்*
*இருக்கும்'*
*அப்போது*
*பெண் ஒருத்திக்காய்*
*பித்தர்கள்*
*உலகமெல்லாம் அலைந்து திரிவர்'*

(1995)

இக்கவிதையில் பெண்கள் ஆணுக்கெதிராகப் புறப்பட்டால் அதன் தாக்கம் எப்படி அமையும் என்பதையே காட்டியுள்ளார், இவ்வாறு முஸ்லிம் பெண்கவிஞர்களின் வருகை கூட தமிழிலக்கியத்தில் ''பெண்கள் கவிதை ஒரு சிலரின் தொகுப்பாக வெளிவந்ததில் ''விலங்கிடப்பட்ட மானுடம்'' என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

ஆகவே எண்பதுகளில் ஈழத்தின் பல பகுதிகளிலிருந்தும் அதிகளவான பெண் கவிஞர்கள் தோன்றியது மட்டுமின்றி காத்திரமான படைப்புக்களையும் படைத்துள்ளனர். ஈழத்தின் கவிதை இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பு காத்திரமானதென்றே கூறல் வேண்டும். 'பெண்கள் இலக்கியம்' என்று தனித்து-தனித்துறையாகப்பார்க்கும் அளவிற்கு அல்லது பார்க்க வேண்டியதன் முன் முயற்சிகள் எண்பதுகளின், ஆரம்பத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழிலக்கியத்தில் ஆணாதிக்கச் சமூகம் முதன்மை பெற்றது போல இனி ஆண்-பெண் என்ற இலக்கியப்பகுப்புடன் தமிழிலக்கியத்தைப் பார்த்தால், தமிழிலக்கியத்தின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதாக அமைவதோடு, பெண்கள் சமத்துவமாக எழுத்துலகில் நிலைத்து நிற்க வழியமைக்கும் என்பதில் ஐயமில்லை.

## கலாநிதி நீலன்......

ஒக்டோபர் 7ஆம் தேதிய ''டெயிலி நியூஸ்'' பத்திரிகையின் 10ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட தங்கள் கட்டுரையில், தமிழர் என்ற முறையில் தாங்கள் ''கடைசியாக 1987ல் தமிழ் அரச கருமமொழியாக்கப்பட்டது'' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இது சரியா? இப்படிக் கூறுவது நேர்மையா? அரசியலமைப்பின் உறுப்புரை 18 எவ்வாறு கூறுகிறது? அது இப்படித் தான் கூறுகிறது''

1.இலங்கையின் உத்தியோகபூர்வ மொழி சிங்களமாதல் வேண்டும்.
2.தமிழும் ஓர் உத்தியோகபூர்வ மொழியாகும்.

ஒரே வரியில் சிங்களமும் தமிழும் உத்தியோகபூர்வ மொழிகளாதல் வேண்டும் என்று ஏன் கூறப்படவில்லை? இதிலுள்ள வித்தியாசத்தைத் தாங்கள் விளங்கிக்கொள்ளவில்லையா? அல்லது விளங்க நேர்மையில்லையா? உண்மையில் இவ்விரண்டு வகைப்பட்ட கூற்றுக்களுக்கிடையிலும் வித்தியாசம் இருப்பதை உணர்ந்து தான் இந்த அரசாங்கம் தமது யோசனைகளில் 'சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளாக இருக்கும்'' என்று வெறுமனே கூற முன்வந்துள்ளது.

தாங்கள் எழுதிய கட்டுரையில் '' நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சிமுறை மத்தியில் அதிகாரத்தைத் தேங்கவைப்பதற்கு வழிவகுப்பதாகவும், மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கலை மட்டுப்படுத்துவதாகவும்'' கூறியிருக்கிறீர்கள். இதற்காகவா, தாங்களும் தங்கள் கட்சியும் இன்னமும் நிறைவேற்று ஜனாதிபதி முறை அரசை தீவிரமாக ஆதரித்து வருகிறீர்கள்? ஒருவர் அரசியலில் நேர்மையாக இருக்க முடியாவிட்டாலும் ஒரு உறுதியான நிலைப்பாட்டுடன் இருக்க முயல வேண்டும்!

தமிழர்களின் நலன்களுக்குப் பெருமளவு சாதகமான இருசட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சமீபகாலங்களில் தாங்களும் தங்கள் கட்சியும் கொண்டிருந்த நிலைப்பாடு தான் என்ன?

பாதுகாப்பு வரிச்சட்டமூலத்தை எடுத்துக் கொள்ளுவோம். இதனால் பெறப்படும் பணம் தமிழர்களின் தலைகளில் குண்டு போட்டு அவர்களின் சொத்துக்களை அழிப்பதற்கும் பயன்படுத்தப்படும் அல்லவா? தாங்கள் இச்சட்ட மூலத்துக்கு எதிராக வாக்களித்தீர்களா? அல்லது வாக்கெடுப்பு நேரத்தில் மெதுவாக நழுவிவிட்டீர்களா? தங்கள் கட்சி எவ்வாறு நடந்துகொண்டது?

தமிழர்கள் வாழும் சில பிரதேசங்களில் சட்ட விரோதக் குடியேற்றங்களை நியாயப்படுத்த காணி அபிவிருத்தி (திருத்த) சட்டமூலம் கொண்டவரப்பட்ட போது, அச்சட்டமூலத்துக்கு த.வி.கூ. தவிர்ந்த ஏனைய கட்சிகளைச் சார்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் தாங்கள் நாடவில்லையா? தங்களால் தவறாக வழி நடத்தப்பட வேண்டாம் எனத் தமிழ் உறுப்பினர்களை அஸ்வர் கேட்டுக் கொள்ளவில்லையா? கடைசியாக வாக்கெடுப்பு நேரத்தில் தாங்கள் வாக்களித்தீர்களா? அல்லது பாராளுமன்றத்திலிருந்து நழுவிவிட்டீர்களா? தங்கள் கட்சி எவ்வாறு நடந்து கொண்டது? தாங்கள் தவறாக வழிநடத்தி ஏமாற்ற விழையும் தமிழ் தேசிய இனம் தங்களின் தில்லுமுல்லுகளையும் தங்கள் கட்சியின் நிலைப்பாட்டையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கான காலம் வந்துவிட்டது.

இச்சந்தர்ப்பத்தில் ஜே.ஏ.புறோட் என்ற பிரபல எழுத்தாளர் கூறிய வாசகங்களைத் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

***''ஆசாபாசங்கள் எப்படி அலைக்கழித்தாலும், தன்னைப் பொறுத்தவரை ஒருவர் நேர்மையானவராக இருக்க வேண்டும். தான் உள்ளத்தில் நினையாத எதையும் உதட்டில் கூறக்கூடாது. தனது உள்ளத்தையே தான் ஏமாற்றக்கூடாது. எல்லாக் கெட்ட குணங்களிலும் நேர்மையின்மை மிகவும் மோசமானது''.***

## முஸ்லிம்களின் தூக்கு.......

சாணக்கியத்தையே கேலிக்கூத்தாக்கியதைப் புரியமுடிகிறதா, உங்களால்? ஜே.ஆர்.தான் இலங்கை இந்திய ஒபபந்தத்தில் முஸ்லீம்களைப் புறக்கணித்தாரென்றால் அஷ்ரஃப்பும் புறக்கணித்தேயுள்ளார். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவுக்கு இதுவரை முஸ்லிம் காங்கிரஸ் எந்த சிபார்சு அல்லது யோசனையையும் இதுவரை தெரிவிக்கவில்லை தெரிவிக்கவும் அதனால் முடியவில்லை. ஏனெனில் கைவசம் அதனிடம் அந்த அளவு சரக்கில்லை. வெறுமனே வாக்கு வேட்டைக்காக ''முஸ்லீம் மாகாண சபைக் கோரிக்கை'' யை முன் வைத்தது மட்டுமே அதனால் செய்ய முடிந்தது. அதிலுள்ள பிரதிநிதிகளுக்கு இது எவ்வாறு அமைய வேண்டும், எவ்விதம் அது சாத்தியப்படும், அது எந்தெந்த இயல்புகளைத் தன்னகத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இவர்களைக் கொண்டு தானா முஸ்லீம்களின் இருத்தலை, பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை நாம் மேற்கொள்வது. இவர்களால் நாம் தவறாக சந்தேகங்கள் கொண்டு ஏனைய இனங்கள் பார்க்கக்கூடிய நிலைக்கு உள்ளாக்கப்படுகிறோம் -என்பதுவே உண்மை நிகழ்வாக உள்ளது.

ஆண்டாண்டு காலம் தேசிய விழா, தேர்தல் யாத்திரை என இலட்சக் கணக்கில் செலவு செய்து மக்கள் மத்தியில் நடவடிக்கை மேற்கொள்ளும் காங்கிரஸ், மாகாணக் சபைக் கோரிகையை வெல்ல மக்கள் மத்தியில் என்ன வேலைத் திட்டங்களை மேற்கொண்டது? அரசியல் கோரிக்கையின் வெற்றிக்கு பரவலான அரசியல் விழிப்பு மக்களிடம் இருந்து வரும் அழுத்தமும் அவசியம் என்பது கூடவா தலைவர்களுக்கு விளங்கவில்லை.

அடுத்தது முஸ்லீம்களின் பாதுகாப்பு? திருகோணமலையில் சில முகாம்கள் வாபஸ் பெறப்பட்டதால் கிண்ணியாவை நோக்கி முஸ்லீம் மக்கள் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். களுத்துறையில் பொலிஸ் துப்பாக்கிச் சூடு, புத்தளப் பகுதியில் முஸ்லீம் வீடுகள் தீக்கிரை ஏறாவூர் துப்பாக்கிச் சூடு.... இவ்வாறு முஸ்லீம் காங்கிரஸால் அமைக்கப்பட்ட அரசாலேயே முஸ்லீம்களுக்கு பாதுகாப்பற்ற நிலைமைதான் தொடர்ந்து கொண்டிருக்கிறது. போதாதற்கு அக்கரைப்பற்று ஐந்தாம் கட்டையிலுள்ள இராணுவ முகாமும் அகற்றப்பட்டாயிற்று. பெரிதாகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகச் சொல்லி அதை நம்பி வாக்களித்த மக்களுக்கு முன்னர் இருந்ததை விட என்ன பாதுகாப்பை முஸ்லீம் காங்கிரஸால் வழங்க முடிந்திருக்கிறது. அது இவர்களால் ஒரு போதும் முடியாத விஷயம். முன்னர் பச்சை, நீலம் என்ற போர்வையில் சில தலையாட்டிகளைப் பாராளுமன்றம் அனுப்பினோம். அவாகள் தின்று கொழுத்தார்கள. இவாகளும அதே தான். ஆனால் அவர்களைப் போலன்றி '' இன்ன பதவி தா'' ''இவ்வளவு தா'' என தமக்காக பேரம் பேசக் கூடியதாக எமது வாக்குகளை மாற்றியமைத்து அனுப்பியிருக்கிறோம் அவ்வளவுதான்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சில பாடங்களை உங்களுக்கு விட்டுச் சென்றிருக்கிறது. ''முஸ்லீம்கள் தேசிய இனம், அவர்களுக்கு மாகாணசபை தேவை'' என்பது அத்தியாவசிய தேவையாகும். உங்களது நடவடிக்கைகளால் உங்கள் கட்சி அழிந்து போகலாம். ஆனால் மாகாண சபைக் கோரிக்கை தோல்வியடையக்கூடாது. எனவே உங்களது நடவடிக்கைகளால் முஸ்லீம்கள் தனித்துவ இனம்' என்பதையும் 'மாகாண சபைக்கோரிக்கையையும்' சிதைத்து விடாதீர்கள். உங்கள் கட்சி அழிவது வேறு; பாதுகாப்பும் இன இருத்தலை நிலை நிறுத்தலும், அழிந்து போவது என்பது வேறு. இந்நிலை ஏற்பட இடம் வழங்குவீர்களேயானால் அடுத்துவரும் காலங்களில் முஸ்லீம்களின் அரசியல் விளைவு தீவிர பரிமாணம் பெறும் என்பதும் வெள்ளிடை மலையாகும். இதற்குரிய முழுப்பொறுப்பையும் நீங்களே சுமந்தவர்களாவீர்கள்.

## அப்பா.......

உணவு ஊட்டுவார். கதை கூறுவார். கதை கேட்பார்கள். உண்பார்கள். பாட்டாவிற்குத் தம் கதை கூறுவார்கள் பாட்டா படுக்கை விரிப்பார். பையன்கள் படுக்கையில் புரள்வார்கள்.

இப்போ என் பையன்கள் பாடசாலை விட வீட்டை வரமாட்டேன் என்கிறார்கள். ''வீட்டை போனால் பாட்டாவை நினைத்தால் அழுகை அழுகையா வருது'' என்று கண் கலங்குகிறார்கள்.

யாவற்றிலும் கொடுமை இதுதான்: இறுதிக் காலத்தில் அப்பா எம்மூரில் இல்லாமற் போனார். எம்மூர் எம்மிடம் இல்லாமற் போனது. ''எங்கன்ரை கிணத்துத்தண்ணி குடிச்சே சீவிக்கலாம்'' என்பார் அப்பா. தோட்டங்களும். வயல் வெளிகளும் சூழ்ந்த கிராமம். அடர்ந்த தோப்பாகப் பனைகள் நிறைந்த ஊர். வழுக்கி ஆறும். பினாக்கைக் குளமும் உள்ள ஊர் அது. ஊரின் ஒரு எல்லையில் அம்மன் கோயில். அதுவே அப்பாவின் கோயில். வெள்ளி தோறும் பஜனைக்குச் சென்று. திருவிழா தோறும் விரதம் பிடித்து. பிரதட்டை பண்ணி. நல்ல நாளில் தேங்காய் உடைத்து. 'நெஞ்சம் உருக விழியருவி முத்து உதிர மெய்ப்புளகம் ஊர. உரை குழற 'கும்பிட்ட கோயில் அந்த ஊரில் அளவையூரில் அப்பா இல்லாது போனார்.

சிறுகச் சிறுகச் சேமித்த காசு. உடல் வருத்தி. உழைப்புக் கொடுத்து ஓய்தலின்றி ஒழிச்சல் அற்று வியர்வை சிந்தி வருந்தி உழைத்தகாசு. அந்தக் காசில் வாங்கிய காணி. வெட்டிய கிணறு. கட்டிய வீடு. வீட்டுக் காணியில் எல்லாப் பழமரங்களும் விளைந்தன. தோடை. மா. மாதுளை. எலுமிச்சை. வாழை. அட வாழையிலும் கூட எத்தனை வகைகள்? கப்பல். கதலி. இதரை. மொந்தன். செவ்வாழை. பூவாழை. யானை வாழை.பன்றி வாழை பச்சை நாடான் வாழை என்ற எல்லா மரங்களும் கண்ட காணி. அப்பா கிணற்றில் அள்ளி இறைத்த விளைச்சல். உயர்ந்த வீடு . வளமான காணி. அழகான சூழல் இந்த வீட்டில். இந்தக் காணியில் இந்தச் சூழலில் அப்பா இல்லாது போனார்.

எழில் சூழ்ந்த இலங்கை நாட்டில் தமிழ் மொழி பேசுவோருக்கு விதிக்கப்பட்ட விதியின் பிரகாரம். அப்பா தன் தாயகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டார்

அப்பாவிற்கு அதுவே மிக வேதனையாக இருந்தது. எந்த நாளினைப் போய்ச் சேர்வோம் என்று நினைத்தாரோ? வீடு. ஊர். கோவில். உறவினர்... என்று சுற்றிச் சுற்றி அதுவே நினைவாகியது. நினைவே யமனாகியது.

அப்பா சொன்னார்: ''இண்டைக்கு அம்மாள் கோவில் கொடியேற்றம். ''பிறகொருநாள் கூறினார்'': இண்டைக்கு அம்மாள் கோயில் தேர்...'' என்று தொடர்ந்தார். ''கோயிலும் இருக்கோ.. ஆமிக்காரன் புத்தர் சிலையை வைச்சிருப்பான்... தேரை எரிச்சிருப்பான்...'' பூங்காவனம் என்று சொன்ன மறுநாள் நெஞ்சுக்குள் நோ என்றார்.

பிறகு நவமி தினத்தன்று. காகம் கரைய முடியாத. சேவல் கூவ முடியாத. மிக்க வைகுறு விடியற் பொழுதில் அப்பா இறந்து போனார். நம்மூரில் என்றாலோ அப்பா இறந்திருக்க மாட்டார். சோளகம் எகிறி. எகிறி. புழுதியை எத்தி. பனைகளை ஆட்டி ஆட்டி வீசியிருக்கும். மாம்பழம். பலாப்பழங்களின் மணத்தினால ஊரே நிறைந்திருக்கும். அப்பா அம்மாள் கோயிலுக்குச் சென்றிருப்பார். நெஞைசைக் குடைந்து. அதன் ஆத்மாவைப்பிடித்து இழுத்து உருக்கிற நாதசுரத்தின் நாதத்தில் அப்பா உருகி இருப்பார். ''அம்மாள் என்னைக் கைவிடாள்'' என்று நிச்சயமாக நம்பியிருப்பார்.

## வரவு



**The hill country in Srilankan Tamil literature**

அந்தனிஜீவாவினால் எழுதப்பட்டு, ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட, ***இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் மலையகம்*** என்ற புத்தகம் வெளிவந்துள்ளது. பேரசிரியர் சிவத்தம்பியின் முன்னுரையுடனும், அழகான அட்டைப்படத்துடனும், மலைநாட்டு வெளியீட்டகம் இப்புத்தகத்தை வெளியீட்டுள்ளது.

குன்றின் குரல் என்ற சஞ்சிகையில் வெளியான நான்கு கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அவை மலை நாட்டு இலக்கியத்தின் வளர்ச்சி, மலைநாட்டு தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவங்கள், திருமதி. மீனாட்சியம்மாள், தோட்டத் துறையின் தூதுவர் நடேசையர், ஆகிய கட்டுரைகளாகும்.

முதலாவது கட்டுரையில் மலைநாட்டு மக்களின் கலை, இலக்கியம் தொடர்பான மேலோட்டமான வரலாறும், அதற்குப் பங்களித்தவர்களான நடேசையர், மீனாட்சியம்மாள், அப்துல் காதர், புலவர். கே. கணேஷ், சி.வி.வேலுப்பிள்ளை ஆகியவர்களுடன் இன்றைய எழுத்தாளர்களது குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டுரையில் கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம்,கரகம், காவடி, அருச்சுணன் தபசு, காமன் கூத்து ஆகியன தொடர்பான குறிப்புகள் உள்ளன.

மூன்றாவது கட்டுரையில் திருமதி மீனாட்சியம்மாளின் வாழ்க்கை வரலாறும், நான்காவது கட்டுரையில் நடேசையரின் வாழ்க்கை வரலாறு, மிகச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

சாரல் நாடன் ஏ.வி.பி.கோமஸ், ஏ.தேவராஜன் ஆகியோருடைய மொழிபெயர்ப்பில் இந் நூல் வெளியாகியுள்ளது.

## யாழ்.குடா

ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கோ இது அவர்களுடையதோ, அவர்கள் வாய் கிழியக் கத்தும் மக்களுடையதோ பிரச்சினையாக இல்லாமல் போய் விட்டது. அரசோ மக்களை 'விடுவிப்பது' என்பதில் உறுதியாக இருக்கிறது.

கீழே யாழ் மாவட்டத்துக்கு ஆண்டொன்றிற்கு தேவையான உணவுப் பொருட்களின் விபரத்தையும் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பொருட்களின் விபரத்தையும் தருகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

# சொன்னது என்னாச்சு?

சந்திரிகா அரசாங்கத்தின் 'மின்னல் வேக' தாக்குதல்கள் வடக்கில் மட்டுமல்லாமல் நாடுபூராவும் தொடங்கி விட்டதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது அடுத்தடுத்து வந்த பாணின் விலையேற்றம் என்கிறார் எமது அலுவலகத்திற்கு வருகை தந்த வாசகர் ஒருவர்.

பாணின் விலையேற்றம் மின்னல் வேக தாக்குதல் என்றால், அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமநாயக்க அவர்கள் அதற்கு அளித்திருக்கும் விளக்கம், புக்காரா விமானத்திலிருந்து வீசப்பட்ட பீப்பாய் வெடி குண்டுபோல வெடித்திருக்கிறது.

விவசாயிகளது நெருக்குதல் காரணமாக, அவர்களது விளை பொருளான அரிசியை சந்தைப்படுத்துதலில் அவர்களுக்குள்ள நெருக்கடியைப் போக்குவதற்காக செய்யப்பட்ட ஒரு நடவடிக்கையே இந்த விலையேற்றம் என்று அறிவித்திருக்கிறார் அவர்!

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின், இவ்வாறான விசித்திரமான காரணங்களை கேட்டுக் கேட்டு மக்கள் வியப்பு மேலீட்டினால் அதிர்ச்சி அடைந்து போயிருக்கிறார்கள்.

உலக சந்தையில் மாவின் விலையேற்றம் பற்றி பேசியதெல்லாம் பாணின் விலையேற்றத்திற்கு காரணம் இல்லை! அல்லது தேர்தலின் போது பாணின் விலையை 3/50 ஆக்குவோம் என்று அறிவிக்கும் போது, அதைச் செய்வதற்காக ஒதுக்கத் தீர்மானித்திருந்த மானியப்பணம் யுத்தத்திற்காக செலவு செய்ய தேவைப்படுவதால் அல்ல. மாறாக, விவசாயிகள் மீதான அக்கறையால் செய்யப்பட்டிருக்கிறது இது!

இந்த அரசாங்கத்துக்கு மக்கள் மீதுதான் எவ்வளவு அக்கறை!

வடக்கிலுள்ள தமிழ் மக்களை புலிகளிடம் பாதுகாப்பதற்காக, அங்கு யுத்தத்தில் ஈடுபடுகிறது! அந்த யுத்தத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்படுகின்றார்கள் என்றாலும் கூட, அவர்களைக் காப்பாற்றுவது முக்கியம் அல்லவா?

புலிகளால் கொல்லப்படுவதை விட, அரசாங்கப் படைகளால் கொல்லப்படுவது தமிழ் மக்களுக்கு கிடைத்துள்ள பாக்கியம் அல்லவா?

அதுமட்டுமா? தொழிலாளர்கள் மீதுள்ள அக்கறை காரணமாக தொழிலாளர் சாசனத்தை உருவாக்கியுள்ளது. அந்நிய நாட்டு முதலீட்டாளர்களுக்கும் உள்நாட்டு முதலாளிகளுக்கும் அவர்கள் தமது முதலீட்டை இலாபகரமாக செய்வதற்காகவே இந்த சாசனம் வரையப்பட்டுள்ளது. இதன் மூலம் எமது நாட்டு தொழிலாளர்கள் தமது இற்றைவரையான இன்னல்களிலிருந்து விடுபடுவார்கள்!

இவ்வளவும் தானா? இல்லை - இன்னமும் சொல்லலாம்!

இந்த நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டவும், சமாதானத்தைக் கொண்டு வரவும் அவசர காலச்சட்டத்தை திரும்பவும் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது!

மக்கள் உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தொடர்பு சாதன தணிக்கைச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. ஜனாதிபதி முறையை பேணிப் பாதுகாப்பதன் மூலம் பாராளுமன்றத்திற்கு பலம் சேர்த்து வருகிறது.

ஆக, எமது அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் மக்களின் நலன்களுக்காகவே செய்யப்பட்டு வருகின்றன என்பதில் என்ன சந்தேகம்.

ஆனால், நம்பமுடியாதபடிக்கு, இந்த நாட்டு மக்கள் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் குறித்து அதிர்ச்சி அடைந்து போயிருக்கிறார்கள். அவர்கள், தமது விளக்கக் குறைவு காரணமாகவோ என்னவோ இப்படியான முட்டாள்தனமான கேள்விகளைக் கேட்கிறார்கள்.

அந்தக் கேள்விகள் இவைதான்!

0 ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக கூறித்தானே தேர்தலில் வெற்றி பெற்றீர்கள். அதை நீடிப்பதற்காக யாரிடம் அனுமதி பெற்றீர்கள்?

0 யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை கொண்டுவரப் போவதாகத்தானே கூறினீர்கள். இப்போது யுத்தத்தை நடாத்த யாரிடம் அனுமதி பெற்றீர்கள்?

0 ஆடம்பர வாகனங்கள், ஆயுதங்கள் என்பனவற்றுக்கான செலவுகளை கட்டுப்படுத்தி பாணின் விலையை 3.50 இலேயே வைத்திருக்கப் போவதாக அறிவித்தீர்களே, அதை எவரது அனுமதி கேட்டு நிறுத்தினீர்கள்?

0 அரசியலமைப்பை மாற்றுவதாக கூறினீர்களே? அதை செய்வதில் ஏன் அக்கறை காட்டாமல் இருக்கிறீர்கள்?

0 அவசர காலச் சட்டத்தை ஒழிப்போம் என்று சொன்னீர்களே, அதை எதற்காக தொடர்ந்து நடைமுறைக்கு கொண்டு வந்தீர்கள்?

பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல், தமிழர் மீதான கெடுபிடிகள், பட்டப்பகல் படுகொலைகள் என்பவற்றை நிறுத்துவதாக பேசினீர்களே? குற்றமிழைத்த படையினர் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக சொன்னீர்களே? ஊழல்களை இல்லாதொழிப்பதாக சொன்னீர்களே.... எங்கே சொன்னதெல்லாம் என்னாச்சு?

பாவம் மக்கள்! அவர்களுக்கு எப்போதுதான் உண்மை விளங்கப்போகிறதோ?

# கிண்ணியா ஆஸபத்திரியிலிருந்த இளம் தாய் எங்கே?

கிண்ணியா அரசாங்க ஆஸ்பத்திரி கடந்த ஒக் 13 முதல் திடீரென செயலிழந்தது. பொதுமக்களுக்கு ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து ஆஸ்பத்திரியை இழுத்து மூட வேண்டியதாயிற்று.

கிண்ணியா ஆஸ்பத்திரியில் நிர்வாகச் சீர்கேடுகள் மலிந்துள்ளதாக பொதுமக்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். தகுந்த பாதுகாப்பு இன்றியும் நோயாளியின் நிலைமையை அனுசரிக்காமலும் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட பெண்ணொருவர் இடைவழியில் குழந்தை பிரசவித்த சம்பவம் ஒன்று அண்மையில் இடம் பெற்றதையடுத்து வைத்திய அதிகாரி ஜனாப் ஏ.ஜே.எம். உவைஸ் மீதும் ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் மீதும் மக்கள் விசனமடைந்தனர்.

இதனையடுத்து கடந்தவாரம் -ஆஸ்பத்திரி செயலிழந்த சம்பவத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன் நோயாளி ஒருவரின் உறவினருக்கும் வைத்திய அதிகாரிக்கும் எழுந்த வாக்குவாதம் ஒன்று அடுத்த நாள் சுமார் நான்கு மணி நேர வேலை நிறுத்தத்துக்கு இட்டுச் சென்றது. மேற்படி நபர் வைத்திய அதிகாரி உவைஸிடம் மன்னிப்பு கேட்காத வரை வேலைக்குத் திரும்ப மாட்டோம் என ஊழியர்கள் அடம்பிடிக்க ''நடந்தது அல்லாவுக்குத் தெரியும். ஆனாலும் பொதுமக்கள் நன்மை கருதி மன்னிப்புக் கேட்கிறேன்'' என்று அந்த நபர் மன்னிப்புக்கேட்க நிலைமை சீராகியது.

''நோய் நேரம் பார்த்து வருவதில்லை. உவைஸ் வைத்தியம் செய்ய மறுத்திருந்தால் கூட பரவாயில்லை. எங்களைக் கெட்ட வார்த்தைகள் பேசி துரத்த முற்பட்டதைத் தான் என்னால் பொறுத்துக் கொள்ளமுடியாமற் போய்விட்டது'' என்கிறார் முபாரக் என்ற அந்த நபர்.

ஆனால் தற்போதைய சம்பவமோ நிர்வாகத்தைச் சிக்கலான நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது. குழந்தை பிறந்ததையடுத்து ஜன்னி கண்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த குட்டிக் கரச்சி எனும் கிராமத்தைச் சேர்ந்த இளம் தாய் ஏ.எம்.தாஹிரா என்பவர் ஒக். 11 ந் திகதி இரவு தொடக்கம் காணாமற் போயுள்ளார். இவருக்கு என்ன நடந்தது என்பது இதுவரை யாருக்குமே புரியவில்லை.

ஆஸ்பத்திரிக் காவலாளி உட்பட எவருக்குமே தெரியாமல் அந்தப் பெண் மறைந்தது எப்படி என்பது புதிராகவே இருக்கிறது. பெண்ணின் கணவர் தனது மனைவியைப் பார்க்க வந்த போதுதான் விசயம் அம்பலமானது. கடலால் சூழப்பட்ட கிண்ணியா நகரை விட்டு குழந்தை பிறந்து பத்தே நாளான பெண் வெளியேறி இருக்க நியாயமில்லை என்கின்றனர் சிலர். ஆனால் கிண்ணியாவின் மறைந்திருப்பதும் சாத்தியம் என்கின்றனர் வேறு சிலர்.

அபிப்பிராயங்கள் மோசமாக ஊரே திரண்டு விட அவசரஅவசரமாக நோயாளிகள் அனைவரையும் வெளியேற்றிய நிர்வாகத்தினர் ஆஸ்பத்திரியையும் இழுத்து மூடி விட்டு தாங்களும் வெளியேறி விட்டனர். டாக்டர் உவைஸ் தனது வீட்டில் கூடத் தங்க முடியாத நிலை ஏற்படடுள்ளது.

திருகோணமலைக்கு வந்து ஊர் திரும்பிய வைத்திய அதிகாரி உவைஸ் அவர்களை ஊர்ச்சனம் வழி மறிக்க அவர் பொலிஸில் உதவியை நாட வேண்டியதாயிற்று.

மொத்தத்தில் ஒக்.13 காலை ஆரம்பித்த முடங்கல் நிலை இச்செய்தி எழுதும்வரை தொடர்கிறது. நோயாளியையும் காணோம். சமரசம் எதுவும் செய்வோரையும் காணோம். தற்போது கிண்ணியாவில் கட்டடங்கள் இருக்கின்றன. ஆஸ்பத்திரி இல்லை.

**பிந்திய செய்தி:** டாக்டர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்பட்ட சமரசத்தைத் தொடர்ந்து ஒக்.17 முதல் ஆஸ்பத்திரி மீளத் திறக்கப்பட்டுள்ளது. ஆனால் காணாமல் போன பெண்மணியைத் தான் இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லை.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உண்ணாவிரதப் போராட்டம்

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் 5 கோரிக்கைகளை முன்வைத்து, சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை ஒக் 16 திங்கட்கிழமை அன்று ஆரம்பித்துள்ளனர். சுமார் 190 மாணவர்கள் பங்குபற்றினர். இது தொடர்பான கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி ஜெயச்சந்திரன் அவர்கள் தெரிவித்த போது,

கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்கள் முடிவடைந்து விட்டன. இதுவரை எந்தவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளும் இடம் பெறவில்லை.

பல்கலைக்கழக கவுன்சிலும் இதில் அக்கறை செலுத்தவில்லை. அரசியல் பிரச்சினைகளை இதற்கான காரணமாகக் கூறுகின்றனர். ஆனால், கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளிலும் மற்றும் பல இடங்களிலும் பல அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்றுள்ளன.

பல்கலைக்கழக அபிவிருத்தி தொடர்பாக எந்தவிதமான அழுத்தத்தையும் அரசாங்கத்திற்கு கொடுக்காமல் விட்டது. மட்டுமல்ல, அபிவிருத்திக்காக வந்த பணங்களை அரசாங்கத்திற்கு மீண்டும் திருப்பியனுப்பியது இந்தக் கவுன்சில். மற்றும் பல்வேறு ஊழல் நடவடிக்கைகளும் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றுள்ளன. இவை தொடர்பாக யாருக்கும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த கவுன்சிலில் உள்ளவர்கள் ஒருபோதும் வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்திற்கு வருவதில்லை. அவர்கள் மட்டக்களப்பில் அல்லது அதிகமாக கொழும்பிலேயே கூடி தமது முடிவுகளை எடுப்பர். இவர்கள் சிபார்சு செய்த உபவேந்தர் பதவிக்கான நபர்கள், நீண்டகாலமாக இப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிபவர்கள். இவர்கள் இதுவரை பல்கலைக்கழக அபிவிருத்தியில் எந்தவிதமான அக்கறையும் காட்டவில்லை. ஆகவே அவர்களுக்கு உபவேந்தா பதவி கிடைத்தாலும் ஏதாவது அபிவிருத்திப் பணிகள் நடைபெறும் என்ற நம்பிக்கை மாணவர்களுக்கு இல்லை.

இக் காரணங்களினால், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அக்கறையற்ற கவுன்சிலைக், கலைக்கக் கோருவதுடன் அவர்கள் சிபார்சு செய்த, அவர்களைப் போன்ற உபவேந்தர் பதவிக்கான நபர்களையும் நிராகரிக்கின்றனர் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள்.

அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளாவன

1. இப்பொழுதுள்ள கவுன்சிலை கலைக்க வேண்டும்.
2. புதிய கவுன்சிலே, புதிய உபவேந்தரை தெரிவு செய்ய வேண்டும்.
3. பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற ஊழல்கள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்க வேண்டும்.
4. இந்த ஆணைக்குழுவானது 1996.ஜனவரி 31க்கு முன் தனது அறிக்கையைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.
5. துரிதகதியில் அபிவிருத்தி நடைபெற செயற்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

இக் கோரிக்கைகளை முன்வைத்து, விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கத் தொடங்கிய மாணவர்கள், முடிவு கிடைக்காததால், கடந்த பதின்மூன்றாம் திகதி அடையாள உண்ணாவிரதம் இருந்தனர். அதற்கும் முடிவு கிடைக்காததால், போராட்டம் சுழற்சி முறை உண்ணாவிரதமாக மாறியது. 16ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் 190 மாணவர்கள் பங்குபற்றினர். 19ம் திகதிவரை இப்போராட்டம் தொடரும் என தெரிவித்த மாணவர்கள், அன்றும் முடிவு கிடைக்காவிட்டால், சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

அடக்குமுறையின் இன்னொரு
ஊழித்தாண்டவமே
பத்திரிகைத் தணிக்கை!
மக்களின் தகவல் அறியும்
உரிமையைப் பாதுகாப்போம்!
~ சுதந்திர பத்திரிகையாளர் இயக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரதம ஆசிரியர்:- சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: இல.4, ஜெயரட்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. 593615